Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 10 புதன்கிழமை (26.09.2012) பக்கங்கள் 20 ஓசை – 360


விஷானி நகை மாளிகை
மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு

இல. 187, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)


சந்தேக நபரே!
04


தெரிவுக் குழுவில் இணைய அழைப்பு
06


ஒரு நிமிடம் யோசியுங்கள்
10


அத்தனையும் முத்தின கேஸ்
12


சீன கடற்படையில் இணைகிறது
18

# மக்களின் வாழ்வை வளமாக்க வாருங்கள்

## கூட்டமைப்புக்கு அமைச்சர் டக்ளஸ் அழைப்பு



(கிளிநொச்சி)

நீண்டகால அழிவு யுத்தத்தால் நொந்து போயுள்ள வடக்கு மக்களின் வாழ்வை அபிவிருத்தி மூலமாக வளமாக்கிக் கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது சுயலாப அரசியலைக் கைவிட்டு அபிவிருத்தித் திட்டங்களில் ஒத்துழைத்து செயற்படவேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கிளிநொச்சியில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தும் போதே அமைச்சர் டக்ளஸ் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

மேலும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிலும் கூட்டமைப்பினர் பங்கெடுக்க வேண்டும் என்றும் இதன் மூலமே நீண்ட காலம் நிலைத்திருக்கும் சமாதானத்தை எட்டமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் வடக்கின் பௌதீக உட்கட்டமைப்பை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் வாழ்வாதாரத்தையும் மக்களின் வாழ்வு மீதான நம்பிக்கையையும் கனவுகளையும் கட்டிவளர்த்து மக்கள் சரிசமமாக பயமின்றி கௌரவத்துடன் வாழுவதற்கு வழியேற்படுத்தப்பட வேண்டும். இதன் மூலமே அர்த்தபுஷ்டியுள்ள நிலைத்துநிற்கும் சமாதானத்தை உருவாக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் இந்த விசேட அபிவிருத்தி கூட்டத்திற்கு, யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் ஒன்றிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் என்ற வகையில் உங்களை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

19 ஆம் பக்கம் பார்க்க

## இடம்பெயர் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி

### அரசின் முயற்சிக்கு ஐ.நா. பாராட்டு

(கொழும்பு)

மெனிக் பாம் முகாம் மூடப்பட்டதை வரவேற்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. ஆயினும், இன்னும் இடம்பெயர்ந்து வாழும் மக்களையிட்டு விசனம் அடைந்துள்ளதாகவும் ஐ.நா. சபை மேலும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் மனிதாபிமான இணைப்பாளர் சபீனே நந்தி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2009 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த மோதலின் போது இடம்பெயர்ந்தோருக்காக அமைக்கப்பட்டதும் ஒரு காலத்தில் உலகின் மிகப் பெரிய முகாமாக இருந்ததுமான மெனிக் பாம் மூடப்பட்டுள்ளது.

யுத்தம் முடிந்து மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் இலங்கையில் இடம்பெயர்வு அத்தியாயத்தை முடிவுக்குக் கொண்டுவருதல் எனும் இலக்கை

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாவட்டத்தில் முதலிடம்

### புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை



(யாழ்ப்பாணம்)

இணையத்தளம் வாயிலாக நேற்று முன்தினம் பிற்பகல் நாடு பூராகவும் வெளியாகிய தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் படி யாழ். மாவட்டத்தில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை முதலாம் இடத்தையும், டொன் பொஸ்கோ வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் பிடித்துக் கொண்டது.

மாவட்ட மட்டத்தில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையிலிருந்து இந்தப் பரீட்சைக்குத் தோற்றிய 3 மாணவர்கள் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் நிலைகளைப் பெற்றுள்ளனர்.

193 புள்ளிகளைப் பெற்று பாலேந்திரன் அபிராம் மாவட்ட மட்டத்தில் முதலாம் நிலையிலும், 191 புள்ளிகளைப் பெற்று கலைச்செல்வன் கீர்த்தீகன் இரண்டாம் நிலையிலும், 190 புள்ளிகளைப் பெற்று சிறிஸ்கந்தராசா ஆரணி மூன்றாம் நிலையிலும் உள்ளனர்.

அத்துடன் இந்தப்

19 ஆம் பக்கம் பார்க்க

## நாகரிகமற்ற மனிதர்கள் யார்?

### வலி.மேற்கில் அநாகரிக விவாதம்

(சுழிபுரம்)

நாகரிகமற்ற மனிதர்கள் யார் என்று ஒருவரை பார்த்து அநாகரிமான வார்த்தைகளால் கூட்டமைப்பு உறுப்பினர்கள் விவாதம் நடத்திய சம்பவம் ஒன்று வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் நடந்தேறியிருக்கிறது.

நேற்றைய சபை அமர்வின் போது ஆளும் கட்சி உறுப்பினர்களான கனகராசன் மற்றும் உப தவிசாளரான சிவரஞ்சன் ஆகியோர் ஒருவர் மீது ஒருவர் அநாகரிக வார்த்தைகளை அள்ளிவீசினார்கள். இதனால் சபை அமர்வு களேபரமானது. ஒரு கட்டத்தில் ஆளும் கட்சி உறுப்பினர் கனகராசனை சபையிலிருந்து வெளியேற்றுவதற்கு தீர்மானம் கொண்டுவர முயற்சிக்கப்பட்டது. இதனால் சபை அமர்வில் கூச்சலும் குழப்பமும் மேலும் அதிகரித்தது.

வழக்கம்போல நேற்றுக்காலை 10.00 மணியளவில் கூட்டம் ஆரம்பமாகியதும் சென்ற மாதக் கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டது. இதில் ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கிடையே வாக்குவாதங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. இதற்கிடையில் ஆளும்தரப்பு சபை உறுப்பினர் கனகராசன் சில பிரச்சினைகள் சம்பந்தமாக

19 ஆம் பக்கம் பார்க்க

## அரச காணித் தகராறில் சிக்கித் தவிக்கிறார் தவிசாளர்

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபைத் தலைவருக்கு எதிராகக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இராணுவத்தினரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி, கலாசாலை வீதி, பால்பண்ணைக்கு அண்மித்ததாகவுள்ள ஐந்தரைப் பரப்புக் காணி அரச காணி எனவும், அது இராணுவத்தினருக்கு உரியது என்றும் நல்லூர் பிரதேச சபை அக்காணிக்கு சொந்தம் கொண்டாட முடியாது எனவும் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

19 ஆம் பக்கம் பார்க்க

# மயிலிட்டிப் பிரதேசத்தில் விரைவில் மீள்குடியேற்றம்



மயிலிட்டித்துறையில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான செயற்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வருவதாக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வடமராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

மயிலிட்டித்துறை கூட்டுறவுச் சங்க இலவச முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் முன்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் யோகராசா தலைமையில் நடைபெற்றபோது நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிகையில், சிறந்ததொரு கல்வியை வழங்கும் முன்பள்ளியாக மயிலிட்டித்துறை முன்பள்ளி திகழ்வதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். இம் முன்பள்ளி கல்விச் செயற்பாட்டிற்கு மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் அளப்பரிய சேவையாற்றி வருகின்றது. எனவே மயிலிட்டித்துறையில் இருந்து இடம்பெயர்ந்து பல்வேறு இடர்களுக்கு முகங்கொடுத்து வருகின்ற இப்பிரதேச மக்களை மீள் குடியமர்த்துவதற்கான செயற்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடமராட்சி பிரதேச அமைப்பாளரும், பருத்தித்துறைப் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன், வடமராட்சி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.தில்லைநாதன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஜெயசீலன், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசத் தலைவர் எமிலியாம்பிள்ளை மற்றும் பெற்றோர், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## சமுர்த்தி அதிகார சபையில் தகவல் தொழில்நுட்ப அலகு

(நல்லூர்)

இலங்கை சமுர்த்தி அதிகார சபை தலைமை அலுவலகத்தில் சமுர்த்தி கருத்திட்டம் மற்றும் வங்கிகளைக் கணினி மயப்படுத்தும் கருத்திட்டத்தோடு இணைந்ததாக முறையான தகவல் தொழில்நுட்ப அலகொன்று 5 சமுர்த்தி உத்தியோகத்தர்களுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது அவ் அலகில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையினை 10 ஆக உயர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத் தகவல் தொழில்நுட்ப அலகின் பொருட்டு இணைந்து கொள்ள விரும்பும் உத்தியோகத்தர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

ICDL சான்றிதழ், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆறு மாதம் அல்லது அதிலும் கூடுதலான கணினி தொழில்நுட்பம் தொடர்பான பாடநெறிக்கான சான்றிதழ், கணினி வன்பொருள் தொடர்பான அறிவு, கணினிப் பயன்பாடு தொடர்பான மூன்றுவருட அனுபவம்.

மேற்படி தகைமைகளை உடைய சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பின் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினையும் மேற்குறிப்பிட்ட தகைமைகளிற்கான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியினையும் அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன் மாவட்ட சமுர்த்தி அலுவலகம் ஊடாக விண்ணப்பங்களை அனுபபிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (26)

## வெற்றியின் இரகசியம் என்ன? சாதனை மாணவன் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் சொற்கேட்டு சக மாணவர்களும் படிப்பில் ஊக்கமெடுத்தால் என்போன்று நல்ல பெறுபேறு எடுக்கமுடியும் என்று யாழ். இந்து ஆரம்பப்பாடசாலையில் இருந்து தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட பாலேந்திரன் அபிராம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெளியாகிய தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ். மாவட்டத்தில் 193 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடததைப் பெற்றுக்கொண்ட மாணவனை, அவரது பாடசாலையில் சந்தித்து இந்த உயர் பெறுபேற்றைப் பெறக்காரணம் என்ன? என்று வினாவியபோதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அங்கு அம்மாணவன் மேலும் தெரிவிக்கையில், தனது ஆரம்பக கல்வி முதலாம் இரண்டாம் வகுப்புக்கள் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலேயே நடைபெற்றதாகவும் அதன் பின்னர் மூன்றாம் வகுப்புக்கே யாழ் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு வந்ததாகவும் தெரிவித்தார்.

இந்த மூன்று வருட காலத்தில எனது பெற்றோரும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலையத்தினர் எனது கல்வியின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்தனர். ஆசிரியர் சொற்கேட்டு சகமாணவர்களும் படிப்பில் ஊக்கமெடுத்தால் என்போன்று நல்ல பெறுபேறு எடுக்க முடியும். மாணவர்கள் சக மாணவர்களுடன் அளவளாவி சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். அதுவும் எனது வெற்றிக்குக் காரணம் என்றும் தெரிவித்த அபிராம், எதிர்காலத்தில் தான் ஒரு பொறியியலாளனாகவே வர விரும்புவதாகவும் தெரிவித்தார்.

ஏற்கனவே தனது கல்வி நடவடிக்கையின் போது ஆங்கில



சொல் எழுதல், உறுப்பெழுத்து, பாட்டு, போன்ற போட்டிப் பரீட்சைகளிலும் பங்கேற்றுப் பெறுபேறுகளையும் சான்றிதழ்களையும் பெற்றதாகவும் தொடர்ந்து யாழ். இந்துக் கல்லூரியில் படிப்பதற்கு ஆர்வமாக இருப்பதாகவும் தெரிவித்ததுடன் தான் உயர்ந்த பெறுபேற்றைப்பெற உதவி புரிந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். (பா)

## சுன்னாகம் நகர்ப்பகுதியில் போக்குவரத்து நெரிசல்கள்

சுன்னாகம் நகர்ப்பகுதி மற்றும் சந்தை சுற்றாடல் பகுதியில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசல் நிலையினைத் தவிர்ப்பதற்கு யாரும் முன்வராத நிலை குறித்து பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். குறிப்பாகச் சுன்னாகம் நகர்ப்பகுதியில் வாகனங்கள் நிறுத்தக்கூடாது என்று குறிப்பிட்டு பலகை பொருத்தப்பட்டுள்ள இடங்களில் வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் ஒரு வழிப்பாதை ஒழுங்குகள் எவையும் சாரதிகளால் கவனத்தில் எடுக்கப்படுவதில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இப்பகுதியில் தற்போது மத்திய பேருந்து நிலையம் புதிதாகக் கட்டப்பட்டு வேலைகள் நடைபெறுவதால் இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகள், தனியார் பேருந்துகள் வீதியில் தரித்து நின்றே பயணிகளை ஏற்றி இறக்கும் நிலை காணப்படுகிறது. இந்நிலையில் இதற்கான மாற்று ஏற்பாடுகள் உரிய வகையில் செய்யப்படாமையினால் நெரிசல் நிலை ஏற்பட்டுள்ளதுடன் விபத்துக்களும் இடம்பெற்று வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (148)

## கட்டாக்காலிகளின் தொல்லை; கட்டுப்படுத்த நடவடிக்கை

தென்மராட்சிப் பிரதேசத்தில் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகளால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் கட்டாக்காலிக் கால்நடைகளைப் பிடித்து ஏலத்தில் விடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அண்மையில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற விவசாயக்குழுக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கமைய சாவகச்சேரிப் பிரதேச சபையினால் தென்மராட்சி தெற்கு தனங்கிளப்புப் பகுதியில் முதற்கட்டமாக கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தென்மராட்சிப் பிரதேசத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகள் பிடிக்கப்பட்டுப் பிரதி திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். எனவே பொதுமக்கள் தமது வளர்ப்பு கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (11)

## அரசியல் கைதிகளுக்கு விடுதலை வேண்டும்

### நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் முழக்கம்

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் காலதமதமின்றி உடனடியாக விடுதலை செய்யப்படல் வேண்டும் என நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாளருமான அ.ரவீந்திரதாஸன் தெரிவிததுள்ளார். நல்லூர் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த 30 வருடகாலத்தில் தமிழ் மக்கள் சொல்லொனாத் துயரங்களை அனுபவித்தார்கள். யுத்தம் பல உயிர்களைக் காவு கொண்டது.

நீண்டகாலமாக அரசியல் கைதிகள் எதுவித விசாரணையுமின்றித் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களின் விடுதலையில் அதீத அக்கறையுடன் அரசியல்வாதிகள் செயற்படுவதின் மூலம் இவர்கள் விடுதலை செய்யப்படுவதைத் துரிதபபடுத்த முடியும். இந்த அரசியல் கைதிகள் மிக விரைவில் விடுதலை செய்யப்படல் ணேடும் என அவர் மேலும் தெரிவித்தார். (137)

## இந்த வடிவத்திலும் ஜீவகாருண்யம்





(85)

சிறு விளம்பரம்

விற்பனைக்கு

29 - XXXX தொடரிலக்கமுடைய ROSA MITSUBISHI BUS விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:
0778153187 (C/2020)

# டெங்கு நுளம்பை முற்றாக ஒழிக்க பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்

## - பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி -

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட பல பிரதேசங்களில் டெங்கு நோய் அதிகமாக உள்ளமையால் பருத்தித்துறை பிரதேச சபையும், சுகாதார வைத்திய அதிகாரிகளும் சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு பொலிஸாருடன் இணைந்து அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி எஸ். சிவபாலன் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை பிரதேச சபையின் ஏற்பாட்டில் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு பிரதேச சபையின் நூல்நிலையத்தில் சபை நிர்வாக உறுப்பினர் ரி. தவயோகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதில் வளவாளராகக் கலந்து கொண்டு விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நுளம்பினால் மலேரியா, டெங்கு, யானைக்கால் போன்ற நோய்த்தாக்கங்கள் பரவுகின்றன. இநநுளம்புக்கடியினால் நான்கு வைரஸ் கிருமிகள் பரவுகின்றது.

உங்கள் யாருக்காவது பின்தலைறோ, காய்ச்சல், முறிக்கும் உடல்நிலை, காய்ச்சலுடனான செந்நிறப்பருக்கள், குருதிப்பெருக்குடனான காய்ச்சல் அதாவது டெங்கு நோய்க் காய்ச்சல் முற்றிய நிலையில் கண், காது, மூக்கினால் இரத்தம் வெளியேறல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அந்த நோயாளியை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று இரத்தம் சோதிக்க வேண்டும். அல்லது அது தவறின் அந்த நோயாளிக்கு உயிராபத்து ஏற்பட வாய்ப்புள்ளது.

இதனைத்தடுக்கும் வகையில் டெங்கு நோயிலிருந்து எம்மை நாமே பாதுகாப்புடன் எமது சமூகம் சார்ந்தவர்களையும் பாதுகாக்க முன் ஆயத்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

அந்நிலையில் ஒவ்வொருவரும் தத்தம் வீடுகளில் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை இனங்கண்டு அவற்றை அகற்ற வேண்டும். குறிப்பாக பொலித்தீன்பை, மரப்பொந்து, போத்தல் வகைகள், ரயர், சிரட்டைகள், கோம்பைகள் என்பவனவற்றிலேயே நுளம்புகள அதிகம் பெருகுகின்றன.

எனவேதான் சுகாதார பிரிவினரும், பொலிஸாரும் இணைந்து வீடு வீடாகச் சென்று நுளம்பு பெருகும் இடங்களை இனங்கண்டு முதலில் டெங்கு நோய் தொடர்பான விளக்கங்களையும், துண்டுப்பிரசுரங்களையும் வழங்கி மக்களுக்கு தெரியப்படுத்தி வருவதுடன், அதனை மீறிச்செயற்படுவோர் மீது சட்டநடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.


இக்கருத்தரங்கில் பொலிஸ உத்தியோகத்தர் இராசையா சுகுமார், ஆயுர்வேத வைத்திய அதிகாரி சசிவதனி மற்றும் பாலர் பாடசாலை ஆசிரியர்கள், நூலக வாசகர் வட்டத்தினர், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (116)

## தடாகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியில் பராமரிப்பு வேலைக்காக மூடப்பட்டிருந்த நீச்சல்தடாகம் இன்று புதன்கிழமை தொடக்கம் மீண்டும் பயன்பாட்டுக்காகத் திறக்கப்படவுள்ளது.

## கருணை மிகு கண்ணா!



அலைகடல் அருகோரம் ; வேண்டுவர்க்கு
அருள் பொழியும் மாதவனே ; சுமை
மலை போல துயர் எழுமின் ; அதை
மறைத்திடுமே யுன்பார்வை ; கற்
சிலையான உந்தனுக்குள் ; மிகு
கருணையுண்டு! கனிவு உண்டு ; இந்
நிலையில்லா வாழ்விலென்றும் ; தருவாய்
நிம்மதி நமக்கு என்றும்!

- பிரியா பரந்தாமன்,
கைவேலி.



சமூக சேவைகள் அமைச்சினால் 70 வயதை அடைந்த வறியமுதியோருக்கு மாதாந்தம் 1000 ரூபா வழங்கும் திட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அங்குரார்ப்பண வைபவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா கலந்து கொண்டு திட்டத்தை ஆரம்பித்து வைப்பதனைக் காணலாம்.

# பாடசாலை மாணவர்களுக்கு உளநல சமூக ஆலோசனை

(அச்சுவேலி)

பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கான உளநலசமூக இடையீட்டு ஆதரவு மற்றும் வழிகாட்டல் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் இச் செயற்றிட்டங்களை நடாத்துவதற்காக ஒவ்வொரு பாடசாலைக்கும் தலா 10,000 ரூபா வீதம் பணம் விடுவிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமாக கல்விப் பொது தராதர உயர்தர மாணவர்களுக்கு சகபாடி ஆதரவுக்குழுக்கலந்துரையாடல், உண்மைகளை கையாள்வதற்கான திறன் விருத்திப் பயிற்சிகள், நேர்ப்பாங்கான நடத்தைகளுக்கான முகாமைப் பயிற்சி, காலை ஒன்றுகூடலில் உளநலம் தொடர்பான ஒரு நற்சிந்தனை மற்றும் யோகா அல்லது அக அமைதிச் செயற்பாடுகளை வழங்குதல், மாணவர் பெற்றோர் மற்றும் சமூகத்துக்கான விழிப்புணர்வு தொடர்பான ஒரு கலைநிகழ்வு, கண்காட்சி மற்றும் சஞ்சிகைஆக்கம் ஆகியவற்றினை ஒழுங்குபடுத்தி நடாத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், ஆரம்ப மற்றும் இடைநிலைப் பார்டசாலை மாணவர்களுக்கான ஆக்கச் செயற்பாடுகளும், காட்சிப்படுத்தலும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்டதாகவும் அவை வழங்கப்பட்ட தலைப்புக்களுக்குப் பொருத்தமானவையாகவும் அமைந்திருத்தல் வேண்டும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்காட்டிய செயற்பாடுகள் யாவும் செப்ரெம்பர் மாதத்தின் இரண்டாம் வாரத்திலிருந்து ஒக்ரோபர் 10 ஆம் திகதிக்கு முன்னர் நடாத்தி முடிகப்படுவதுடன், அது தொடர்பாக கோட்ட மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கூடாக மாகாணக்கல்வித்திணைக்களத்திற்கு ஒலி, ஒளிப்படச் சான்றுகளுடன் அறிக்கை கையளிக்கப்பட வேண்டும் எனவும் பாடசாலை அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (03)

# வடமராட்சி வலயமட்ட ரீதியான திருக்குறள் போட்டி முடிவுகள்

நேற்றைய தொடர்ச்சி.....

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயமட்டத்தினால் வடமராட்சி ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற வலயமட்ட விரைவு கணிதம் மற்றும் திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர் பெயர் விபரம் பின்வருமாறு.

திருக்குறள் போட்டி.

தரம் 1,

பி.பிரவீனா (யா/இமையாணன் அ.த.க. பாடசாலை), சி.லாசகன் (யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியால்யம்), சி.கம்ஷிகா (யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்),

தரம் 2

பு.துளசிகா (யா/கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயம்), ஜெ.தமிழினி (யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை), ஜெ.தனுஸ்கா (யா/ கரவெட்டி கிழக்கு அ.த.க.பாடசாலை)

தரம் 3

சொ.கோவர்த்தணி (யா/கரணவாய் வேதாரணியேஸ்வரா வித்தியாலயம்), இ.சாய் சந்தோஷ் (யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்), கு.சஞ்சிகா (யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை)

தரம் 4

ம.சர்மிகா(யா/கற்கோவலம் மெ.மி.த.க. பாடசாலை), பு.ரிலக்சியா (யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), வி.காவியா (யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை),

தரம் 5

இ.சுஜானி(யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), ஆ.தர்சினி (யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை), செ.தக்ஷனா (யா/வட இந்து ஆரம்பப்பாடசாலை), (முற்றும்.) (109)



யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூாயில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது கல்லூரியின் முன்னாள் மூத்த தமிழ் ஆசிரியர் சுந்தரம் வைகுந்தநாதனுக்கு, அவர் ஆற்றிய சேவைக்காக கல்லூரிச் சமூகத்தினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதைக் காணலாம். (03)

தன்னைக் கீழே தள்ளிய குதிரையைத்தான்
சவாரி செய்ய மனிதன் விரும்புவான் - ஸ்காட்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## எப்போது நாம் வாழப்போகிறோம்?

ஏனைய சமூகத்தவர்களை நம்மைவிட மட்டமானவர்களாக நினைப்பதும், இழித்து ஒதுக்குதலும் நமது மரபாயிருந்துவரும் பழக்கங்களிலொன்றாக இன்றும் தொடர்கிறது. வடக்கத்தியான், மோட்டுச் சீனா, தொப்பி பிரட்டி, காப்பிலி, பறங்கி, பாம்புதின்னி என்பதெல்லாம் ஏனைய சமூகத்தைச் சேர்ந்தவர்களை விளிப்பதற்காக நாம் தமிழில் வைத்திருக்கும் வார்த்தைகள்.

இதிலுள்ள பாசிஸ மனோநிலையை இன்னும் உணராதவர்களாகவே நம்மில் பலர் இன்றும் இதே பாணியில் பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டும் நினைத்துக்கொண்டும் இருக்கிறார்கள். அதையே தமிழ்ப் பெருமையாகவும் எண்ணிக்கொள்ளும் கடந்தகாலத்தவர்களாக மாறாமனிதர்களாய் இன்னுமிருக்கிறோம்.

இன்னும் ஒருபடி மேலே போய், அந்த சமூகங்கள் நாம் நினைத்த மாதிரி நடக்கவில்லை என்றால், மிரட்டுவதும் சாபமிடுவதும் குதிப்பதுமாக மிகக் கேலிக்கிடமாகவும் நடந்துகொள்கிறோம். நம்மை நாமே உயர்வாய் நினைத்துக்கொண்டு பிறரை விலக்குதல் மிரட்டுதல் ஒழித்துவிடுதல் என்ற எண்ணப்பாங்கிலேயே இன்னமும் நமது ஊடகங்களும் கட்டுரையாளர்களும் செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

சிங்கள இனவாதிகளை விட தமிழ் இனவாதிகள் ஆபத்தானவர்களாகவும் மோசமானவர்களாகவும் இருக்கிறார்கள் என்று முஸ்லிம் சமூகத்தவர் குற்றம் சாட்டிவருவது இதனால்தான். அடிப்படையில் தமிழ் ஆதிக்கக் குணம் என்பது, இந்தத்தீவில் அதிகாரங்களை அதிகளவில் கொண்டிருக்கக்கூடிய பெரும்பான்மைச் சமூகத்தை விட ஒப்பீட்டளவில் மிகையானது என்பதை உணர்ந்தே முஸ்லிம்கள் செயற்பட்டு வருகிறார்கள்.

வடக்கு கிழக்குத் தமிழ்த் தலைமைகளோடு சேர்ந்து ஒற்றுமையைக் காண்பிப்பதைவிட சிங்களக் கட்சிகளோடு இணைவதையே முஸ்லிம் கட்சிகளும் மலையகத் தமிழ்க் கட்சிகளும் தேர்ந்துவருவது இதனால்தான். இதை உணர்ந்துகொள்ளக் கூட முடியாத மமதை மிக்கவர்களாகவே நம்மில் பலர் பேசியும் எழுதியும் வருகிறோம்.

தமிழர்களின் அரசியல் முன்னெடுப்புக்களை தமிழ் பேசும் மக்களின் அரசியலாக முன்னெடுப்பதற்கான ஒரு அரிய வாய்ப்பு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமினது முடிவால் கைநழுவிப் போயிருக்கிறது என்று எழுதுகிறார் ஒரு பிரபல தமிழ் அரசியல் கட்டுரையாளர். ஹக்கீம் தனது முடிவுக்கான விளைவுகளை விரைவில் அனுபவிப்பார் என சம்பந்தனோடு இணைந்து சாபமும் இடுகின்றார்.

தமிழ்த்தலைமையின் அரசியல் முன்னெடுப்பும் முஸ்லிம்களின் அரசியல் முன்னெடுப்பும் வேறுவேறானவை. உங்களது இணக்கப்பாட்டு அரசியலைக் கைவிட்டு எங்களது எதிர்ப்பு அரசியலோடு இணைந்து உங்கள் சமூகத்தையும் கொஞ்சம் அழியுங்கள் என்று கேட்பதுதான் இது. என்னவொரு தமிழ்ச்சுயநலம் இது? 60 வருட எதிர்ப்பு அரசியலால் நாங்கள் சாதித்துக் கொட்டியவற்றைத் தெரிந்து கொண்டுதான் அவர்களது புத்திசாலித்தன முடிவுக்குச் சென்றார்கள் அஷ்ரபும் தொண்டமானும்.

இதுமட்டுமல்ல, முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் சேர்ந்ததன் மூலம், தமிழ்த்தரப்பு அவர்களுக்குச் செய்த துரோகத்திற்குச் சமமான துரோகத்தைச் செய்துவிட்டது; இனி தமிழ்–முஸ்லிம் உறவில், தமிழர் தரப்பை நோக்கி விரல் நீட்டும் தகுதிப்பாடு எவருக்கும் இருக்கப் போவதில்லை என்றும் தமிழ்க் கொழுப்பை வழியவிடுகிறார் கட்டுரையாளர்.

அத்தோடு, "முஸ்லிம் சமூகம் விடுதலைப்புலிகளின் மோசமான நடவடிக்கைகளாலும், முஸ்லிம் காடையர்கள் கிழக்கில், குறிப்பாக மட்டக்களப்பில் தமிழ் மக்கள் மீது புரிந்த அட்டூழியங்களாலும், தமிழ்–முஸ்லிம் வெகுசனங்கள் மத்தியில் ஒரு வெறுப்பும் விரிசலும் ஏற்பட்டிருந்தது" என்றும் எழுதுகிறார். கவனியுங்கள், முஸ்லிம்களுக்கு மட்டும் காடையர்கள் என்று அடைமொழி சேர்க்கிறார்!

நம்மில் பலர் இனவாதத்தன்மை மாறாமலேயே சிந்திக்கிறோம்; எழுதுகிறோம். அதுபற்றிய புரிதலும் குற்றவுணர்வும் நம்மிடமில்லை. ம்... எப்போது நாகரிகமடைந்த மனித சமுதாயங்களில் ஒன்று என நாமும் ஆகப்போகிறோம்?

- ஆசிரியர்

# அமைச்சர் றிசாத் சந்தேகநபர்
# மன்னார் நீதிமன்றம் அறிவிப்பு

(மன்னார்)

மன்னார் நீதவானை தொலைபேசியில் அச்சுறுத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் அமைச்சர் றிசாட் பதியுதின் தொடர்ந்தும் சந்தேகநபர் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மன்னார் நீதிமன்றத்தில் குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட நீதவான் ரங்கண திஸாநாயக்க நேற்று முன்தினம் அறிவித்தார்.

அமைச்சர் றிசாட் பதியுதின் சட்டத்தரணிகள் முன்வைத்த வேண்டுகோளை நிராகரித்த போதே நீதவான் இதனைக் சுட்டிக்காட்டினார்.

மன்னார் நீதிமன்றத்தில் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போது அமைச்சர் றிசாட் பதியுதின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான அடிப்படை ஆட்சேபனையை வெளியிட்டனர்.

தமது தரப்பினர் இந்த வழக்கில் தவறான முறையில் பெயரிடப்பட்டுள்ளமையால் மீண்டும் ஆரம்பத்தில் இருந்து விசாரணைகளை ஆரம்பிக்குமாறு றிசாட் பதியுதின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் குறிப்பிட்டனர். ஆரம்ப விசாரணைகளின் பின்னர், றிசாட் பதியுதின் இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தே நபராக பெயரிடப்பட்டுள்ளதாக நீதவான் குறிப்பிட்டார்.

இதேவேளை, மன்னார் நீதிமன்றக் கட்டடம் மீது தாக்குதல் மேற்கொண்டு உடமைகளுக்குச் சேதம் விளைவித்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பிலான முறைப்பாடும் நீதவான் ரங்கன திஸாநாயக்கவினால் இதன் போது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 43 சந்தேகநபர்களுக்கும் பிணை வழங்குவதனை நிராகரித்த நீதவான் அவர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். அதன்படி இந்த இரண்டு முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளும் ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டன.

இதேவேளை, இந்த விசாரணைகளை கண்காணிப்பதற்காக சர்வதேச நாடாளுமன்ற சங்கத்தின் மனித உரிமைகள் தொடர்பிலான விசேட பிரதிநிதியும், அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த சட்டத்தரணியுமான மார்க் ரொவெல் உள்ளிட்ட பிரதிநிதிகள் சிலரும் நீதிமன்றத்திற்கு வருகை தந்திருந்தனர்.

# இலங்கையின் அபிவிருத்தி
# நோர்வே பூரண ஒத்துழைப்பு

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்திக்காக பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என நோர்வே அரசாங்கம் அறிவித்துள்ளது. இலங்கை - நோர்வே வர்த்தகப் பிரமுகர்களுக்கு இடையில் விசேட சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கைக்கான நோர்வேயின் புதிய தூதுவர் க்ரேட் ஹோசென் தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் அபிவிருத்திக்காக முழு அளவில் ஒத்துழைப்பு வழங்கப்படும்.

குறிப்பாக மீன்பிடித்துறை மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவற்றுக்கு கூடுதலான ஒத்துழைப்பு வழங்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மீன்பிடித் துறையை மேம்படுத்துவதற்காக நோர்வே வழங்கிய ஒத்துழைப்பு வரவேற்கப்பட வேண்டியது என அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# வெடிவிபத்தில் காயமடைந்த சிறுவன்
# கொழும்பு வைத்தியசாலையில் அனுமதி

(மன்னார்)

மன்னாரில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த சிறுவனொருவன் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாற்றப்பட்டுள்ளதாக மன்னார் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் தெரிவித்தார்.

மன்னார், தலைமன்னாரின் பியர் பகுதியிலுள்ள கடற்கரைப் பகுதிக்கு அண்மித்த காட்டுப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தின்போது 3 சிறுவர்கள் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. இப்பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த இச்சிறுவர்கள் விளையாட்டு பொருளென நினைத்து வெடிபொருளினை எடுத்து விளையாடியபோது அது வெடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தலைமன்னார் பகுதியைச் சேர்ந்தவர்களான பிரபு (வயது- 14), கமாஸ் (வயது - 14), சாள்ஸ் அன்ரனி (வயது - 15) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இவர்களில் கமாஸ் (வயது 14) என்ற சிறுவனே மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ஏனைய 2 சிறுவர்களும் தொடர்ந்து மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# மனித உரிமை ஆணைக்குழுவுடன்
# சிவில் பாதுகாப்புக் குழுவினர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் வடமாகாண ஆணையாளருக்கும் சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றது. பொலிஸ் தரப்பினரும் கலந்துகொண்ட இந்தச் சந்திப்பு யாழ் மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் வடமாகாண ஆணையாளர் இ.ஆனந்தராஜா, யாழ் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிறிகுகனேசன், யாழ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா, இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் கனகராஜ் மற்றும் சிவில் பாதுகாப்பு பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்டத்தில் மனித உரிமைகள் தொடர்பாக முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாக இங்கு கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக சிறுவர், பெண்கள் ஆகியோருக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கூடிய கவனமெடுக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாறான சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

மனித உரிமை மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அதனைத் தடுப்பதற்கும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமென சிவில் பாதுகாப்புக் குழுவில் இருந்து 13 பேர் அடங்கிய உப குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதில் 9 ஆண்களும் 4 பெண்களும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதன் முதலாவது அங்கமாகச் செயற்படுபவர்கள் பொலிஸார் என்பதைச் சுட்டிக்காட்டி, பொலிஸார் பொதுமக்களுடன் நெருங்கிய உறவைப் பேணுகின்ற போது நீதியை நிலைநாட்ட முடியும். அத்துடன் தமிழ் பிரதேசத்தில் கடமையாற்றும் பொலிஸார் தமிழ் புலமையை வளர்க்க வேண்டும் என்றும் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டமைப்புக்குள் வளரும் முரண்பாடுகள்

- த. கடலவன்

**கூட்டமைப்பின் கொள்கை வகுப்பாளராகவும், கூட்டமைப்பின் முக்கிய ஆலோசகராகவும் தன்னை வெளிப்படுத்தி வரும் இவர், கூட்டமைப்பை இரண்டாக உடையவிடாமல் இதுவரை காலமும் பாதுகாத்தது தான் எனவும், சம்பந்தனை இனியும் சும்மாவிடக்கூடாது கூட்டமைப்பின் தலைமைப்பொறுப்பை சுரேசிடம் தான் ஒப்படைத்தே தீருவேன் எனவும் இதற்குரிய முழுமையான பணியில் தான் இறங்கியுள்ளதாகவும், கூட்டமைப்பின் நிர்வாகக் குழுவில் தான் முக்கிய பதவியில் இருப்பேன் எனவும் தம்பட்டம் அடித்து வருகிறார்.**

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கிழக்கு மாகாணத் தேர்தலில் எதிர்பார்த்த இலக்கை அடையமுடியாத சூழ்நிலையில் மண்கவ்வியது புதிய விடயம் அல்ல. ஏற்கனவே தினமுரசின் இப்பத்தியில் நான் குறிப்பிட்டது போன்று கிழக்கு மாகாணத்தில் கூட்டமைப்புடன் சந்தர்ப்பவாத அரசியலுக்கு முஸ்லிம் கட்சியினர் செல்லவில்லை என்பதற்காக தமிழ் சமூகம் முஸ்லிம்களை தமிழின விரோதிகள் போன்று ஒரு போதுமே கணிப்பிடக்கூடாது. ஏனெனில் முஸ்லிம் சமூகத்திற்கும், தமிழ் சமூகத்திற்கும் இடையிலான உறவு என்பது தொடர் உறவாகவே இருக்கப்போகிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சந்தர்ப்பவாத அரசியல் போக்குத்தான் முஸ்லிம் கட்சிகள் அரசுடன் இணைவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

உண்மையில் ஒரு சிறு பான்மைக் கட்சியாக முஸ்லிம்கள் இருந்தாலும் அவர்கள் தங்களது சமயோசித அரசியல் நகர்வுகள் காரண-மாக இன்றைய அரசியல் சூழலில் அரசியல் அரங்கில் முத்திரை பதித்து வருகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களும் சிங்களக் கட்சிகளும் கூடுதலான ஆசனங்களை பெற்றிருந்தபோதிலும் தமிழரோ அல்லது சிங்களவரோ ஒரு முதல்வர் ஆவதற்கான வாய்ப்பைக்கூடப் பெறவில்லை என்பது இங்கு முக்கியமானது. கிழக்குத் தேர்தலின் பின்னர் முஸ்லிம் ஒருவரே முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதை இனவாதத்திற்கு விழுந்த அடி என்றும் குறிப்பிடமுடியும். குறிப்பாக தமிழினவாதத்திற்கும் சிங்கள இனவாதத்திற்கும் விழுந்த பேரிடியாகவே இதனைக் கணிப்பிடமுடியும்.

நிலைமைகள் இவ்வாறு இருக்கையில் கிழக்கு மாகாணத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நினைத்தது எதுவும் நடக்காத சூழ்நிலையில் கடுமையாகக் குழப்பம் அடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. குறிப்பாக தமிழ் அரசுக் கட்சி சார்பில் மாகாணசபைத் தேர்தலில் சம்பந்தனால் களம் இறக்கப்பட்ட எவருமே தேர்தலில் வெல்லவில்லை என்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் ரெலோ போன்ற கட்சிகளிலிருந்து நிறுத்தப்பட்டவர்களே தேர்தலில் வெற்றி பெற்றதாகவும் எனவே கூட்டமைப்பில் சம்பந்தன் அணியினரின் செல்வாக்கு குறைந்து வருவதனால் வடமாகாண சபைத் தேர்தலில் தனியாகக் களம் இறங்குவது பற்றி சிவசக்தி ஆனந்தன் மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் தனிப்பட்ட முறையில் ஆலோசனை நடத்தியதாகவும், இதற்கு வவுனியாவில் தற்போது வசித்துவரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கிய பிரமுகரான சண் மாஸ்ரர் என்பவர் சுரேசின் ஊதுகுழலாக செயற்படுவதாகவும் கூறப்படுகிறது.

குறித்த நபர் கூட்டமைப்பில் தன்னை ஓர் முக்கிய புள்ளியென காட்டியவாறு பகலில் கூட்டமைப்புடனும் இரவில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனும் தொடர்புகளை பேணி வருகிறார். கடந்த முறை இடம்பெற்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தலின்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்காக வவுனியாவில் முன்னின்று உழைத்த ஒரு சிலரில் இவரும் ஒருவர். இவர் சம்பந்தனுடன் உரையாடும் பொழுது தன்னை சம்பந்தனின் ஆளெனவும் பின்னர் செல்வம் அடைக்கலநாதனுடன் உரையாடும் பொழுது தன்னை செல்வம் அடைக்கலநாதனின் ஆளெனவும் வெளிக்காட்டத் தவறுவதில்லை. ஆனால் இவருடைய கடந்த கால வரலாறுகளை அறிந்த எவருமே இவருடன் உறவைப் பேண முனைவதில்லை.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் வன்னிப் பகுதியில் வசித்து வந்த இவர் வாடகைக்கு ஒருவரின் வீட்டை எடுத்துவிட்டு குறித்த வீட்டுக்காரருக்கு வாடகைப் பணமும் கொடுக்காமல் அந்த வீட்டை, தான் வாடகைக்கு விட்டு தனது வீடெனக் கூறி வாடகைப் பணத்தைப் பெற்றதை விசுவமடுவில் உள்ள சமாதான நீதவான் ஒருவர் அடிக்கடி சுவாரஸ்யமாக இக்கதையை கூறுவார். குறித்த நபர் முன்னர் தன்னை விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மானுக்கு, தான் ஆலோசனை வழங்கி வந்ததாகவும் கூறி தன்னை பிரபல்யப்படுத்தத் தவறுவதில்லை.

இவரின் பொய் புரட்டுகளை நம்பி தற்போது சிவசக்தி ஆனந்தன் இவரை தனது ஆலோசகராகப் பயன்படுத்தி மாதாந்த ஊதியத்தையும் வழங்கி வருகிறார். ஆனால் இவர் வவுனியாவிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடமிருந்தும் மாதாந்தப் பகுதிக் கொடுப்பனவு ஒன்றைப் பெறுவதாகக் கூறப்படுகின்ற போதிலும், இதனை சரியாக உறுதிப்படுத்த முடியவில்லை. இந்த நபரே தற்போது கூட்டமைப்பின் கொள்கை வகுப்பாளராகவும், கூட்டமைப்பின் முக்கிய ஆலோசகராகவும் தன்னை வெளிப்படுத்தி வருகின்றார். கூட்டமைப்பை இரண்டாக உடையவிடாமல் இதுவரை காலமும் பாதுகாத்தது தான் எனவும், சம்பந்தனை இனியும் சும்மா விடக்கூடாது கூட்டமைப்பின் தலைமைப்பொறுப்பை சுரேசிடம் தான் ஒப்படைத்தே தீருவேன் எனவும் இதற்குரிய முழுமையான பணி யில் தான் இறங்கியுள்ளதாகவும், கூட்டமைப்பின் நிர்வாகக் குழுவில் தான் முக்கிய பதவியில் இருப்பேன் எனவும் தம்பட்டம் அடித்து வருகிறார்.


வவுனியாவிலுள்ள சிரேஷ்ட ஆசிரியர் ஒருவர் அண்மையில் கருத்து வெளியிடுகையில், கூட்டமைப்பின் பழுத்த தலைகள் மற்றும் முக்கிய தலைகள் என்று தங்களைக் கூறுபவர்கள் தற்பொழுது ஒரு பூச்சியத்திற்குப் பின்னால் திரிவதாகவும் இவர்களின் அரசியலும் பூச்சியத்தில்தான் முடியும் எனவும் குறிப்பிட்டார். இக்கூற்றானது சிவசக்தி ஆனந்தனிற்கு கூறப்பட்ட கூற்றாகவே பார்க்கப்படவேண்டும்.

ஏனெனில் செல்வம் அடைக்கல நாதனைப் பொறுத்தவரையில் பொறுமையுடன் இருந்து இரகசியமாக அரசுடனும் உறவாடிக்கொண்டு கூட்டமைப்பின் இரண்டு பக்கத்திற்கும் தலையாட்டியவாறு நல்ல பிள்ளை போன்று நடந்துவருகிறார். இதனால் யார் பலமாக இருக்கிறார்களோ யாரிடமிருந்து கூடுதலான நன்மைகளைப் பெறமுடியுமோ அவர்களுடன் தேர்தலில் கூட்டுச் சேருவதே செல்வத்தின் திட்டமாகும். ஆனால் சுரேசைப் பொறுத்தவரையில் சுரேஸ் அணியை கூட்டமைப்பிலிருந்து முழுமையாக ஓரம் கட்டும் நடவடிக்கையில் தற்போது சரவணபவானும், சிறிதரனும் முழுமையாகக் களம் இறங்கியுள்ளனர். சம்பந்தனிற்கும் மாவைக்கும் அடிக்கடி சுரேசை ஓரம்கட்டும் நடவடிக்கையை துரிதப் படுத்துமாறு தொல்லை கொடுத்து வருகின்றனர்.

இருந்தபோதிலும் சம்பந்தன் அவசரமான முடிவுகளை எடுக்காமல் மிகவும் நிதானமாக சுரேசை ஓரம்கட்டும் செயற்பாட்டில் களம் இறங்கியுள்ளார். இதேவேளை சுரேஸ் அணியும், சித்தார்த்தன், ஆனந்தசங்கரி, உதயராஜா போன்றோரை ஒன்றிணைத்து புதிய கூட்டமைப்பொன்றை உருவாக்கும் முயற்சியில் தீவிரமாக களம் இறங்கியுள்ளார். இக்கூட்டணி பற்றி செல்வத்திடம் ஆலோசித்த பொழுது செல்வம் அடைக்கலநாதன் இவ் விடயம் தொடர்பில் தமது கட்சியின் மத்திய குழுவுடன் கூடி முடிவெடுப்பதாக சுரேசைச் சமாளித்து வருகிறார்.

ஒட்டுமொத்தத்தில் கூட்டமைப்பிற்குள் ஏற்பட்டுள்ள இப்பிளவானது அடுத்த கட்டமாக கட்சியை உடனடியாகப் பதிவுசெய்ய வேண்டுமென்ற தோரணையை சுரேஸ் அணியினர் ஏற்படுத்தி வருகின்றனர். அதாவது கூட்டமைப்பாகக் கட்சியைப் பதிவுசெய்வதற்கு சம்பந்தன் ஒருபோதுமே முன்வரமாட்டார் என்பது சுரேசிற்குத் தெரியும் எனவே பதிவு ஒன்றைக் காரணம் காட்டி கூட்டமைப்பில் இருந்து பிரிவதன் மூலம் தங்களது பக்கம் நியாயம் இருப்பதாக சுரேஸ் தரப்பு வாதிடுவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

ஆனால் இவ்விடயத்தில் தமிழ் மக்களிடம் அடுத்த சாட்டுப் போக்கைச் சொல்லி சமாளிக்க கூட்டமைப்பின் கிழட்டுச் சிங்கங்களும், தயாராகவே இருக்கின்றனர். ஒட்டு மொத்தத்தில் கிழக்கு மாகாணத் தேர்தலானது கூட்டமைப்பிற்குள் வலுவான பிளவை ஏற்படுத்தும் என்பதை எதிர்கால அரசியல் அரங்கில் வெளிப் படையாகக் காணமுடியும்.



# நிபந்தனைகளை விதிக்காமல் தெரிவுக்குழுவில் இணையுங்கள்

## கூட்டமைப்பை அழைக்கிறார் பசில்



(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைந்து தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தற்போது சிறந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எனவே, நிபந்தனைகளை விதிக்காமல் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் கலந்துகொள்ள வேண்டும். அதேபோன்று அரசாங்கமும் எந்த நிபந்தனைகளையும் விதிக்காது என்று அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

எந்தவொரு தரப்பும் கூறுவதற்காக வடமாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்திவிட முடியாது. வடக்கில் தேர்தலை நடத்துவதற்கான சூழல் அடுத்தவருடம் ஏற்பட்டவுடன் தேர்தல் நடததப்படும் என்றும் அவர் குறிப்பிடடார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு விவகாரம் மற்றும் வடமாகாண சபைத் தேர்தல் விடயம் என்பவை குறிதது விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்த விடயம் குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது ஆளும் கட்சியினால் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துகொண்டு தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் செயற்பாட்டில் ஈடுபடவேண்டும்.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தபோது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார். எனவே தற்போதைய சூழலைப் பயன்படுத்தி பிரச்சினைக்குத் தர்வைக் காண பதற்கு தமிழ்த் தேசியக கூட்டமைப்பு முன் வரவேண்டும்.

வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சூழலை 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்துககுள் அரசாங்கம் வடக்கில் ஏற்படுத்தி விடும். அதன் பின்னர் தேர்தல் ஆணையாளர் வடக்கல் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பார் என்றார்.

## புதிய கடற்படை தளபதி நியமனம்

(கொழும்பு)

இலங்கையின் புதிய கடற்படைத் தளபதியாக ஜயனாத் சிரிகுமார கொலம்பகே நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது கிழக்கு கடற்படைக் கட்டளைத் தளபதியாக ரியர் அட்மிர ல் கொலம்பகே கடமையாற்றி வருகின்றார்.

ரியர் அட்மிரல் கொலம்பகேவிற்கு வைஸ் அட்மிரலாக பதவி உயர் வழங்கப்படவுள்ளதாகவும், அதன் பின்னர் இன்று கடற்படைத் தளபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொள்வார் என்வும் தெரிவிக்கப்படுகிறது.

1978 ஆம் ஆண்டு கெடட் அதிகாரியாக கொலம்பே கடற்படையில் இணைநது கொண்டார். கடற்புலிகளுக்கு எதிராக நடைபெற்ற மோதல்களில் கொலம்பகே பல்வேறு வெற்றிகளை ஈட்டியுள்ளார்.

## நாடு திரும்பிய இலங்கையருக்கு அவுஸ்ரேலிய அரசு நிதியுதவி

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவிற்கு சட்டவிரோதமாகச் சென்று தமது அரசியல் அந்தஸ்து கோரிக்கையினை கைவிட்ட நிலையில், நாடு திரும்பியுள்ள 18 இலங்கையர்களுக்கும் அவுஸ்ரேலிய அரசாங்கம் நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

அவர்கள் இலங்கையில் தமது வாழ்வாதாரத்தை மீள ஸ்தாபிக்கும் நோக்கில் அவர்களுக்காக 60 ஆயிரம் டொலர்கள் வரையில் வழங்க அவுஸ்ரேலியா முன்வந்துள்ளது. இதனை சர்வதேச குடிவரவு அமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

தாயகம் திரும்பியவர்களில் 14 சிங்களவர்கள் ஒரு மு[illegible]ம் மற்றும் மூன்று தமிழர்கள் எனத் தெரிவித்துள்ள அவுஸ்ரேலிய அரசாங்கம், ஒவ்வொருவருக்கும் தலா மூவாயிரத்து 300 டொலர்கள வரை செலவிடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று தற்போது, கிறிஸ்மஸ் தீவில் அகதி அந்தஸ்து கோரிய நிலையில் உள்ள இலங்கையர்கள், தாயகம் திரும்பும் பட்சத்தில் நிதியுதவி அவுஸ்ரேலிய அரசாங்கத்தினால் வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை கொழும்பை வந்தடைந்த இவர்களிடம் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டதன் பின்னர், அவர்களின் வீடுகளுக்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டதாக சர்வதேச குடிவரவு அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

## வாக்குறுதிகளை நிறைவேற்றினால் அரசாங்கத்துடன் பேசத் தயார்

### என்கிறார் சம்பந்தன்



(கொழும்பு)

அரசாங்கத்துடன் எந்த விடயம் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தயாராகவே உள்ளது. நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் பேசுவதற்கு நாம் தயார். ஆனால், எமக்கு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாம் தயாராகவே உள்ளோம். ஆனால் எமக்கு அளிதத வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். இந்த வாக்குறுதிகள் எழுத்து மூலமாக எம்மிடம் உள்ளன. பேச்சுவார்த்தைக்கு வருவதற்கு கூட்டமைப்பு நிபந்தனை போடக்கூடாது என்று அரசாங்கம் கூறுவது நிபந்தனை விதிப்பதாகவே அமைந்துள்ளது.

நூற்றுக்கு நூறு வீதம் அரசாங்கம் தவறிழைத்துவிட்டு வாக்குறுதிகளையும் நிறைவேற்றாது விடுவது நியாயமற்ற செயற்பாடாகும்.

இருந்த போதிலும், நாம் அழைப்பு விடுத்தால் பேசுவதற்கு தயாராகவே உள்ளோம். எமக்களித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது விட்டுவிட்டு புனிதர்கள் போல் பேசுவதில் எந்தப் பயனும் இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

## கிழக்கு மக்கள் வழங்கிய ஆணை அரசாங்கத்தை எதிர்ப்பதற்கல்ல!

### கூறுகிறார் ஹக்கீம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அரசாங்கக் கூட்டணியோடு சேர்ந்து போட்டியிட்ட முஸ்லிம் கட்சிகள் பெற்றுள்ள ஆசனங்களுக்கு சமமான எண்ணிக்கையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஆசனங்களை வென்றிருந்தது

கிழக்கில் மொத்தமாக வெற்றி பெற்றுள்ள முஸ்லிம் உறுப்பினர்கள் 14 பேரில் 7 பேர் முஸ்லிம் காங்கிரஸிலிருந்தே தெரிவு செய்யப்பட்டார்கள்.

தேர்தல் முடிந்து பல நாட்களின் பின்னர், முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவுடன் கிழக்கு மாகாணசபையில் அரசாங்கக் கூட்டணி ஆட்சியமைத்துள்ள நிலையில், மக்கள் தமக்கு அளித்த அங்கீகாரத்தை அரசாங்கத்தை விட்டுவிலகி எதிரணியோடு சேர்ந்து ஆட்சியமைப்பதற்காக வழங்கிய ஆணையாகக் கருதக்கூடாது என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறியுள்ளது.

அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டே தமது மக்களின் உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதற்காக மக்கள் வழங்கிய



ஆணையே அது என்றும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைக்கான முதல்வர் பதவியை இரண்டரை ஆண்டுகளில் முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்குவது, மாகாண சபையின் அமைச்சரவையில் இரண்டு அமைச்சுப் பதவிகளை வழங்குவது ஆகிய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு அரசாங்கம் எழுத்துமூலம் உத்தரவாதம் அளித்திருப்பதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கூறினார்.

இதுதவிர, கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் நீண்டகாலமாக நிலவும் நிர்வாக ரீதியான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அரச[illegible]புடன் உடன்பாடு காணப்ப[illegible]தாகவும் ஹக்கீம் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, மத்திய அரசாங்கத்தில் எந்தப் பதவிகளுக்காகவும் தாங்கள் பேரம்பேசவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## 400 படைவீரர்கள் தற்கொலை யுத்தத்திற்குப் பிந்திய நிலை இது

(கொழும்பு)

யுத்தத்தின் பின்னர் 400 படைவீரர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் யுத்த காலத்தில் ஏற்பட்ட மனஉளைச்சல் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாத காரணத்தினால் பலர் இவ்வாறு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நோய்கள் உள்ளிட்ட பல்வேறு காரணிகளினால் யுத்தத்தின் பின்னரான கடந்த ஆண்டுகளில் படைவீரர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார். அட்ஜஸ்மன்ட் டிசோடர் என்னும் நோயினால் பாதிக்கப்பட்டே அதிகளவான படைவீரர்கள் உயிரை மாய்த்துக்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

படைவீரர்களுக்கு மாதாந்தம் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்படுவதாகவும், உளவியல் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## காணாமற்போனோர் குறித்து மேற்குநாடுகள் குற்றச்சாட்டு அரசாங்கம் நிராகரிப்பு

(கொழும்பு)

காணாமற போனோர் தொடர்பில் மேற்குலக நாடுகள் செய்து வரும் பிரசாரம் அடிப்படையற்றது என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

விடுதலைப் புலிகளின் ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் சமூகத்துடன் மீள இணைக்கப் பட்டுள்ளனர். மேற்குலக நாடுகள் சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என்பது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் மூலம் புலனாகியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரதிநிதிகளை நியமிக்காத காரணத்தினால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாடுகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

மேற்குலக நாடுகளில் வாழும் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் பற்றிய தகவல்களை அந்தந்த நாடுகள் உரிய முறையில் வழங்காமையினால் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

# தனியார் கல்வி நிலையங்களை சனி, ஞாயிறுகளில் மூட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வலி.வடக்கு பிரதேச சபையின தவிசாளர் தெரிவித்துள்ளார்.

வலி.வடக்குப் பகுதியில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்கள் 14 பேருடனும் கலந்துரையாடப்பட்டதன் அடிப்படையில் இம்முடிவு எட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு தனியார் கல்வி நிலையங்களை வெள்ளிக்கிழமைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மூடுவதன் மூலம், பிள்ளைகள் ஆலயங்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்குச் செல்ல முடியும் எனவும், இது பிள்ளளைகளை சமூகத்தில் ஒழுக்கமுடையவர்களாக உருவாக்குவதற்கான வழிமுறையாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு கிழக்கு பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலையத்தலைவர் ம.அன்ரன்குமார் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், ஈ.பி.டி.பி.யின் வலி.கிழக்கு பிரதேச அமைப்பாளரும் வலி.கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான இ.ஜங்கரன், வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினரும் சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்த ருமான நா.இராசநாயகம், ஜே/267 ஊரெழு கிராம அலு வலர் கோ.ஜெயேந்திரன், சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் து.இளமுருகன், சமுர்த்தி உத்தியோகத்தர் ப.சேவற்கொடியோன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## கருத்தரங்கு

மனித உரிமை ஆணைக் குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிராம தலைவர்களுக்கான கருத்தரங்கொன்று கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.இணைப்பாளர் பி.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

# தனியாரின் காணிகள் சுவீகரிப்பு சட்டத்திற்கு மாறான செயற்பாடு

## - முன்னாள் காணி உதவி ஆணையாளர் -

(யாழ்ப்பாணம்)

தனியார் காணிகளை இராணுவத்தினர் தங்களது தேவைக்காக சுவீகரிக்க முடியாது. அவ்வாறு சுவீகரித்தாலும் தேவைக்கு குறைந்தளவு காணிகளையே சுவீகரிக்க முடியும். இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் தனியார் காணி சுவீகரிப்புக்கு எதிராக அரசியல் அமைப்புச் சட்டத்தின் உறுப்புரை 17 இன் கீழ் அடிப்படை உரிமைமீறல் வழக்குத் தொடரலாம் என்று முன்னாள் வடக்கு, கிழக்கு காணி உதவி ஆணையாளர் கதிர்காமத்தம்பி குருநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

தனியார் காணிகளை இராணுவம் சுவீகரிப்பதற்கு அரசியல் சட்டத்தில் இடமில்லை. அரச காணியை எடுத்துக்கொளளும் அதிகாரமும் இராணுவத்திற்கில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

அரச காணியை சுவீகரிப்பது என்றாலும் இராணுவம் நேரடியாக அதனை எடுத்துக் கொள்ள முடியாது. அவ்வாறு எடுக்கும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக காணி சுவீகரிப்பு வழக்கு தொடரமுடியும். ஆனால் அரசாங்கம் அதனை எடுத்து ஜனாதிபதியினால் வழங்கப் படுகின்ற பாராதீனம் கட்டளையின் பிரகாரமே இராணுவமும் அரசும் காணியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அத்துடன், அவ்வாறு அரச காணியை இராணுவம் பெற்றுக் கொள்ள நினைத்தால், பிரதேச செயலாளர் ஊடாக காணி ஆணையாளருக்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டும். காணி ஆணையாளர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் சிபாரிசின் படியே காணியை வழங்க வேண்டும்.

அவ்வாறான படிமுறைகளை மேற்கொள்ளாமல் அரச காணி எடுக்கப்பட்டால், இராணுவத்திற்கு எதிராக காணி அபரிப்பு வழக்குத் தொடரலாம். இந்த சுவீகரிப்புக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் ஆட்சி மாற்றத்திற்குப் பின்னரும் இதற்கான நடவடிக்கை எடுக்க முடியும். அவ்வாறு ஆட்சி மாற்றத்திற்கு பின்னர் தனியாருக்கு காணி விற்பனை செய்த வழக்கில் முன்னாள் ஜனாதிபதி 3 மில்லியன் ரூபா அபராதம் செலுத்தினார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## இந்திய வீட்டுத்திட்டத்தில் முதற்கட்டமாக 500 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வரும் இந்திய வீட்டுத் திட்டத்தில் குடாநாட்டில் 500 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் 32,000 குடும்பங்களுக்கு வீட்டுத் தேவை இருக்கின்றது. முதற்கட்டமாக 500 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு சுமார் 550,000 ரூபா வழங்கப்படவுள்ளன.

சாவகச்சேரி, தெல்லிப்பளை மற்றும் மருதங்கேணி ஆகிய 3 பிரதேசங்களையும் முதன்மைப்படுத்திய வீட்டுத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி எழுதுமட்டுவாள் பிரதேசத்தில் நடைபெறவுள்ளதாகவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.




## உலகக் கிண்ண கால்பந்து ரஷ்ய நகரங்கள் அறிவிப்பு

2018 உலகக் கிண்ண கால்பந்து போட் டியை நடத்தவுள்ள ரக்ஷ்யாவின் நகரங்கள் எதிர் வரும் 29ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக் கப்படவுள்ளன.

சர்வதேச கால்பந்து சம்மேளன தலைவர் செப் பிளாட்டர் மற்றும் ரஷ்ய விளையாட்டுத்துறை அமைச்சர் விடாலி முட்கோ இது தொடர்பில் இடம்பெறவுள்ள விசேட வைபவத்தின் போது நக ரங்களின் விபரத்தை வெளியிடவுள்ளனர். இதில் ரஷ்யாவின் 13 நகரங்களில் உலகக் கிண்ண கால்பந்து போட்டிகள் நடைபெறவுள்ளன. எனி னும் பாதுகாப்பு காரணங்களுக்காக இரு நகரங்கள் இம்மாத ஆரம்பத்தில் கைவிடப்பட்டன. அதே போன்று மேலும் 5 நகரங்களில் பாதுகாப்பு சிக்கல் இருப்பதாக முட்கோ குறிப்பிட்டார்.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உள்ள இரண்டு அரங்குகளில் 2018 உலகக் கிண்ண போட்டிகள் நடத்த அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. அதில் 90,000 பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய லுஸ்னிக்கி அரங்கில் இறுதிப் போட்டி நடத்தப்படவுள்ளது.

ரஷ்யா, இங்கிலாந்து மற்றும் இணைந்து விண் ணப்பித்த ஸ்பெயின், போர்த்துக்கல், பெல்ஜியம், நெதர்லாந்து ஆகிய நாடுகளுடன் போட்டியிட்டு கடந்த 2010ஆம் ஆண்டில் எதிர்வரும் 2018 உலகக் கிண்ண போட்டி நடத்த வாய்ப்புப் பெற்றது.

## இனவெறிப் பேச்சால் விசாரணை சர்வதேச போட்டிகளில் ஓய்வு



(லண்டன்)

இங்கிலாந்து கால்பந்தாட்ட அணியின் முன் னாள் தலைவர் ஜோன் ரெறி சர்வதேச கால்பந்தாட்டப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறு வதாக அறிவித்துள்ளார்.

குயீன்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ் அணியைச் சேர்ந்த அன்ரன் பெர்டினன்ட் என்ற வீரரை இனரீதியாகத் திட்டினார் என்ற குற்றத்திற்காக ஜோன் ரெறி மீது விசாரணை நடாத்தப்படும் என இங்கிலாந்து கால்பந்தாட்டச் சம்மேளனம் அறிவித்ததை அடுத்தே அவர் தனது ஓய்வை அறிவித்துள்ளார்.

சர்வதேச போட்டிகளிலிருந்து உடடியாக அமுலுக்கு வரும் வகையில் தனது ஓய்வினை அறிவிப்பதாகத் தெரிவித்த ஜோன் ரெறி, இங் கிலாந்து அணி சார்பாக தான் 78போட்டிகளில் பங்குபற்றியதற்கு அவ்வணிகளின் முகாமை யாளர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும், தன் னோடு போட்டிகளில் பங்குபற்றிய அனைத்து வீரர்களுடனும் மகிழ்ச்சியான காலத்தைக் கொண்டிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது சக வீரர்களுக்கும், தனது இரசிகர் களுக்கும், தனது குடும்பத்தினருக்கும் தனது நன்றிகள்ளத் தெரிவிப்பதாகத் தெரிவித்த ஜோன் ரெறி,சர்வ தேசப் போட்டிகளில் தான் பங்குபற்றிய காலத்தில்அவர் களது ஆதரவு முக்கிய மானது எனத் தெரிவித்தார்.

செல்ஷி கழகத்தின் சார்பாகப் போட்டிகளில் பங்கு பற்றும் போது அன்ரன் .'. பெர்டினன்ட் மீது இனரீதியான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டார் என்ற குற்றச் சாட்டு மீதான குற்றவி யல் விசா ரணைகளில் தான் குற்றமற்றவர் என்பது வெளிப்படுத்தப்பட்ட பின் னரும் புதிய விசாரணைக்கு இங்கி லாந்து கால்பந்தாட்டச் சம்மேளனம் முடிவெடுத்திருப்பது காரணமாகவே ஓய்வு பெறுவதாக அவர் தெரிவித் தார். ரெறி சிறந்த வீரர். இவரின் இந்த முடிவு கால்பந்தாட்ட இரசிகர்களுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தும் என விமர்சகர்கள் தெரிவித்தனர்.

## வாந்திபேதி, வயிற்றுப்போக்கு ருவென்ரி-20 வீரர்கள் அவதி

ICC WORLD TWENTY20 SRI LANKA 2012

### தண்ணீர்தான் காரணமா?

(கொழும்பு)

ருவென்ரி-20 உலக கோப்பைத் தொடரில் பங்கேற்றுள்ள அணிகளின் பெரும்பாலான வீரர்கள் வயிற்றுப்போக்கு, வாந்தியால் அவதிப்படுகின்றனர். இதற்கு தண்ணீர் தான் காரணம் எனக் கூறப்படுகிறது.

இலங்கையில் நடக்கும் நான்காவது ருவென்ரி-20 உலக கோப்பை தொடரில் 12 அணிகள் பங்கேற்றுள்ளன. இதில் நியூசிலாந்தின் விட்டோரி, அவுஸ்ரேலியாவின் ஸ்டார்க், பிராட் ஹொக், அயர்லாந்தின் ஸ்டெர்லிங், டாக்ரெல் ஆகியோர் கடந்த இரு வாரங்களாக வயிற்றுப்போக்கு, வயிற்று வலியால் அவதிப்படுகின்றனர். நியூசிலாந்தின் ரிம் சௌத்திக்கு, தொடர்ந்து சிக்கல் ஏற்பட, வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதுகுறித்து சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) செய்தித் தொடர்பாளர் கூறுகையில், வீரர்கள் பயன்படுத்தும் குடி தண்ணீரில் தான் பிரச்சினை என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. இருந்தாலும், அந்த நிறுவனம் மாற்றப்பட்டுள்ளது என்றார். இலங்கை பொது சுகாதாரத்துறை ஆய்வாளர்கள் வெளியிட்ட செய்தியில், ஒரு அணி அல்லது அதிக வீரர்கள் பாதிக்கப்பட்டால், அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு அல்லது தண்ணீரில் பிரச்சினை எனலாம். இங்கு சில வீரர்கள் மட்டும் தான் பாதிக்கப்பட்டனர். தவிர, இதுகுறித்து யாரும் முறைப்படி புகார் தெரிவிக்கவில்லை என்றார்.

## "திமிர் பிடித்த குரு" தந்தை புத்தகம் எழுதும் யுவராஜ்




(புதுடில்லி)

இந்திய அணியின் அதிரடி நாயகன் யுவராஜ் சிங் தனது தந்தை பற்றி புத்தகம் எழுதவுள்ளார்.

இது குறித்து அவரது தந்தை யோகராஜ் சிங் கூறுகையில், எனது மகன் என்னைப்பற்றி 'திமிர்பிடித்த குரு' என்ற தலைப்பில் புத்தகம் எழுதவுள்ளான் என்று கூறினார். இதில் யுவராஜ் சிங் தனது கிரிக்கெட் வாழ்க்கை குறித்தும்,புற்று நோயால் தான் பட்ட வலிகள் குறித்தும் எழுத வுள்ளார்.

இந்தத் தலைப்புக்கான காரணம் குறித்து அவரது தந்தை கூறுகையில், யுவராஜ் ஆரம் பத்தில் ஸ்கேட்டிங் விளையாடவும், ரென்னிஸ் விளையாடவுமே விரும்பினான். ஆனால் நான் அவனது விருப்பத்துக்கு மாறாக அவனைக் கிரிக்கெட்டில் புகுத்தினேன். அவனது எதிர்காலம் கருதி கிரிக்கெட் வீரராக மாற்ற முயற்சித்தேன் என்றார்.

யுவராஜ் விரைவில் தொலைக்காட்சியிலும் தோன்றி தனது புற்றுநோய் அனுபவம் குறித்து பேசவுள்ளார் என்றும் அவன் புற்றுநோயி லிருந்து மீண்டு வர பிரார்த்தித்த அவனது இலட் சக்கணக்கானரசிகர்களுக்கும், ஊடகத்தினருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் எனவும் தெரி வித்தார். யோகராஜ்சிங் ஆரம்பத்தில் சில சர்வ தேச போட்டிகளில் விளையாடினார். காயம் காரணமாக போட்டிகளிலிருந்து விலகிய அவர் பஞ்சாபி மொழிப்படங்களில் நடித்துவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சூப்பர் 8இல் மே.தீவுகள்

(கொழும்பு)

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி-20 தொடரின் சுப் பர் 8 சுற்றிற்கு மேற்கிந்தியத்தீவுகள் அணி தகுதி பெற்றுள்ளது. அயர் லாந்து அணிக்கெதிரான போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட் டதை அடுத்தே மேற்கிந்தியத் தீவு- கள் அணி சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ளது.

இதன்படி இக்குழுவில் அவுஸ் ரேலிய, மேற்கிந்தியத் தீவுகள்அணி கள் சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதிபெற் றுள்ளன.

## ஹரிஸ் சந்தேகம்

(சிட்னி)


அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி யின் வேகப்பந்து வீச்சாளர் றியன் ஹரிஸ், தென்னாபிரிக்காவுக்கு எதி ரான டெஸ்ட் தொடரில் விளையாடு வதில் தொடர்ந்தும் சந்தேகம் ஏற் பட்டுள்ளது.

தோள்பட்டையில் மேற்கொள் ளப்பட்ட சத்திரசிகிச்சை ஒன்றை அடுத்து அவர் தொடர்ந்தும் ஓய் வெடுக்க வேண்டிய நிலை ஏற்பட் டுள்ளது. இரண்டு மாதங்களுக்கு முன்னர், றியன் ஹரிஸுக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

இரண்டு அணிகளுக்கும் இடை யிலான முதலாவது டெஸ்ட் கிரிக் கெட் போட்டி நவம்பர் மாதம் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இத்தொடரில் ஆடவேண்டும் என்பது எனது விரும்பம் அன்றைய தினம் எனது உடற்தகுதியைப் பொறுத்து அணி நிர்வாகம் முடிவு செய்யும் என்றுஹரிஸ் தெரிவித்தார்.

## கிரிக்கெட்டின் கடவுள் சச்சின்



(சிட்னி)

கிரிக்கெட்டின் கடவுள் சச்சின் என, ஷோன் டெய்ட் தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி வீரர் ஷோன் டெய்ட், (வயது-29). வேகப்பந்து வீச்சாளரான இவர், தற்போது ருவென்ரி-20 போட்டிகளில் மட்டும் விளையாடி வருகிறார். கடந்த ஐ.பி.எல்., தொடரில், ராஜஸ்தான் அணிக்காக விளையாடினார்.

இந்நிலையில் சச்சின் ஓய்வு குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கிரிக்கெட்டின் கடவுள் சச்சின். ஓய்வு பெற சரியான நேரம் எதுவென அவருக்குத் தெரியும். இந்திய அணிக்காக நீண்ட காலம் போட்டிகளில் விளையாடி வரு கிறார். ஓய்வு குறித்து முடிவை அவரிடம் விட்டுவிட லாம். யுவராஜ் புற்றுநோய் பாதிப்பில் இருந்து மீண்டு வந்துள்ளார். இவரிடம் கற்றுக் கொள்ள நிறைய உள்ளன. அதிரடியாக துடுப்பாடுவதில் சிறந்த வீரர் என்றார்.

## அடுத்த சுற்றில் அதிக முன்னேற்றம் வேண்டும்



(கொழும்பு)

அடுத்த சுற்றில் எங்கள் அணி அதிக முன்னேற்றத்தை வெளிப்படுத்த வேண்டியுள்ளது என நியூசிலாந்து அணியின் தலைவர் ரொஸ் ரெய்லர் தெரிவித்தார்.

பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகளுக்கு எதிரான போட்டிகளில் எங்கள் அணியின் களத் தடுப்பு மோசமாகக் காணப்பட்டது. பாகிஸ்தானுக் கெதிரான போட்டியில் ஆரம்பத்தில் பந்துவீச்சு சிறப்பாகக் காணப்பட்டிருக்கவில்லை.

பாகிஸ்தானுக்கெதிரான போட்டியில் முதல் 10 ஓவர்களில் அளவுக்கதிகமான ஓட்டங்களை விட்டுக் கொடுத்துவிட்டோம்.

பாகிஸ்தான் அணி முதல் 10 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 92 ஓட்டங் களைப் பெற்றிருந்த நிலையில் அவ்வணி 177 ஓட்டங்களுக்குக் கட்டுப்படுத்தியது சிறப் பான செயலாக அமைந்தது. சிறப்பாகப் பந்துவீசியிருக்காவிட்டால் 190, 200 என்ற ஓட்ட இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாட வேண்டியிருக்கும்.

சூப்பர் -8 சுற்று மிகவும் கடி- னமானது. அதில் சின்னத் தவ- றுகளும் பெரிய பின்னடைவுகளை ஏற்படும். எமது அணியில் சிறந்த சகலதுறை வீரர்கள் உள்ளனர். போட்டியை எந்த வேளையிலும் மாற்றியமைக்கக் கூடிய வீரர்கள் உள்ளனர்.

எனவே,இதனை உரியமுறையில் நாம் பயன்படுத்திக் கொண்டால் மாத்திரமே எமது இலக்கை அடைய முடியும். இல்லையேல் ஏமாற்றமே மிஞ்சும். இத் தொடர் அனைத்து அணி களுக்குமே சவாலான தொடர் எனத் தெரிவித்தார்.



அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகத்தின் 85 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கால்பந்தாட்டப் போட்டியில், இரண்டாமிடத்தைப்பிடித்துக் கொண்ட வதிரி டயமன்ஸ் அணி, விருந்தினரிடமிருந்து கிண்ணத்தைப் பெற்றுக் கொள்வதைக் காணலாம். இப்போட்டியில் மணற்காடு சென். அன்ரனீஸ் சம்பியன் பட்டத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது. (12)

# பொதுக்கூட்டம், நிர்வாகத் தெரிவை பருத்தித்துறை லீக் கூட்டவேண்டும்

## லீக்கின் நிர்வாக சபை உறுப்பினர் கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் கடந்த பல வருடங்களாக பொதுக்கூட்டமோ, நிர்வாகத் தெரிவோ இடம்பெறாமையால் இயங்கவில்லை. இதனை விரைவில் சீர்செய்யும் வகையில் அதன் செயற்பாடுஅமைய வேண்டும் என பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் நிர்வாக சபை உறுப்பினர் ம.சதீஸ்கரன் (ராஜா) தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள குறுஞ்செய்தியின் விபரம் வருமாறு: பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் கடந்த 05-07-2009 இல் பொதுக்கூட்டம் கூடி நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. பின்னர் 2010,2011, 2012ஆம் ஆண்டுகளுக்குரிய பொதுக்கூட்டமோ நிர்வாகத் தெரிவோ நடைபெறவில்லை. 24-04-2012ஆம் ஆண்டில் பொதுக்கூட்டம் வைப்பதாக நிர்வாகம் அறிவித்தது. பின்னர் ஆனி மாதத்திற்குப் பிற்போடப்பட்டது. பின் இன்றுவரையும் பொதுக்கூட்டமும் கூடவில்லை. புதிய நிர்வாகமும் தெரிவு செய்யப்படவில்லை.

ஆனால், 31-05-2012இற்கு முன்னர் கழகங்களைப் புதிதாகப் பதிவு செய்து அங்கத்துவத்தைப் புதுப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்றுவரையும் சகல கழகங்களுக்கும் வழிகாட்டியாக இருக்கின்ற பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக், தமது பொதுக் கூட்டத்தைக்கூட்டாது இருப்பது ஆச்சரியத்திற்குரியது. தமது புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்யாமல் கழகங்களை வருடத்துக்கு வருடம் புதியநிர்வாகத்தைத்தெரிவு செய்யுங்கள் என எவ்வாறு அறிவுறுத்த முடியும்?

யாப்பின்படி தை மாதம் நிர்வாகம் தெரிவு செய்யப்பட வேண்டும். ஆனால், பல வருடங்கள் கடந்தும் பல திகதிகள் பிற்போடப்பட்டு,இழுத்துக்கொண்டு போகின்றார்கள். அடிக்கடி லீக்கின் உத்தியோகத்தர்கள் வெளிநாடுகள் சென்று வருவதால் தங்கள் பதவிகளை காப்பாற்றுவதற்காக இவ்வாறுநடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்கள் என்று சகல விளையாட்டுக் கழகங்களும் சந்தேகப்படுகின்றன. கழகங்கள் லீக்கின் குறைபாடுகளை வெளிப்படுத்துகின்றபோது நிர்வாக உறுப்பினர்களாக இருக்கின்ற நாம், வேதனைகளையும் மனச்சஞ்சலங்களையும் அனுபவிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆகையால் உடனடியாக பொதுக்கூட்டத்தைக் கூட்டி புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்து லீக்கின் செயற்பாட்டை அதிகரித்து, லீக்கின் கௌரவத்தைக் காப்பாற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம். விசேடமாக பருத்தித்துறை மத்தியஸ்தர் சங்கத்தின் செயற்பாட்டை சுதந்திரமாகச் செயற்படவிடாமல் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் மேலாதிக்கம் செய்து வருவது மிகவும் வேதன்னக்குரிய விடயமாகும். ஆனால், மத் திஸ்தர் சங்கம் கூட பல வருடங்களாகப் பொதுக்கூட்டம் கூடுவதோ, நிர்வாகத்தைத் தெரிவு செய்வதோ நடைமுறையில் இல்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மூன்றாவது சுற்றில் சென். பற்றிக்ஸ்

(யாழ்ப்பாணம்)

வவுனியா-செட்டிகுளம் மகாவித்தியாலய அணிக்கெதிரான ஒருநாள் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி இலகுவான வெற்றிபெற்றது.


இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டம் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும், வவுனியா-செட்டிகுளம் மகாவித்தியாலய அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய வவுனியா-செட்டிகுளம் மகாவித்தியாலய அணி ஜெரிக்ஷன் பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப்பறிகொடுத்தது. இறுதியில் செட்டிகுளம் மகாவித்தியாலய அணி 23.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பத்மப்பிரியன் மட்டுமே ஏழு ஓட்டங்களைப் பெற்றார். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்ட எண்ணிக்கைக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் ஜெரிக்ஷன் 9 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும், கிருசாந்தன் 14 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 62 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 6.4 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய திலக்ஷன் ஆட்டமிழக்காது 36 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சபேசன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இவ்வெற்றியின் மூலம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

விளையாட்டு செய்திகள்

# அளவெட்டி மத்தி வெற்றிக் கிண்ணம்; கரவெட்டி ஞானம்ஸ் வசம்





(அளவெட்டி)

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட மாபெரும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை கரவெட்டி ஞானம்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் நியூ நெல்சன் லேணர்ஸ் பிரதான அனுசரணையுடன் வடமாகாண ரீதியில் மிகப்பிரமாண்டமாக நடாத்திய மென்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி 22 ஆம் திகதி மகாஜனாக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து கரவெட்டி ஞானம்ஸ் அணியினர் பலப் பரீட்சை நடாத்தினர். நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் அணி 11 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரமேஸ் 17, அனுரதன் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பிரதாபன் 3 விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 75 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றிஎன்ற நிலையில் களமிறங்கிய றோயல் அணி 11.2 ஓவர்களில் சகலவிக்கெட்டையும் இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றதனால் ஞானம்ஸ் அணி 17 ஓட்டங்களால் வெற்றிபெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. துடுப்பாட்டத்தில் சதீஸ் 14 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சுவர்ணன் 4 விக்கெட்டை கைப்பற்றினார். இவ் இறுதிப்போட்டியில் அதிக சிக்ஸர்கள் அடித்தமைக்காகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் ஞானம்ஸ் அணியின் ரமேஸும், சிறந்த பந்து வீச்சாளராகவும் ஆட்டநாயகனாகவும் ஞானம்ஸ் அணியின் சுவர்ணனும், இத்தொடரில் ஹட்ரிக்சாதனை படைத்தமைக்காகவும், மனங்கவர் வீரர் மற்றும் தொடர் ஆட்டநாயகனாகவும் றோயல் அணியின் நிருபனும் தெரிவு செய்யப்பட்டனர்.

கழகத் தலைவர் சி. தயாளபாலன் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வின் பிரதம விருந்தினாக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க. கமலேந்திரன், சிறப்பு விருந்தினராகவும் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அதிபர் கே. வேல்சிவானந்தன், நியூ நெல்சன் லேணர்ஸ் உரிமையாளர் ரி. ட்யன் மற்றும் யாழ். மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் கே. சுதாகரன் ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி குறித்து கருத்துத் தெரிவித்த கழகத் தலைவர் தயாளபாலன், விளையாட்டுத் துறையை வளர்க்க வேண்டும் என்பது எமது பெரு விருப்பம். அந்த வகையில் மென்பந்து கிரிக்கெட் போட்டியையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்குடனேயே இச்சுற்றுப் போட்டியை நாம் வடமாகாண ரீதியில் நடாத்தியிருக்கின்றோம். இந்தச் சுற்றுப் போட்டியை நாம் வெற்றிகரமாக நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய நியூ நெல்சன் லேணர்ஸ் உரிமையாளர் மற்றும் அனைவருக்கும் எமது நன்றிகள். இது போன்ற தொடர்கள் எதிர்வரும் காலங்களில் எமது கழகத்தினால் நடத்தப்படும். இவற்றை நடத்துவதற்கு அனுசரணையாளர் பக்க பலமாக இருக்க வேண்டும் என்றார். (93)



# கிங் - ஜோக்கரான கதை!

- மப்றூக் கட்டுரையிலிருந்து.

கிழக்கு மாகாண சபையில் அரசுடன் மு.கா. இணையும் என்று பலராலும் அனுமானிக்கப்பட்ட ஒரு முடிவினைத்தான் மு.கார்ங்கிரஸ் எடுத்திருக்கிறது. இவ்வாறானதொரு முடிவினை எடுப்பதற்கு அந்தக் கட்சி இத்தனை நாட்களை இழுத்தடித்திருக்கத் தேவையில்லை. "ஆட்சியமைப்பது தொடர்பில் தலைவர் ஹக்கீம் நிதானமாக யோசிக்கிறார், பேரம் பேசுகிறார், அதனால்தான் இப்படி இழுத்தடிக்கப்படுகிறது" என்று மக்கள் எண்ண வேண்டும் என்பதற்காக சிலவேளை, இந்த இழுத்தடிப்பு நடத்தப்பட்டிருக்கலாம்.

"மு.காங்கிரஸைச் சேர்ந்த ஒருவருக்கு கிழக்கின் முதலமைச்சர் பதவியினை வழங்குவதற்கு மு.கா. தலைவர் ஹக்கீம் விரும்பமாட்டார். அவ்வாறு வழங்குவது அவருடைய தலைமைத்துவத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்து விடும் என ஹக்கீம் அச்சப்படுகிறார்" என்று தேர்தல் காலங்களில் பரவலாகக் பேசப்பட்டு வந்த குற்றச்சாட்டுகளை ஏற்கனவே பதிவு செய்திருந்தோம். அந்தக் குற்றச்சாட்டுக்கள் அப்படியே உண்மையாகி உள்ளன.

கிழக்கில் த.தே.கூட்டமைப்புடன் மு.காங்கிரஸ் இணைந்து ஆட்சியொன்றினை அமைப்பதற்கான ஏது நிலைகள் இல்லை என்பது உண்மையாகும். சிலவேளை, அவ்வாறானதொரு ஆட்சியினை மு.காங்கிரஸ் அமைத்திருந்தால், அது - முஸ்லிம் காங்கிரஸ் எனும் கட்சிக்கு உள்ளேயும், வெளியேயும் பாரிய பிரச்சினைகளையும், பிளவுகளையும் தோற்றுவித்திருக்கும் என்பதும் பெரும்பான்மையான முஸ்லிம் மக்களின் கருத்தாகும்.

"அதற்காக, அரச தரப்பினரிடம் மு.காங்கிரஸ் இப்படி எதுவுமில்லாமல் விலைபோயிருக்கத் தேவையில்லை. தாம் கேட்டவற்றினை அரச தரப்பு தர முடியாது என மறுத்திருந்தால்; கிழக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சி ஆசனத்தில் மு.கா. உறுப்பினர்கள் அமர்ந்திருக்கலாம். அது, சாதுரியமான முடிவாகவும் அமைந்திருக்கும்" என்கிறார் மு.காங்கிரஸின் ஓர் உயர்பீட உறுப்பினர்.

இதேவேளை, முஸ்லிம் காங்கிரஸ் சார்பான ஒருவருக்கு முதலமைச்சர் பதவி கிடைக்கவில்லை என்பது மிகக் கவலைக்குரிய விடயம் என்று மு.காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசால் காசிம், எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் எம்.எஸ். தௌபீக் ஆகியோர் ஊடகங்களுக்குத் தெரிவித்திருக்கின்றார்கள். கிழக்கின் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியைக் கொண்ட கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களே இப்படிப் பேசுவது ஆச்சரியமாக உள்ளது.

இவை ஒருபுறமிருக்க, கிழக்கில் ஆட்சியமைப்பது தொடர்பில், அரச தரப்புக்கும் மு.காங்கிரஸுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, மு.காங்கிரஸ் சார்பாக அந்தக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் மாத்திரமே கலந்து கொண்டார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. அதாவது, மு.காங்கிரஸைப் பொறுத்தவரை குறித்த பேச்சுவார்த்தைகள் வெளிப்படைத்தன்மை அற்றவையாகவே இருந்தன. இது விடயத்தில் மு.கா. தலைவர் ஹக்கீம் சொல்வதை மட்டுமே நம்பித் தொலைக்க வேண்டியதொரு துர்ப்பாக்கிய நிலைமை மு.காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்களுக்கும் வாக்காளர்களுக்கும் இருக்கிறது. ஆனால், பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட அரச தரப்பில் மிக முக்கிய சிரேஷ்ட அமைச்சர்கள் நால்வர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, அரசுக்கு ஆதரவு கொடுக்கும் முடிவொன்றினை ஹக்கீம் எடுத்தமைக்கு மு.கா.வுக்குள் இருக்கும் சில சிக்கல்கள்தான் காரணம் என்று ஹக்கீமுக்கு விசுவாசமான தரப்பொன்று கூறி வருகின்றது. அதாவது. அரசாங்கத்துடன் மு.கா. இணையாது போனால், மு.காங்கிரஸின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும், கிழக்கு மாகாணசபைக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்களும் கட்சியை உடைத்துக் கொண்டு அரச தரப்போடு இணைந்து விடக்கூடிய நிலைவரமொன்று உள்ளதாம். அதனால்தான், தலைவர் இவ்வாறானதொரு முடிவினை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்கிறார்கள் - தலைவர் ஹக்கீமுடைய விசுவாசிகள்!

இது தொடர்பில் மு.கா.வின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் பேசினோம். அவர் இதை அடியோடு மறுத்தார். "காலாகாலமாக தலைவர் செய்கின்ற பிழைகளுக்கு முதலில் பலிகொடுக்கப்படுவது - கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான்! அதைத்தான் இப்போதும் செய்துள்ளார்கள். தலைவர் எடுத்துள்ள இந்த முடிவில் எனக்கு துளியளவு கூட விருப்பமில்லை. அதற்காக த.தே.கூட்டமைப்புடன் இணையுங்கள் என்றும் சொல்லவில்லை. எதிரணியில் போய் அமர்ந்திருக்கலாம். ஆனால், இப்போது அரசுக்கு ஆதரவு என்கிற முடிவொன்றினை எடுத்தாகி விட்டது. அதனால், கட்சிக்குள் இருக்கும் கூட்டுப் பொறுப்பினை மீறி, எனக்கும் இந்த முடிவுக்கும் தொடர்பில்லை என்று என்னால் கூற முடியாது" என்றார் - குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்.


---

# மாத்திரைகளைச் சாப்பிடும் முன் ஒரு நிமிடம் யோசியுங்கள்!

ஒருவருக்குச் சிறுநீரகம் செயல் இழந்துவிட்டது என்று கேள்விப்பட்டவுடனேயே நாம் கேட்கும் கேள்வி, அவருக்கு நீரிழிவு நோய் இருக்கிறதா? என்பதே.

நீரிழிவு நோய்க்கும் சிறுநீரகச் செயல் இழப்புக்கும் அந்த அளவுக்குத் தொடர்பு இருக்கிறது.

"ஆனால் சிறுநீரகச் செயல் இழப்புக்கு நீரிழிவு நோய் தவிர, நிறையக் காரணங்கள் இருக்கின்றன" என்கின்றனர் மருத்துவர்கள்.



"நீரிழிவு நோய் வந்தவர்களுக்குச் சிறுநீரகச் செயல் இழப்பு ஏன் ஏற்படுகிறது? நீரிழிவு நோய் வந்தவர்களுக்குச் சிறுநீரில் அதிகமான அளவில் புரதம் வெளியேறுகிறது. இதனால் அடிக்கடி அவர்கள் சிறுநீர் கழிப்பார்கள். அவர்களுடைய சிறுநீரகங்கள் அதிக வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதிகப்படியான புரதம் வெளியேறிவிடுவதால், உடல் பருத்துவிடுகிறது. கை, கால்களில் வீக்கமும் ஏற்படுகிறது.

அடுத்து, இரத்தத்தில் யூரியாவின் அளவும் அதிகமாகிவிடுகிறது. இப்படி புரதம், யூரியா என்று இரத்தத்தில் அதிக அளவு கழிவுகள் சேர்ந்து கொண்டே போகின்றன. சிறுநீரகங்களால் ஓர் அளவுக்கு மேல் இரத்தத்தில் உள்ள கழிவுகளைத் தூய்மைப்படுத்த முடியாமல் போய்விடுகிறது. இரத்தத்தில் கழிவுகளின் அளவு அதிகரிக்கிறது. இந்தக் கழிவுகளை நீக்க, இரத்தத்தைச் செயற்கையான முறையில் தூய்மைப்படுத்த வேண்டியிருக்கிறது. அதாவது, டயாலிசிஸ் செய்ய வேண்டியிருக்கிறது. இதன் பின்னர் சிலநாட்களிலேயே சிறுநீரகங்கள் முற்றிலும் செயல் இழந்துவிடுகின்றன.

ஆனால் இது தவிர, சிறுநீரகச் செயல் இழப்புக்கு வேறு சில காரணங்களும் இருக்கின்றன. இப்போது வரும் நோயாளிகளில் 8 - 10 சதவீதம் பேருக்கு நீரிழிவு நோயால் சிறுநீரகப் பாதிப்பு ஏற்படுவதில்லை. அதிகப்படியான வலி நிவாரண மாத்திரைகளை - அதாவது, தலைவலி, மூட்டுவலி போன்றவற்றுக்கான மாத்திரைகளை - பயன்படுத்துவதால் சிறுநீரகப் பாதிப்பு ஏற்படுகிறது. NSAID வகை மருந்துகளைப் பயன்படுத்துவதால் சிறுநீரகப் பாதிப்பு ஏற்படுகிறது. குறிப்பாக DICLOFENAC, NIMESULIDE போன்ற வலிநிவாரண மருந்து, மாத்திரைகளைப் பயன்படுத்துபவர்கள் அதிக பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

டாக்டர் எப்போதோ ஒரு நோய்க்கு ஒரு சில மாத்திரைகளை எழுதிக் கொடுத்திருப்பார். மீண்டும் அது போன்ற நோய் வரும்போது, டாக்டரிடம் காண்பிக்காமல் பழைய மருந்துச் சீட்டைக் காட்டி மருந்துகளை வாங்கி பலர் உட்கொள்கிறார்கள். இது தவறு.

ஒரே விதமான அறிகுறிகளுடன் பல நோய்கள் இருக்கலாம். உதாரணமாக தலைவலிக்கு நூற்றுக்கு மேற்பட்ட காரணங்கள் இருக்கின்றன. மருத்துவர் எதனாலோ வந்த தலைவலிக்கு எழுதிக் கொடுத்த மாத்திரைகளை வேறு காரணத்தால் வந்த தலைவலிக்குப் பயன்படுத்துவார்கள். இதனாலும் சிறுநீரகப் பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

அதுமட்டுமல்ல, ஒருவருக்கு ஏதாவது நோய் வந்துவிட்டதாக அடுத்தவரிடம் சொன்னால், உடனே இந்த இந்த மாத்திரைகளைச் சாப்பிட்டால் நோய் குணமாகிவிடும் என்று இலவச மருத்துவ ஆலோசனை கிடைக்கிறது. தனக்கு அந்த மாதிரி நோய் வந்தபோது டாக்டர் இதைத்தான் எழுதிக் கொடுத்தார் என்பதாகச் சொல்வார்கள். அப்படி அந்த மாத்திரைகளை வாங்கிச் சாப்பிடும்போது பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. அந்த மாத்திரை ஒவ்வாமல் போய் பக்க விளைவுகள் ஏற்படவும் வாய்ப்புண்டு.

சில ஆன்டிபயாடிக் மருந்துகளாலும் சிறுநீரகங்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றன. சென்டாமைசின் போன்ற ஆன்டிபயாடிக் மருந்துகள் சிறுநீரகப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

ஏன் சிறுநீரகங்களில் பாதிப்பு ஏற்படுகிறது?

உடலுக்குப் பொருத்தமில்லாத மருந்து, மாத்திரைகள் உடலுக்குள் சென்று செரிமானமாகி, உடலில் கல்லீரலிலும், இரத்த ஓட்ட சுழற்சியிலும் சேர்ந்த பிறகு, அவை எல்லாம் வெளியேறுவது சிறுநீரகங்களின் வழியாகத்தான். இதனால் சிறுநீரகத்தில் பாதிப்பு ஏற்படுகிறது.

இப்படிப்பட்ட பாதிப்பு ஏற்பட்டவர்களை ஆரம்ப நிலையில் மருத்துவர்களிடம் கொண்டு சென்றால் இரண்டு, மூன்று முறை டயாலிசிஸ் செய்து குணப்படுத்திவிடலாம். அதிக அளவில் சிறுநீரகப் பாதிப்பு இல்லாமல் சரி செய்துவிடலாம். இதற்கே ரூபா 50 ஆயிரத்திலிருந்து இலட்சம் வரை செலவாகும். ஆனால், சிறுநீரகம் முழுவதும் பாதிக்கப்பட்டால், மாற்றுச் சிறுநீரகம்தான் பொருத்த வேண்டும். அதற்கு மேலும் இலட்சக்கணக்கில் செலவாகும்.

சிறுநீரகப் பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்க ஒரே வழி, டாக்டரின் ஆலோசனைப்படி மருந்துகளை உட்கொள்வதுதான். டாக்டரிடம் போக நேரமில்லை என்பதாலோ, டாக்டரிடம் போனால் அதிகக் கட்டணம் வசூலித்துவிடுவார் என்பதாலோ, மருந்துக் கடைகளில் மருந்து, மாத்திரைகளை வாங்கிச் சாப்பிட்டால் அதனால் ஏற்படும் இழப்பு மிகவும் அதிகம். மாத்திரைகளைச் சாப்பிடும் முன் ஒரு நிமிடம் யோசியுங்கள்.

- ந.ஜீவா -


---

## அட, அப்படியா?

1. தாமரைப் பூ சூரிய உதயத்தின்போது மலரும்.
2. செண்பகப் பூ மாலை 6 முதல் 7 மணிக்குள் மலரும்.
3. வாழைப்பூ மாலை 5 முதல் 6 மணிக்குள் மலரும்.
4. பவளமல்லிகை மாலை 6 முதல் 7 மணிக்குள் மலரும்.
5. மல்லிகைப் பூ இரவு 7 முதல் 8 மணிக்குள் மலரும்.
6. மனிதத் தலையில் உள்ள எலும்புகளின் எண்ணிக்கை 22.
7. பெண்களின் இரத்தச் சிவப்பணுக்களின் வாழ்நாள் 110.
8. ஆண்களின் இரத்தச் சிவப்பணுக்களின் வாழ்நாள் 120.
9. நாம் தும்மும் தும்மலின் வேகம் மணிக்கு 160 கி.மீ.
10. பரசூட் தயாரிக்க உதவுவது நைலோன்.
11. அமில மழையை உருவாக்குவது கரியமில வாயு.
12. வெப்பமானிகளில் பயன்படுவது பாதரசம்.
13. சமையல் வாயுவில் அதிகம் உள்ளது பியூட்டேன்.

# திலகன்

- யுவகிருஷ்ணா -



"நீ மறுபடியும் வரணும் பன்னீர் செல்வம். பழைய ஐ.பி.எஸ். பன்னீர் செல்வமா வரணும்" இருபது ஆண்டுகளுக்கு பிறகும் இன்னும் ஃப்ரெஷ்ஷாக இருக்கும் வசனம். மிக சாதாரணமான இந்த வசனம் இவ்வளவு பிரபலமடைய காரணம் திலகன். ஏற்ற இறக்கத்தோடு, முகத்தில் ஒரு அனாய சமான புன்முறுவலோடு அவர் சொன்ன போது, தியேட்டரில் விஜயகாந்தின் ரசிகர்கள் பரவசப்பட்டுப்போய் விசிலடிப்பார்கள்.

எண்பதுகளின் இறுதியில் சினிமாவில் வில்லன்கள் புதுப்பரிமாணம் பெற்றார்கள். அதுவரை வில்லன் என்றால் கற்பழிக்க வேண்டும், ஹீரோவோடு மல்லுக்கட்டி சண்டை போடவேண்டும், எந்த காரியத்தை எடுத்தாலும் வில்லத்தனமாக நரி மாதிரி செயற்படவேண்டும் என்றெல்லாம் விதிகள் இருந்தது. மணிரத்னம் மாதிரி இயக்குனர்கள் வெள்ளைச் சட்டை ஜெண்டில்மேன் வில்லன்களை உருவாக்கத் தொடங்கினார்கள். ஆனந்த் தியேட்டர் அதிபர் உமாபதிக்கு நடிப்பே வராது. இருந்தாலும் அந்த நடிப்பே வராத தன்மைதான் அக்னிநட்சத்திரத்துக்கு தேவைப்பட்டது.

விஜயகாந்தின் 'சத்ரியன்' இன்றுவரை நினைவுகூரப்படுவதற்கு கேப்டனுடைய பொலிஸ் உடுப்பு கம்பீரத்தோடு, அருமை நாயகமாக நடித்த திலகனின் அலட்டிக் கொள்ளாத நடிப்பும் காரணமாக இருக்கிறது. அவரது குரல் தனித்துவமானது. அழுத்தமான மலையாளவாடை கொண்டது. ஆனால் தமிழை சரியாக உச்சரிக்க வேண்டும் என்று மெனக்கெட்டு நிறுத்தி, நிதானமாக உச்சரிப்பார். இருபது ஆண்டு காலத்தில் அவரது தோற்றத்தில் எந்த வித்தியாசமும் ஏற்பட்டதாகவே தெரியவில்லை. 91இல் எப்படி இருந்தாரோ அப்படியே 2011இலும் இருந்தார்.

திலகனை தமிழில் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றே நினைக்கத் தோன்றுகிறது. வசனத்திலும், தோற்றத்திலும் அப்பட்டமாக அடித்த மலையாளவாடை இதற்கு காரணமாக இருக்கலாம். இவருக்குப் பிறகு தமிழுக்கு அறிமுகமான ராஜன் பி.தேவ் (சூரியன் படத்து கோனாரை மறக்க முடியுமா?) போன்றவர்கள் பெரிய ரவுண்ட் அடித்தார்கள். சத்ரியனை விட மேட்டுக்குடியில் திலகன், நிஜவாழ்க்கையில் நாம் பார்க்கும் சாமியாடி எப்படி இருப்பாரோ, அப்படியே திரையில் நடித்துக் காட்டியிருந்தார்.

தமிழில் "கிரீடம்" படத்தில் அஜீத்தின் அப்பாவாக ராஜ்கிரண் நடித்திருப்பார். ஒரிஜினல் மலையாள க்ரீடத்தில் மோகன்லால் ஹீரோ. ராஜ்கிரணின் வேடத்தில் திலகன். திலகன் நடித்த திரைப்படங்களில் "க்ரீடம்" ஒரு மைல்கல். இப்படி ஒரு அப்பா நமக்கு இருக்கக்கூடாதா என்று ஒவ்வொரு மகனையும் ஏங்கவைக்கும் நடிப்பு.

மம்முட்டி, மோகன்லாலில் தொடங்கி நேற்றைய பிருத்விராஜ் வரை அத்தனை ஹீரோக்களுக்கும் அப்பாவாக நடித்து கேரளாவில் பெரும் புகழ் பெற்றவர். இயல்பிலேயே கம்யூனிஸ் சிந்தனைகளில் ஊறிப்போனவர் என்பதால், அவ்வப்போது மலையாளத் திரையுலகின் போக்கை அப்பட்டமாக கண்டித்து தன்னுடைய இடத்தை தானே அடுத்தடுத்து சிக்கலாக்கிக் கொண்டவர். ஒரு கட்டத்தில் மலையாளத் திரையுலகமே இவருக்கு எதிராக நின்றபோதும் கூட, ரசிகர்கள் இவரை கைவிட்டதே இல்லை.

பத்து ஆண்டுகளுக்கும் மேலாக அவ்வப்போது திலகனின் உடல்நிலை குறித்து மோசமான செய்திகள் வரும். அவ்வளவுதான், முடிந் தது அவரது மூச்சு என்றெல்லாம் கேள்விப்படும்போது, மீண்டும் பீனிக்ஸ் பறவையாய் எழுந்துவந்து மேக்கப்போடு படப்பிடிப்புத் தளத்தில் நிற்பார். இதய நோயோடு மிகக்கடுமை யாக அவர் போராடிக் கொண்டிருந்த இந்த காலகட்டத்திலும் கூட முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட படங்களில் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி, நடிகனுக்குரிய கடமையை நிறைவு செய்தார்.

தன்னுடைய இணையற்ற நடிப்பாற்றலால் மலையாளப் படங்களை செதுக்கிக் கொண்டேயிருந்த பெருந்தச்சனின் காலம் திங்களன்று (24-09-2012) அதிகாலை முடிவுக்கு வந்தது. ஈடு செய்ய முடியாத இழப்பு என்கிற சொல்லுக்கு நியாயம் கற்பிக்கிறது திலகனின் இழப்பும்.

# தண்ணீர்த் தாக நோய்!



பிரிட்டனின் எசெக்ஸ் என்ற பகுதியில் வசிக்கும் சாஷா கென்னடி என்ற 26 வயதுப் பெண்ணுக்கு ஒரு வித்தியாசமான பழக்கம் உள்ளது. இவரால் அரை மணி நேரம் கூட, தண்ணீர் குடிக்காமல் இருக்க முடியாது. வீட்டை விட்டு வெளியில் எங்கு சென்றாலும், தன்னுடன் பெரிய தண்ணீர்ப் போத்தலைக் கொண்டு செல்வார். தினமும் சராசரியாக, 25 லீற்றர் தண்ணீர் குடிக்கிறார். இரவு நேரத்திலும் அரை மணி நேரத்துக்கு ஒருமுறை எழுந்து, லீற்றர் கணக்கில் தண்ணீரைக் குடிக்கிறார். அளவுக்கு அதிகமாக தண்ணீர் குடிப்பதால், தினமும் 40 முறை பாத்ரூம் செல்ல வேண்டிய தர்மசங்கடமான சூழலும் இவருக்கு உள்ளது.

இந்த வினோதபழக்கம் சாஷாவின் இரண்டாவது வயதிலேயே ஏற்பட்டு விட்டதாம். இரண்டு வயதில் இருந்து இவர் குடிக்கும் தண்ணீரின் அளவு படிப்படியாக அதிகரித்து 13 வயதானபோது, தினமும் 15 லீற்றராக அதிகரித்தது. 20 வயதில் 20 லீற்றரானது. இப்போது 25 லீற்றர். "அளவுக்கு அதிகமாக தண்ணீர் குடித்தால், உடல் முழுவதும் வீங்கி, உயிருக்கே ஆபத்து ஏற்படும்..." என டாக்டர்கள் எச்சரித்தும் கூட, "யார் எப்படி எச்சரித்தாலும் தண்ணீர் குடிப்பதை மட்டும் என்னால் நிறுத்த முடியாது. அரை மணி நேரத்துக்கு ஒருமுறை, தண்ணீர் குடிக்காவிட்டால் நாக்கு வறண்டு உதடுகள் உலர்ந்து, உலகமே இருண்டு விட்டது போல் உணர்கிறேன். இந்தப் பழக்கத்தை நிறுத்துவதற்கு, ஏதாவது சிகிச்சை இருந்தால் சொல்லுங்கள்..." என பரிதாபமாக கேட்கிறார் சாஷா.

# கட்டுப்பாடுகள் இல்லாத சிறைச்சாலை!

உலகில் எத்தனை, எத்தனையோ, வித்தியாசமான சிறைச்சாலைகளைப் பார்த்திருப்போம், படித்திருப்போம். தென் அமெரிக்காவில் உள்ள பொலிவியா நாட்டின் லா பாஜ் என்ற இடத்தில் உள்ள, சான் பெட்ரோ என்ற சிறைச்சாலை உலகின் மற்ற சிறைச்சாலைகளை விட, மிகவும் வித்தியாசமானது. இங்கு, பல்வேறு குற்றங்களில் ஈடுபட்டு, தண்டனை பெற்ற 1,500 கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இதில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு, எந்தவித க்ட்டுப்பாடும் இல்லை. விரும்பும்போது வெளியில் செல்லலாம். மாலை 6.00 மணிக்குள் சிறைக்குள் திரும்பி விட வேண்டும்.

கைதிகள், தங்கள் குடும்பத்தினருடன் தங்குவதற்கும் அனுமதி அளிக்கப்படுகிறது. அதற்குப் பணம் செலுத்த வேண்டும். குறிப்பிட்ட அளவு பணம் செலுத்தினால், ஒரு சிறிய அறை அந்த கைதியின் குடும்பத்துக்கு ஒதுக்கப்படும். தண்டனைக் காலம் முடியும் வரை, அவர்கள் அங்கு தங்கியிருக்கலாம். ஹோட்டல், சந்தை, முடி திருத்தும் கடை என அனைத்து வசதிகளும் சிறை வளாகத்துக்குள் உண்டு.

வி.ஐ.பி. கைதிகளுக்கு தனி அறை உள்ளது. இந்த அறைகளில் சமையலறை, குளியலறை, கேபிள் 'டிவி' உள்ளிட்ட வசதிகள் உள்ளன. இந்த அறைகளில் தங்குவதற்கு மாதந்தோறும் 50 ஆயிரம் ரூபா கட்டணம் செலுத்த வேண்டும். தற்போதைய நிலவரப்படி, இந்தச் சிறையில் 200 குழந்தைகள் உள்ளனர். (கைதிகளின் குழந்தைகள்) இவர்களுக்கான பொழுதுபோக்கு வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.



இந்த வித்தியாசமான சிறைச்சாலைபற்றி, இணையதளங்கள் மூலமாக தகவல் பரவியதை அடுத்து, இதைக் காண்பதற்காக உலகம் முழுவதிலுமிருந்து, சுற்றுலாப் பயணிகள் இங்கு குவியத் தொடங்கியுள்ளனர். சிறையில் உள்ள குற்றவாளிகள் சிலர், போதைப் பொருட்களை சட்ட விரோதமாக விற்பனை செய்கின்றனர். இதை வாங்குவதற்காகவும் ஏராளமானோர் வருகின்றனர்.

இந்த வித்தியாசமான சிறைச்சாலைக்கு எதிராக, சமூக ஆர்வலர்கள் கடும் விமர்சனங்களை வெளியிட்டுள்ளனர். "இங்கு பல்வேறு குற்றங்களில் ஈடுபட்ட மிகப் பெரிய குற்றவாளிகள் உள்ளனர். கட்டுப்பாடு இல்லாததால், இவர்கள், சக கைதிகளை அடித்து, உதைத்து, பணம் மற்றும் பொருட்களை அபகரித்துக் கொள்கின்றனர். சில நேரங்களில், பெரிய அளவில் அடிதடி சம்பவங்களும் நிகழ்கின்றன. இங்கு வளரும் குழந்தைகளும், ஆரோக்கியமற்ற சூழலில்தான், வசிக்கின்றனர். இவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் அபாயமும் உள்ளது. பெரிய அளவில் அசம்பாவிதம் ஏற்படுவதற்கு முன், இந்தச் சிறை நிர்வாக விஷயத்தில் அரசு கவனம் செலுத்த வேண்டும்..." என்கின்றனர் சமூக ஆர்வலர்கள்.

# சினிமா சினிமா




✗ வெங்கட் பிரபுவிடம் உதவியாளராகப் பணியாற்றிய ரஞ்சித், "அட்டக்கத்தி" படத்தை இயக்கினார். இப்படம் நல்ல வரவேற்பைப் பெற்றதையடுத்து அஜித்துக்கென் கதை ஒன்றை உருவாக்கியுள்ளார் ரஞ்சித். கதை கேட்ட அஜித் அசந்து போய் படத்தைத் தயாரிக்கச் சம்மதம் தெரிவித்துள்ளார். வயதான ஒருவரை மையமாக கொண்ட கதை அம்சம் என்பதால் படத்தில் நாயகனாக அஜித் நடிக்கவில்லையாம். ராஜ்கிரண் அந்த கதாபாத்திரத்தில் நடிப்பார் என்று தெரிகிறது.

✗ கே.பாலசந்தர் இயக்கத்தில், ரஜினி நடித்த, "தில்லு முல்லு" படம் மீண்டும் ரீ-மேக் ஆகிறது. "கலகலப்பு" சிவா நடிக்கும் இப்படத்திற்கு, யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார் என்றாலும், இப்படத்திற்கு ஏற்கனவே இசையமைத்த, எம்.எஸ். விஸ்வநாதனின் சில பாடல்களும் படத்தில் இடம் பெறுகின்றன.

✗ இளையராஜா, வைரமுத்து வாரிசுகளான யுவன் சங்கர் ராஜாவும், கபிலனும் ஒரு காலத்தில் ஓடிப்பிடித்து விளையாடுகிற நண்பர்கள். காலம் அப்பாக்களை பிரித்துவிட்டது. ஆனால் திடீரென்று யுவனுக்கு கபிலன் போன் செய்ய, "வா... பாடல் எழுதலாம்" என்று யுவன் சொல்ல, ஹிட் பாடல் ஒன்று தயாராகிக் கொண்டிருக்கிறது. அஜீத் நடிக்கும் புதிய படம் ஒன்றுக்காக கை கோர்த்திருக்கிறார்கள் வாரிசுகள்.

✗ தெலுங்கு நடிகர் ராணாவுக்கும் திரிஷாவுக்கும் சமீபத்தில் நிச்சயதார்த்தம் நடந்ததாகவும், அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் கூறப்படுகிறது.



✗ ஹிந்தியில் கோல்மால், சிங்ஹம் (தமிழ் - சிங்கம்) போன்ற 100 கோடிக்கு மேல் வசூல் செய்த படங்களை தொடர்ந்து இயக்கியதால் முன்னணி இயக்குநர்கள் வரிசையில் இருப்பவர் ரோஹித் ஷெட்டி. அவர் அடுத்து இயக்கும் ஹிந்திப் படம் சென்னை எக்ஸ்பிரஸ். மும்பையிலிருந்து ராமேஸ்வரத்துக்கு புறப்படும் ரயிலில் பயணிக்கும் மும்பைவாசி ஷாருக்கானுக்கும் தமிழ்ப் பெண் தீபிகா படுகோனுக்கும் காதல் பிறக்கிறது. ராமேஸ்வரம் சென்றதும் அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளை வைத்து நகைச்சுவையுடன் படம் நகர்கிறது. படத்தில் பெரும்பாலும் தமிழ் நடிகர்களையே நடிக்க வைக்க ரோஹித் ஷெட்டி திட்டமிட்டுள்ளார். நகைச்சுவை நிறைந்த தீபிகாவின் அப்பா வேடத்துக்கு சத்யராஜ் பொருத்தமாக இருப்பார் என்று அவரது நண்பர்கள் சிபாரிசு செய்துள்ளனர்.

✗ "வனயுத்தம்" படத்தில், லட்சுமிராய் குத்தாட்டம் ஆடியுள்ள விவகாரம் பரவியதைத் தொடர்ந்து, பல கம்பெனிகள், அவரை முற்றுகையிட்டுள்ளன. அதனால், இதுதான் காசை கறக்க சரியான தருணம் என்று, ஒரு பாட்டுக்கு ஆட, 10 இலட்சம் ரூபாய்க்கு மேல் கூலி கேட்கிறார்.



# அத்தனை கேஸ்'ம் முத்தின கேஸ்!

**நேற்று பேப்பரில் ஒரு பயங்கரச் செய்தி:** நம் கையிலுள்ள மொபைல் போனில் ஏராளமான பக்டீரியாக் கிருமிகள் அப்பிக் கொண்டிருக்கிறதாம். ஒரு சராசரி மொபைல் போனில் வசிக்கும் கிருமிகளின் எண்ணிக்கை, நம் டொய்லெட் ஸீட்டில் இருப்பதை விட அதிகமாம்! 'சேச்சே, இனி ஃபோனைக் கொஞ்சம் தள்ளி வைத்தே பேச வேண்டும்' என்று நினைத்துக் கொண்டிருக்கும்போதே மற்றொரு படு பயங்கரச் செய்தி: நம் கம்ப்யூட்டர் கீ போர்டில் உள்ள கிருமிகள், டொய்லெட் ஸீட்டில் இருப்பது போல ஐந்து மடங்காம். கீ போர்டைத் தொட்ட விரல்களால் நாக்கில் எச்சில் தொட்டுப் புத்தகம் புரட்டினால் ஃபுட் பாய்சனிங்தானாம். இந்த வயிற்று வலிக்கு க்வெர்ட்டி டம்மி என்று அமெரிக்கத்தனமாக ஒரு பெயர் வேறு வைத்திருக்கிறார்கள்.

அடுத்ததாக ஏதாவது ஒரு பத்திரிகையில், டொய்லெட் ஸீட்டை விட அதிகமான கிருமிகள் நம் டூத் ப்ரஷில் இருப்பதாக எழுதிவிடப் போகிறார்களே என்று கவலையாக இருக்கிறது. அப்படி ஏதாவது செய்தி கண்ணில் பட்டால் உடனே நான் முற்றிலும் நிறுத்திவிடுவேன் - பல் தேய்ப்பதையா, பத்திரிகை படிப்பதையா என்பதை மட்டும்தான் இன்னும் முடிவு செய்யவில்லை.

ஏற்கனவே இப்படி ஒரு முற்றுகைச் சூழலில் மனிதன் வசிக்கும்போது, மனோதத்துவ டாக்டர்களிடமிருந்து மற்றொரு மகா பூச்சாண்டி: குழந்தைகள் பலூன் வாங்கித்தரச் சொல்லி அடம் பிடிப்பது முதல், உபரியாக தின்றுவிட்டு அஜீரணத்தில் அவஸ்தைப் படுகிறோமே அதுவரை, ஏறக்குறைய நம் நாளாந்த அலுவல்கள் அனைத்தையும் மனோவியாதி என்றே அவர்கள் முத்திரை குத்திவிட்டார்கள்!

அமெரிக்காவின் பைத்திய வைத்தியர்கள் கழகம் வெளியிடும் DSM எனப்படும் புத்தகம், மனநோய்களைப் பற்றிய பைபிள் என்று உலகம் முழுவதும் பின்பற்றப்படுவது. வியாதிகளின் வர்ணனை, விவரங்கள், எப்படி எடுத்துச் சொன்னால் நோயாளியைப் பயமுறுத்தலாம் என்று சகல தகவல்களும் அடங்கிய புத்தகம். இதன் வெளிவர இருக்கும் ஐந்தாம் பதிப்பில் ஏகப்பட்ட புதிய வியாதிகள் சேர்க்கப்படவிருக்கின்றன.

உதாரணமாக, பரீட்சை மண்டபத்துக்குள் நுழையும்போது வரும் படபடப்புக்கு 'மைல்ட் ஆங்ஸைட்டி டிப்ரஷன்' என்று பெயராம். காதலனுடன் சண்டை போட்டுக் கொண்ட இளம் பெண் மனச்சோர்வு அடைந்து, இறுகிய முகத்துடன் பூங்காவில் உட்கார்ந்து புல்லைக் கிள்ளிக்கிள்ளிப் போடுவது, கடைசியில் அந்த ராஸ்கல் செல்போனில் கூப்பிடும்போது துக்கத்தில் பேச்சு வராமல் தடுமாறுவது - இதற்கெல்லாம் பெயர் 'அட்டென்யுவேடட்சைக்காடிக் சிம்ட்டம்ஸ் சின்ட்ரோம்'. எல்லாவற்றையும் விட விசேஷமான வியாதி, 'டெம்ப்பர் டிஸ்ரெகுலேஷன் டிஸோர்டர்' எனப்படுவது. இதுவேறொன்றுமில்லை, மனிதனாகப் பிறந்தவனுக்கு சில




சமயம் கோபம் வருகிறதே, அதுதான்!

இந்த மனநல பைபிளின்படி பார்த்தால் இனி உலகத்தில் யாருமே மன ஆரோக்கியத்தோடு இருப்பதாகச் சொல்ல இயலாது. கிங்ஸ் இன்ஸ்டிட்யூட், கார்டிஃப் பல்கலைக் கழகம் போன்றவற்றின் உளவியல் பேராசிரியர்களே இதைப் பற்றிக் கவலை தெரிவித்திருக்கிறார்கள். எல்லாரையும் சகட்டு மேனிக்குப் 'பைத்தியம்' என்று ரப்பர் ஸ்டாம்ப் குத்தித் தள்ளிவிட்டால் அப்புறம் நோர்மலான மனிதர்களின் எண்ணிக்கையே மிகச் சுருங்கிவிடும் என்கிறார்கள்.

ஏதோ புத்தகத்தில்தானே எழுதியிருக்கிறார்கள், எழுதிவிட்டுப் போகட்டுமே என்று இதை விட்டுவிட முடியாது. இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள்தான் எதிர்காலத்து மாஃபியா. ஏனெனில் ஆஸ்பத்திரிச் செலவுகள் எல்லாம் பெருந் தொழிலதிபர்களுக்கு மட்டும்தான் இனிக் கட்டுபடி ஆகும். இன்ஷ்யூரன்ஸ் எடுக்கப் போனால் நமக்கு பைல்ஸ் உண்டா, சலறோகம் உண்டா என்று ஆயிரத்தெட்டு கேள்வி கேட்டு, கடைசியில் 'உனக்குக் கோபம் வருவதுண்டா?' என்று கேட்பார்கள். ஆமாம் என்று சொன்னால் போச்சு - டெம்ப்பரமண்ட்டல் கண்ட்ரோல் டிஸோர்டர் என்று முத்திரை அடித்து ப்ரீமியத்தை ஏகத்துக்கு ஏற்றிவிடுவார்கள். தொடர்ந்து இன்ஷ்யூரன்ஸ் குடையின் கீழ் இருக்க வேண்டுமென்றால் அதற்கான சிகிச்சையை ஒழுங்காகச் செய்துகொள்ள வேண்டும். டிஸோர்டரைக் கட்டுப்படுத்த தினம் மூன்று வேளை குழாய் மாத்திரைகள், ஒவ்வொன்றின் விலை ரூபாய் எண்பது! இப்படியெல்லாம் பொது அறிவுக்குப் பொருந்தாத விஷயங்கள் ஏன் நடக்கின்றன என்பதை ஊகிப்பது எளிது. கார்ப்பரேட் ஆஸ்பத்திரிகளும் ஃபார்மா கம்பெனிகளும் கூட்டுச் சேர்ந்துவிட்டால் தொழிலை விஸ்தரிக்க வேண்டும். அதற்கு, நோய்களை விஸ்தரிக்க வேண்டியிருக்கிறது. நோயாளி வந்தார், மண்டையில் தட்டிப் பார்த்தோம், மருந்து கொடுத்தோம் என்று அனுப்பிவிட முடியாது. இன்ஷ்யூரன்ஸுக்காக ஆயிரத்தெட்டு படிவங்களை நிரப்பியாக வேண்டும். படிவத்தில் எழுதுவதற்கு ஒரு வியாதியின் பெயர் வேண்டுமே?அதற்காகத்தான் புதுப் புது வியாதிளைக் கண்டுபிடித்துப் பெயர் சூட்டு விழா நடத்தியாகிறது.

'வியாதி' என்று வகைப்படுத்தினால்தான் நிறைய மருந்து எழுதிக் கொடுக்க முடியும். பிடிப் பிடியாக மாத்திரை எழுதிக் கொடுக்கும் போட்டியில் வென்றால்தான் டாக்டர் அங்கிள் குடும்பத்துடன் மொறிஷியஸ் தீவில் விடுமுறை அனுபவிக்க முடியும். விடுமுறயை ஸ்பொன்சர் செய்வது யார் என்று சொல்லத் தேவையில்லை.

சைக்கோஸிஸ் ரிஸ்க் சிண்ட்ரோம் போன்ற பொத்தம் பொதுவான வில்லைகளை சுலபமாக யார் கழுத்தில் வேண்டுமானாலும் மாட்டிவிடலாம். ஜல தோஷம் வந்தவர்கள் அனைவரையும் "நிமோனியாவாக இருக்கலாம், ஆஸ்பத்திரிக்கு வந்து படு" என்று சொல்வது போலத்தான் இது. இந்த மாதிரி சைக்கியாட்ரிஸ்ட்களிடம் 'ஏதோ மனது சரியில்லை' என்று ஆறுதலுக்காக ஒரு முறை போய்விட்டால் போச்சு! உங்களுக்கு ஏதாவது ஒரு வகைப் பைத்தியம் என்று பட்டம் கட்டியே தீருவார்கள். இதெல்லாம் ஒரு முறை இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளின் தகவல் தளத்தில் பதிந்துவிட்டால் சுலபத்தில் அதை நீக்க முடியாது. அதை அவர்கள் யாருக்கெல்லாம் பகிர்ந்து கொள்கிறார்கள் என்பதும் தெரியாது. அதன் பிறகு இன்ஷ்யூரன்ஸ் எடுப்பதும் கடினம், வேலை கிடைப்பதும் சிக்கலாகிவிடும்.

அதிக வியாதிகள், அதிக மருந்துகள், அதிக பேஷண்ட்டுகள், அதிகப் பணம் -, அதிகம் பக்க விளைவுகள், இன்னும் அதிக வியாதிகள் என்று சக்கர வட்டமாகத் தன்வாலையே கௌவிக் கொண்டிருக்கும் மலைப் பாம்பு இது.

DSM என்பது உலகம் முழுவதும் பரவலாக மருத்துவர்கள், மருந்துக் கம்பெனிகள், ஆராய்ச்சியாளர்கள் உபயோகிக்கும் கையேடு. சென்ற முறை இதில் குழந்தைகளின் புதிய வியாதியாக ADHD - அட்டென்ஷன் டெஃபிசிட் ஹைபர் ஆக்டிவிடி டிஸோர்டர் - என்று ஒன்றைச் சேர்த்தார்கள். தம்பிப் பாப்பாவை அம்மா தூக்கிக் கொஞ்சும்போது அண்ணன்காரன் பொறாமையில் அழுது அடம் பிடிக்கிறானே, அதற்குத்தான் இப்படி ஒரு திகிலூட்டும் வியாதிப் பெயர்.

இதைப் படித்துவிட்டுப் பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ADHD வந்துவிட் டது என்று பதறிப் போய் டாக்டரிடம் ஓடினார்கள். ஒரு கால கட்டத்தில் ADHD என்பது தொற்று வியாதியாகவே ஊர் ஊராகப் பரவியது.

அடுத்து அமெரிக்க டாக்டர்கள் செய்ததை 'ஹத்தனம்'என்றே வர்ணிக்கலாம். குழந்தைகளின் 'நரம்புகளை அமைதிப் படுத்துவதற்காக' ரிட்டாலின், அட்டெரால், வைவென்ஸே போன்ற தீவிரமான மருந்துகளை, மை தீரும் வரை பிரிஸ்கிரிப்ஷன் எழுதித்தள்ளி விட்டார்கள்! 2008ஆம் ஆண்டில் இந்த மருந்துகள் அமெரிக்காவில் 480 கோடி டொலருக்கு விற்பனை ஆகியிருக்கின்றன.

இந்த மருந்துகளுக்கெல்லாம் மிக மிக ஆபத்தான பக்க விளைவுகள் இருக்கின்றன. ரிட்டாலினின் பக்க விளைவுகள் என்பதை விக்கி பீடியாவில் பார்த்தால் A முதல் X வரை சரம் சரமாகப் பட்டியலிட்டிருக்கிறார்கள். அட்டெரால் என்பது போதை மருந்துகளின் காக்டெயில்! இதையே யாராவது ரோட்டில் வைத்து விற்றால் கஞ்சா கேஸில் பொலிஸ் பிடித்துப் போய்விடும். அதை ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு 'அடம் பிடிக்கும் வியாதி'க்காகக் கொடுத்திருக்கிறார்கள். வைவன்ஸே சாப்பிட்டுத் தற்கொலை செய்துகொண்ட குழந்தைகள்உண்டு.

சொக்லேற் கேட்டுக் குழந்தை அழுதால் அது




ஒரு மன வியாதி. இல்லத்தரசி ஒருவர் ஏதோ கடுப்பில் வெண்கலப் பானையை 'ணங்'கென்று இறக்கி வைத்தால் அது ஒரு வியாதி' இப்படிக் கண்டு பிடித்துக்கொண்டே போய்க் களைத்துப் போன மனநல மருத்துவர்கள் இப்போது மற்றொரு அருமையான வியாதி சொல்லியிருக்கிறார்கள்: ஆரோக்கியமான உணவுகளைத் தேர்ந்தெடுத்துச் சாப்பிடுவது கூட ஒரு வகை மனநோயாம்.

உண்மை! விளையாட்டுக்குச் சொல்லவில்லை! இந்த வியாதிக்கு 'ஆர்த்தோரெக்ஸியா நெர்வோஸா' என்று பெயர். இந்த நோய் பீடித்தவர்கள் கடலை எண்ணெய் சொட்டும் பக்கோடா சாப்பிட மாட்டார்கள். இனிப்பு, கொழுப்பு, உப்பு, உறைப்பைக் கூடிய

> பரீட்சை மண்டபத்துக்குள் நுழையும்போது வரும் படபடப்புக்கு 'மைல்ட் ஆங்ஸைட்டி டிப்ரஷன்' என்று பெயராம். காதலனுடன் சண்டை போட்டுக்கொண்ட இளம் பெண் மனச் சோர்வு அடைந்து, இறுகிய முகத்துடன் பூங்காவில் உட்கார்ந்து புல்லைக் கிள்ளிக் கிள்ளிப் போடுவது, கடைசியில் அந்த ராஸ்கல் செல்போனில் கூப்பிடும்போது துக்கத்தில் பேச்சுவராமல் தடுமாறுவது - இதற்கெல்லாம் பெயர் 'அட்டென்யுவேடட் சைக்காடிக் சிம்ட்டம்ஸ் சின்ட்ரோம்'. எல்லாவற்றையும் விட விசேஷமான வியாதி, 'டெம்ப்பர் டிஸ்ரெகுலேஷன் டிஸோர்டர்' எனப்படுவது. இது வேறொன்றுமில்லை,மனிதனாகப் பிறந்தவனுக்கு சில சமயம் கோபம் வருகிறதே, அதுதான்!

வரையில் தவிர்ப்பார்கள். டால்டா, மைதா, பிட்ஸா, பர்கர் எல்லாம் தள்ளுபடி. டிபார்ட்மெண்ட் ஸ்டோருக்குப் போனால் அட்டைப் பெட்டிகளின் மீது கடுகு எழுத்தில் எழுதியிருக்கும் கலோரிகளைப் படித்துப் பார்ப்பார்கள். பச்சைக் காய்கறிகள், பழங்கள், கைக்குத்தல் அரிசி போன்றவற்றைத் தாமும் சாப்பிட்டு, குழந்தைகளுக்கும் கொடுப்பார்கள்' இதெல்லாம் ஒருவகை மன வியாதி! ஆர்த்தோரெக்ஸியா நெர்வோஸா! செயற்கையான இரசாயனங்களில் ஊறவைத்து மாதக் கணக்கில் டப்பாவில் அடைத்து வைத்த உணவைச் சாப்பிட்டால், தான் நோர்மலான மனிதன் என்று இவர்கள் வாதாடுவதற்குக் காரணம் இருக்கிறது. ஃபுட் ப்ரொஸஸிங் என்பது பல பில்லியன் டொலர் இண்டஸ்ட்ரி. அதிகம் பதப்படுத்தினால் அதிக மதிப்புக்கூட்டல். எல்லோரும் இயற்கையாக விளைவதைப் பறித்துச் சாப்பிட ஆரம்பித்து விட்டால் இடையில் உள்ள பல பேரின் தொழில் படுத்துவிடும்! □

# அனர்த்த முகாமைத்துவப் போட்டி; வெற்றிபெறுவோருக்கு பணப்பரிசில்கள்

(அச்சுவேலி)

சர்வதேச அனர்த்த முகாமைத்துவ நாளையொட்டி அதனைக் கொண்டாடும் வகையில் சார்க் நாடுகளுக்கிடையில் பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி நடாத்தப்படவுள்ளது. மேற்படி போட்டிகளை நடாத்துவது தொடர்பாக வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் வலயக் கல்வி அலுவலகங்களினூடாக ,அனைத்துப் பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டியில் பங்குபற்ற விரும்புகின்ற மாணவர்கள் பங்கு கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவின் புதுடில்லி நகரில் இயங்கி வரும் சார்க் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஒழுங்கமைத்து நடாத்தப்படும் இப் போட்டிகள் 15 முதல் 18 வயதினரை உள்ளடக்கிய ஒருபிரிவையும், 19 முதல் 22 வயதினரை உள்ளடக்கிய மற்றொரு பிரிவையும் கொண்ட இரு பிரிவுகளாக நடாத்தப்படவுள்ளது. அதற்காக போட்டியாளர்களால் சமர்ப்பிக்கப்படும் கட்டுரை ஆக்கங்கள் 1000 முதல் 1500 சொற்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். மேலும் ஆக்கங்கள் ஆங்கில மொழியில் அல்லது சார்க் அமைப்பினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாட்டின் உள்ளூர் மொழியில் அமைதல் வேண் டும்.

போட்டியில் பங்குபற்றி தேசிய மற்றும் பிராந்திய ரீதியில் வெற்றி பெறுபவர்களில் முதலாம் இடத்திற்கு 500 அமெரிக்க டொலர்களும், இரண்டாம் இடத்திற்கு 300 அமெரிக்க டொலர்களும், மூன்றாம் இடத்திற்கு 200 அமெரிக்க டொலர்களும் அவற்றிற்கான சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான அனைத்து விபரங்களும் உள்ளடக்கப்பட்ட சுற்றுநிருபமும் போட்டியில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (03)

# மயிலிட்டித்துறை மக்களை மீள்குடியமர்த்த நடவடிக்கை



மயிலிட்டித்துறையில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான செயற்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வருவதாக ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வடமராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க இலவச முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் முன்பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் யோகராசா தலைமையில் நடைபெற்ற போது நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், சிறந்ததொரு கல்வியை வழங்கும் முன்பள்ளியாக மயிலிட்டித்துறை முன்பள்ளி திகழ்வதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். இம்முன்பள்ளி கல்விச் செயற்பாட்டிற்கு மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் அளப்பரிய சேவையாற்றி வருகின்றது. எனவே மயிலிட்டித்துறையில் இருந்து இடம்பெயர்ந்து பல்வேறு இடர்களுக்கு முகங்கொடுத்து வருகின்ற இப்பிரதேச மக்களை,மீள் குடியமர்த்துவதற்கான செயற்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முன்பள்ளி சிறார்.களின் பல்வேறு போட்டி நிகழ்வுகளுடன் இடைவேளை நிகழ்வாக இசையும் அசைவும், வினோத உடைப்போட்டி நிகழ்வுகள் இடம் பெற்றது.

தொடர்ந்து வெற்றியீட்டிய சிறார்களுக்கான பரிசில்களை நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் மற்றும் ஏனைய அதிதிகள் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி. வடமராட்சி பிரதேச அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன், வடமராட்சி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.தில்லைநாதன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஜெயசீலன், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் எமிலியாம்பிள்ளை மற்றும் பெற்றோர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பசுமை அமைதி விருது பொதுஅறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இயற்கை பண்பாட்டு மரபுவளப் பாதுகாப்பு மையத்தின் ஏற்பாட்டில் பசுமை அமைதி விருதுக்காக பாடசாலை மாணவர்களுக்கிடையே சூழல் பொது அறிவுப்போட்டிப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் வடமாகாண கல்வி திணைக்களத்தின் அனுமதியுடன் நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைக்கு பாடசாலை மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முற்றிலும் பல்தேர்வு வினாக்களைக் கொண்ட இப்பரீட்சை கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என இரண்டு பிரிவுகளாக இடம்பெறவுள்ளது. கீழ்ப்பிரிவில் தரம் 9, 10இல் பயிலும் மாணவர்களும், மேற்பிரிவில் தரம் 11, 12, 13இல் பயிலும் மாணவர்களும் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவர். பரீட்சைக்கான பாடவிதானமாக அந்தந்தப் பிரிவுகளுக்குரிய வகுப்புகளின் பாட நூல்களில் இடம்பெற்றுள்ள சூழல் அலகுகளோடு, மேலதிக வாசிப்பு நூல்களாகச் சுற்றுச் சூழல் கட்டுரைகளின் தொகுப்பான ஏழாவது ஊழிநூலும் சமூக அறிவியல் ஏடான நங்கூரமும் பரிந்துரைக்கப்படுகின்றன.

மதிப்பெண்களின் அடிப்படையில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடத்தைப் பெறும் மாணவர்கள் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலத்தினாலான பசுமை அமைதி விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படுவர். கூடுதலான மதிப்பெண்களைப் பெறும் ஏனைய மாணவர்களுக்கும் பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படுவதோடு, சித்தியெய்தும் மாணவர்கள் அனைவருக்கும் பசுமை அமைதிச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் நடைபெறவுள்ள இந்தச் சூழல் அறிவுப் போட்டிப் பரீட்சையில், மாணவர்கள் விரும்பிய மொழியில் தோற்றலாம். இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவேண்டும். மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம், திருநெல்வேலி கிழக்கு, பதிவுகாரர் ஒழுங்கையில் அமைந்துள்ள இயற்கை, பண்பாட்டு மரபு வளப் பாதுகாப்பு மையத்தின் தலைமைச் செயலகத்துடனோ அல்லது 0777969644 என்னும் செல்லிடத் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். என மையத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

# ஆயுர்வேதம்

## சாப்பிட மாட்டேன் என்று அடம் பிடித்தால்...



தாய்மாருக்கு எப்போதுமிருக்கும் பிரச்சினைகளுள் ஒன்று குழந்தைகளைச் சாப்பிட வைப்பது. சில குழந்தைகள் என்னதான் கெஞ்சினாலும் சாப்பிட மறுக்கும். வாயில் திணித்தாலும் துப்பி விடுவார்கள். திட உணவுகளை நாடாமல் வெறுமனே பாலை மட்டும் குடித்துவிட்டு விளையாடப் போய்விடும் குழந்தைகள், மலச்சிக்கலாலும் கஷ்டப்படுவார்கள்.

இதற்குக் காரணம், வாயிலும் தொண்டையிலும் உள்ள நீர் தேக்கக் கோளங்கள் வறண்டு நீர்த்த உணவை எதிர்பார்த்திருக்கும் நிலையில் திட உணவை வாய் விரும்பி ஏற்பதில்லை. உணவு உள்ளே செலுத்தப்படவிருப்பதை முன் எதிர்பார்த்து அதனைப் பக்குவப்படுத்தத் தேவையான ஜீரணத் திரவங்கள் சுரந்து சூடேற்றி ஜீரண கோசம் ஆயத்தமாக இருப்பதை நாக்கில் தண்ணீர் ஊறுதல், வயிற்றில் காந்தல் உணர்வு, வயிறு குறைவது போன்றவை விட்டுவிட்டுத் தோன்றி பின் கிரமமாகத் தீவிரமடைவது முதலியவற்றால் உணரப்படும். இவை சரிவர ஏற்படாத நிலையில் வாயில் உணவைத் திணிப்பதால், எந்தப் பயனும் ஏற்படாது. அதனால் உமிழ்நீர் அதிகம் சுரக்கும் வகையில் அந்தக் குழந்தைக்கு ஏற்பாடுகளைச் செய்து கொள்வது மிகவும் முக்கியம்.

அந்த வகையில், தயிர் தோய்ந்தநிலையில் தனித்துக் கீழே நிற்கும் தெளிவு, புளிப்பும், இனிப்பும், துவர்ப்பும் கலந்த சிறந்த பானம். ஓர் அழகான கண்ணாடி டம்ளரில் அரை கிளாஸ் ஊற்றி, எலுமிச்சம் பழச்சாறு சீனியும் கலந்து சாப்பிடக் கொடுக்கலாம். இது ருசி கோளங்களைத் திறந்துவிட்டு உமிழ்நீரின் வரவையும் அதிகப்படுத்தும். பசியைத் தூண்டும். மலமூத்திரக் கட்டைத் தளர்த்திவிடும்.

சத்து மாவைப் பசும்பாலில் கலந்து சாப்பிடும்போது அது நீர்த்து நெகிழ்ந்ததுமான உணவாக இருப்பதால், அதிக நேரம் வாயில் தங்காமல் உட்சென்று விடும். மென்று சாப்பிடுபவர்களுக்கு உமிழ்நீர் அதிகம் சுரக்கும். அதில் ஜீரணத் திரவாம்சம் இருப்பதால் உண்ட உணவை வாயிலேயே பக்குவமாக்கத் தொடங்குகிறது. அதனால் அதிக திரவ உணவைச் சாப்பிடுபவர்களும், பரக்கப் பரக்கச் சாப்பிடுபவர்களும் உமிழ்நீரால் பெறும் இலாபத்தை இழந்து விடுகின்றனர். உமிழ்நீரால் ஆக வேண்டிய ஜீரணமும், ஜீரணிக்கப்பட்ட உணவுச் சத்து உட்சேர்வதும் இதனால் குறைகிறதென்பது கவனத்துக்குரிய விஷயமாகும். உமிழ்நீரில் கரையும் சத்தே மனநிறைவைத் தருகிற நிறைவான பொருளாகும்.

சம வயதுள்ள சிறுவர் சிறுமியர் உள்ள உறவினர் வீட்டுக்கோ, நண்பர்கள் வீட்டுக்கோ உங்கள் குழந்தையை அழைத்துச் சென்று, அவர்களுடன் சேர்ந்து சாப்பிடும்படி பழக்கவும். அவர்கள் ஆவலுடன் உண்பதைக் கண்டால் உங்கள் பிள்ளையும் உணவில் விருப்பத்துடன் உண்ணப் பழகிவிடும். திட உணவு சாப்பிடும்படி இது தூண்டும்.

உமிழ்நீர் கோளங்களைச் சுறுசுறுப்பாக்கி திட உணவு சாப்பிடச் செய்வதில் இஞ்சிச் சாறு சிறந்தது. 200 மி.லீ. இஞ்சிச் சாறு பிழிந்து, சிறிது நேரம் வைத்திருக்க சாறு தெளியும். அடியில் படிந்துள்ள சுண்ணாம்பு போன்றவற்றை அகற்றித் தெளிந்த சாறை 200 கிராம் சீனியுடன் கலந்து இளந்தீயில் காய்ச்சி பானகமாக்கி வடிகட்டி குங்குமப்பூ, ஏலம், ஜாதிக்காய், கிராம்பு வகைக்கு 1 கிராம், பச்சைக் கற்பூரம் 1/2 கிராம் கலந்து வைத்திருந்து உணவுக்கு முன் சாப்பிடக் கொடுக்கவும். உமிழ்நீர் சுரப்பி நன்றாக வேலை செய்யத் தொடங்கும். திட உணவை எளிதில் ஏற்கச் செய்யும். பசி, ஜீரண சக்தி அதிகமாகும். வயிற்றுக் கனம், உண்டவுடன் அசதி, தலை சுற்றுதல் போன்றவை நீங்கும்.

அரைக் கரண்டி வில்வாதி லேகியம் காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிட, உமிழ்நீர் கோளங்களிலுள்ள அடைப்பை அகற்றி, உமிழ்நீரை அதிகப்படுத்தும். கபத்தினால் ஏற்படும் சில வாய் உபாதைகளான ருசியின்மை, நாக்கில் மாவு படிதல், வாய் துர்நாற்றம் போன்றவற்றையும் குணமாக்கி, பசியையும் தூண்டச் செய்யும்.

# விசாரணை அறிக்கை கிடைத்த பின்னரே காணாமல் போனோர் குறித்த நடவடிக்கை

## மனித உரிமை ஆணைக்குழுவின் வடபிராந்திய ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினால் 1996 ஆண்டு காலப்பகுதியில் காணாமல் போனவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பான அறிக்கை இன்னும் விசாரணை அதிகாரிகளினால் மனித உரிமை ஆணைக்குழுவிடம் சமர்பிக்கப் படவில்லை. "அவ்வறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும்'' என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் வட பிராந்திய ஆணையாளர் இ.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ் மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போதே இதனை அவர் தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

1996ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமல் போனவர்கள் தொடரபாக வடக்கிலும் கிழக்கிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இரண்டு மாகாணங்களிலும் மேற்கொள்ளப்பட்ட விசாரணை தொடர்பான அறிக்கைகள் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளை சமூகத்தில் புறக்கணிப்பது தொடர்பாக அல்லது அரச திணைக்களங்கள் மற்றும் வங்கிகளில் புறக்கணிப்பது தொடர்பாக முறைப்பாடுகள் பதிவு செயயப்பட்டால் அவை தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## ஸ்தம்பிதமடைந்த ஏ.ரி.எம் சேவை வாடிக்கையாளர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் குடாநாட்டில் காலை சில மணிநேரங்கள் இலங்கைவங்கியின் தானியங்கி பணப்பரிமாற்ற இயந்திரங்கள் (A.T.M) செயற்படவில்லை என வங்கியின் வாடிக்கையாளர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த வங்கியின் அதிகாரி ஒருவர் கொழும்பிலுள்ள பரிவர்த்தனை நிலையத்தில் ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறு காரணமாகவே இவை செயற்படவில்லை எனவும் வாடிக்கையாளர்களின் நலன்கருதி வங்கி கிளைகள் நீடித்த நேரம் சேவையாற்றியதாகவும். வேறுகிளை வாடிக்கையாளர்களிடம் வங்கிப்புத்தகம் இல்லாதபோதும் அவர்களிடம் உறுதிச்சீட்டுப் பெற்று குறித்த கிளைகளுக்கு பக்ஸ் மூலம் அனுப்பி உறுதிப் படுத்திய பின் பணம் வழங்கியதாகவும் தெரிவித்தார். எனினும் தவறுகள் சீர் செய்யப்பட்டு மதியத்தின் பின்னர் இயந்திரங்கள் சேவையாற்ற ஆரம்பித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

(54)

## பரமர் சங்கமம்



'எல்லாரும் ஏறிய குதிரையில சக்கடத்தாரும் ஏறிச் சறுக்கி விழுந்தார்' இது கொச்சைப் படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட பழமொழி.

செப்ரெம்பர் மாத நடுவாரத்தில் பத்திரிகைகளில் இரண்டு கொச்சைப்படுத்தும் சங்கதிகளைச் செய்தியாகப் பார்க்க நேர்ந்தது. ஒன்று தென் இலங்கைச் சகோதர மொழிப்பத்திரிகையில் வெளிவந்த கேலிச்சித்திரம், மற்றொன்று தென் இந்தியப் பாடகரான உன்னிகிருஷ்ணனின் நிலை தடுமாறல்.

'லக்பிம' பத்திரிகையில் வெளிவந்ததான இலங்கையை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வசை பாடுவதாகவும், அதனை அம்மாவின் சேலைக்குள் ஒளிந்து நிற்கும் சிறுபையன் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஒரு கழித்துப் பார்ப்பதாகவும் அமைந்திருந்தது அந்தக் கேலிச் சித்திரம்.

பிரபல எழுத்தாளர் மீனா கந்தசாமி லண்டனைச் சேர்ந்த ஜனனி ஜனநாயகம் ஆகியோர் ஜெயலலிதாவைப் பாலியல் ரீதியாக அச்சித்திரம் பழி தீர்ப்பதாகவும் குற்றம் சாட்டி இருந்தனர்.

'லக்பிம' வின் பதில் ஆசிரியர் ரங்கஜய சூரிய மேற்படி கேலிச்சித்திரத்தை கலையம்சம் மிக்கதாக நோக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளார். ஒரு விடயம் பற்றி சர்ச்சை வருகிறதெனின் அவ்விடயத்தில் கலையம்சத்தை விட்டும் பார்க்கக் கூடியதான இடைவெளி இருக்கப் போவதால்தானே ஏற்படுகிறது?

கேலிச்சித்திரங்கள் பொதுவாக இரட்டைக் கருத்துடையதாக அமைவதும் மற்றவர்களின் சிந்தனைகளில் பொறி ஒன்றைத் தோற்றுவிப்பதும் தானே அதனது பணி. இதனிடையே இந்திய கேலிச்சித்திரக்காரரான அஸீம் திரிவேதி தேசத்துரோகக்குற்றம் சாட்டிக் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் கந்தசாமி கோவில் திருவிழாக் காலத்தில் யாழ்ப்பாணம் வந்த தென்னிந்திய பிரபல பாடகர் உன்னி கிருஷ்ணன் நிகழ்ச்சிகளை நடத்தினார். அப்போது நமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவரைப் பாராட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவித்து இருந்தார்.

ஒரு நாட்டின் அமைச்சர் சாதாரண பாடகர் ஒருவரை மனமுவந்து கௌரவித்தாரென்றால் அது சாமானியமான ஒன்றா?

அதுவும் கலைத்துறை சார்ந்தவர்களை திரும்பிப்பார்க்கவே பஞ்சப்படுகின்ற காலகட்டத்தில் கௌரவம் செய்யப்படுவது தள்ளி விடக் கூடிய காரியமா?

இங்கே மனமகிழ்வோடு உளத்திருப்தியோடு ஏற்றுக்கொண்டு விட்டு இப்பொழுது அந்நிகழ்வு தனது இசைப்பயணத்துக்கே அவமானம் தன்னுடைய வாழ்வில் ஏற்பட்ட கரும் புள்ளி என்றெல்லாம் புசத்தி உள்ளார் உன்னி.

நோபல் பரிசைக் கூட வேண்டாமென துச்சமாக்கிய சாதனையாளர் உலகத்தில் இல்லாமல் இல்லை. அதை அந்த நேரத்திலேயே செய்திருக்க வேண்டும். அப்பொழுதே அக் கலைஞனை மதிக்கலாம்.

பின்பாகக் கேட்பார் புத்தியைக்கேட்டு புலம்புவது அவரது சிறுமதியையே புட்டுக்காட்டியுள்ளது. 'எல்லாரும் ஏறிய குதிரையில சக்கடத்தார்தானும் ஏறிச் சறுக்கி விழுந்தார்' எண்ட கூற்று உன்னி கிருஷ்ணனுக்கு மிகவாகப் பொருந்தும் இல்லையே பின்னை...

## புற்றுநோய் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் புற்றுநோயாளர்களுக்கான நடமாடும் சிகிச்சை பிரதேச வைத்தியசாலைகளில் நடைபெறவுள்ளது.

புற்றுநோய் வைத்திய நிபுணரினால் இச்சிகிச்சை வழங்கப்படவுள்ளதுடன் இச்சிகிச்சை சாவகச்சேரி ஆதாரவைத்திய சாலையில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்தில் 2 ஆவது புதன்கிழமை காலையும், சங்கானை பிரதேச வைத்தியசாலையில் 4 ஆவது புதன்கிழமை காலையும், காரைநகர் பிரதேச வைத் தியசாலையில் 4 ஆவது புதன்கிழமை பிற்பகலும் இடம்பெறவுள்ளது. பொதுமக்கள் இச் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் 12ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் தா.தர்மரட்ணம் தலைமையில் இடம் பெறும் இக்கூட்டத்தில் புதிய நிர்வாகசபைத் தெரிவு இடம் பெறவுள்ளது.

## காசோலை வழங்கல்



(யாழ்ப்பாணம்)

உலக குடியிருப்பாளர் தினத்தை முன்னிட்டு வீடமைப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான காணி உரிமம், மற்றும் கிராமத்திற்கு ஒரு வீடு திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயன்ாளிகளுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ் மாவட்ட காரியாலயத்தில் மாவட்ட இணைப்பாளர் நோயல் ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான காசோலை மற்றும் காணிப்பத்திரங்களை வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் வசிக்கும் 20 பயனாளிகளுக்கான காணி உரிமங்களும் வீடமைப்பு அதிகார சபையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ஒரு கிராமத்திற்கு ஒரு வீடு திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 10 பயனாளிகளுக்கான இறுதிக்கட்ட காசோலைகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முரசின் இன்றைய பலன்

(26.09.2012 – புதன்கிழமை)

நந்தன வருஷம் புரட்டாதி மாதம் 10 ஆம் திகதி.
நட்சத்திரம்: திருவோணம்- சித்தயோகம். பிற்பகல் 2.24 வரை.
திதி ஏகாதசி முற்பகல் 10.19 வரை.
இராகுகாலம் 12.02 - 1.32 வரை. சுபநேரம் 4.32 - 6.02 வரை
எமகண்டம் 7.32 - 9.02 வரை, குளிகன் காலம் 10.32 - 12.02 வரை. ஏகாதசி விரதம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம்  | எதிர்ப்புகளை வெல்லும் உத்வேகம். நண்பர். உறவினருக்கு உதவுவீர்கள். தொழில் வளர்ச்சி. இலாப விகிதம் உயர்ந்து, உபரி பணவரவு. பிணி தீரும்.. வழக்குகளில் அனுகூல பலன். |
| ரிஷபம்  | நிதானமும், எச்சரிக்கையும் இருக்கும். வேண்டியவர் உதவியால் சாதனை படைக்கலாம். தொழில் நிலை மந்தம். சிக்கனம் தேவை. போட்ட திட்டத்தில் மாறுதல். |
| மிதுனம்  | இரக்கம், கருணைத்தன்மை. உதவி பெற்றவர் வாழ்த்துவர். தொழிலில் அனுகூலம். பணவரவு திருப்தி. தாயின் தேவை பூர்த்தி. பொறுமையால் அதிர்ஷ்டம் தேடி வரும். |
| கடகம்  | மனதில் சோர்வும், அச்சமும் ஏற்படலாம். குடும்ப ஆதரவு. சச்சரவு கூடாது. அளவான பணவருமானம். லாகன பயணத்தில் கவனம். உறவினர் வருகை. வெளியூர் செய்தி வரும். |
| சிம்மம்  | செயல்களில் தடுமாற்றம். அனுபவசாலியின் வழிகாட்டுதல் உதவும். கூடுதல் பணி. வரவை விடச் செலவு கூடும். எதிர்காலம் பற்றிய சிந்தனைகள். மருத்துவ சிகிச்சை. |
| கன்னி  | நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல தீர்ப்பு வந்து சேரும். தொழில் திருப்திகரமான வளர்ச்சி. பணவரவில் முன்னேற்றம். தம்பதியர் அன்யோன்யம். சுபநிகழ்ச்சிக்கு அழைப்பு. |
| துலாம்  | புதியவர் அறிமுகம். நட்பு ஆதரவு. தொழிலில் புதிய நடைமுறை. தாராள பணவரவு. சமூகத்தில் உயர் மதிப்பு. பாராட்டு, வெகுமதி கிடைக்கும். சந்தோச நினைவுகள். |
| விருச்சிகம்  | புத்திசாலித்தனமான செயலால் அனுகூலம். தொழில் முன்னேற்றம். அதிக இலாபம். சேமிப்பும் அதிகரிக் கும். இல்லறத்துணை ஆலோசனை. எதிர்கால நம்பிக்கை. |
| தனுசு  | நண்பர்களிடம் மனக்குறை பகிர்வீர்கள். புதிய நம்பிக்கை. பணவரவு அதிகரிக்கும். செலவுகளில் சிக்கனம். கடன் தீரும். போக்குவரத்தில் கவனம். புத்திரரால் பெருமை. |
| மகரம்  | சந்தோசம் தரும் நிகழ்வுகள். புத்துணர்வும், செயல் திறனும் வளரும். தேவையான பணவசதி. அரசு வகையில் உதவி. பொருள் வாங்குவீர்கள். தெய்வ வழிபாடு. |
| கும்பம்  | பாராட்டும் பரிசுகளும் வரும். தேவையற்ற பணச் செலவும் இருக்கும். தொழிலில் கூடுதல் உழைப்பு அவசியம். உடல்நலத்தில் கவனம். வெளியூரிலிருந்து அனுகூலம். |
| மீனம்  | எதிர்ப்புகள் இருக்கும். விலகிப்போவதால் உங்கள் பணி முடிக்கலாம். பணவரவு முக்கிய செலவுக்குப் போகும். தூக்கமின்மை ஏற்படலாம். குடும்பத்தினர் வகையில் தொல்லை. |

## 10) தமிழ்ச் சொற்களுக்கு ஆங்கிலத்தில் தருக

1) இரவு உணவு : ..................................

2) தேங்காய் : ..................................

3) தேசியக்கொடி : ..................................


4) தேசிய உடை : ..................................

5) தாய் நாடு : ..................................

## 11) தொடர்புபடுத்துக

| | |
|---|---|
| 1) அயடீன் குறைபாடு | சுதந்திர தினம் |
| 2) உயிர்ச்சத்து A | தவிடு நீக்காத அரிசி |
| 3) தேசிய விழா | முஹந்தரம் |
| 4) முஸ்லிம் புத்தாண்டு | கண்டக்கழலை |
| 5) விற்றமின் B | மாலைக்கண் |

## 12) ஒளி தெளிப்படையும் சரியான விதத்தைக் காட்டும் படத்தைத் தெரிவு செய்க.






# தரம் - 2-3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை




# கல்வி முரசு

**சுற்றாடல்** முன்னணி ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

## 01) பின்வரும் சந்தர்ப்பங்களில் சூழலில் அவதானிக்கக்கூடிய மாற்றங்களை எழுதுக.

| சூரியன் உதிக்கும்போது | சூரியன் மறையும்போது |
|---|---|
| 1. .................... | .................... |
| 2. .................... | .................... |

## 02) பின்வரும் படங்களின் பெயர்களை எழுதுங்கள்

.................... .................... ....................

## 03) சுருக்கமான விடை எழுதுங்கள்

1. மீனவர்கள் பயன்படுத்தும் உபகரணங்கள் 2 எழுதுங்கள்.

..................................................

..................................................

2. மனிதர்கள் வேலை செய்யும் இடங்கள் 2 எழுதுங்கள்.

..................................................

..................................................

3. வேலை செய்வோர் சுய பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தும் பொருட்கள் சில எழுதுங்கள்

..................................................

..................................................

4. சூரிய ஒளியை தெறிப்படையச் செய்யக்கூடிய பொருள் ஒன்று எழுதுக.

..................................................

..................................................

**04) பின்வருவனவற்றிற்கு உதாரணங்கள் இரண்டு எழுதுக.**

1. கிழங்கு வகைகள் :
   1) ........................................
   2) ........................................
2. பழவகைகள் :
   1) ........................................
   2) ........................................
3. கீரை வகைகள் :
   1) ........................................
   2) ........................................
4. மூலிகை வகைகள் :
   1) ........................................
   2) ........................................

**05) பின்வரும் நிகழ்வுகள் தொடர்பான உங்கள் விருப்பத்தை எழுதுங்கள்.**

**(விருப்பம் / விருப்பம் இல்லை என எழுதவும்)**





1. பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றல்
   ........................................
2. நண்பர்களுடன் சேர்ந்து விளையாடுதல்
   ........................................
3. அசுத்தமான ஆடைகள் அணிதல்
   ........................................
4. பல நாட்கள் குளிக்காது இருத்தல்
   ........................................
5. இனிப்பு சுவையுடைய பண்டங்களைச் சாப்பிடல்
   ........................................

**06) பின்வரும் கூற்றுக்களை வாசித்து சரி (√) பிழை (x) இடுக.**

1. சமநிலையைப் பேணியவாறு நடக்கக்கூடாது. (      )
2. யுனிசெவ் மாணவர்களுக்கு உதவும் நிறுவனமாகும். (      )
3. முகபாவம் மூலம் கருத்துக்களை வெளியிட முடியாது. (      )
4. இணையம் மூலம் தகவல்களை அறிய முடியாது. (      )



**07) பின்வரும் படங்களின் பெயர்களை எழுதுங்கள்.**

.................... .................... .................... ....................

**08) சுருக்கமான விடை எழுதுங்கள்.**

1) வாகனங்களால் சூழலிற்கு ஏற்படும் தீங்கான விளைவுகள் 2 எழுதுக.
   1) ........................................
   2) ........................................
2) பொதுப் போக்குவரத்து சாதனங்கள் இரண்டு தருக.
   1) ........................................
   2) ........................................
3) சமய சடங்குகளுக்குப் பயன்படும் பூக்கள் இரண்டு தருக.
   1) ........................................
   2) ........................................
4) நீர்சேரும் இடங்களில் நாட்டக்கூடிய தாவரங்கள் 2 எழுதுக.
   1) ........................................
   2) ........................................
5) வீட்டுத்தோட்டப் பயிர்களினால் கிடைக்கும் நன்மைகள் 2 எழுதுக.
   1) ........................................
   2) ........................................

**09) சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1) சிற்றுண்டி வகைகளுள் ஒன்று (பிட்டு, தோசை, லட்டு)
2) தூய்மையான நீர் (ஆற்று நீர், மழை நீர், கிணற்று நீர்)
3) அதிகளவு புரதத்தைக் கொண்ட உணவு (நெத்தலி, பாண், கரட்)
4) யேசுவின் பிறப்பைக் கொண்டாடும் விழா (பெரியவெள்ளி, நத்தார், ஈஸ்ரர்திருநாள்)
5) இலங்கை சுதந்திரம் பெற்றது (போர்த்துக்கீசரிடம், ஒல்லாந்தரிடம், ஆங்கிலேயரிடம்)

# மத்திய அரசின் நடவடிக்கை ஆதரவு தெரிவித்தது காங்கிரஸ்



(புதுடில்லி)

டில்லியில் நேற்று நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் மத்திய அரசு மேற்கொண்டு வரும் டீசல் விலை உயர்வு, காஸ் கட்டுப்பாடு, சில்லறை வர்த்தகத்தில் அன்னிய முதலீடு உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் ஆதரிப்பது என முடிவு செய்யப்பட்டது.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு அளித்து வந்த ஆதரவை திரிணாமூல் காங்கிரஸ் திரும்பப் பெற்ற நிலையில், முதல் முறையாக காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டம் நேற்றுக் கூடியது. இக்கூட்டத்துக்கு காங்கிரஸ் ஆளும் அனைத்து மாநில முதல்வர்களும் அழைக்கப்பட்டனர்.

காங்கிரஸ் பொதுச்செயலாளராக இருக்கும் ராகுல் காந்திக்கு கூடுதலாக கட்சியிலும் ஆட்சியிலும் முக்கியத்துவம் கொடுப்பது பற்றியும் விவாதிக்கப்பட்டது. மேலும் மத்திய அரசு மீதான நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டு ஊழல் குற்றச்சாட்டை சமாளிப்பது எப்படி என்றும் நேற்றைய கூட்டத்தில் ஆலோசனை நடத்தப் பட்டது.

இந்தக் கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜனார்த்தன் திவேதி, நாட்டின் பொருளாதார நிலைமைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் பிரதமர் மன்மோகன்சிங் விவரித்ததாகக் கூறினார். மேலும் பிரதமர் மன்மோகன்சிங் மேற்கொண்டு வரும் அனைத்துப் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளையும் ஆதரிக்கவும் முடிவு செய்யப்பட்டது என்றார்.

## கருணாநிதிக்கு பாரதரத்னா விருது தி.மு.க.வே விண்ணப்பித்த வினோதம்!



(புதுடில்லி)

தி.மு.க தலைவரான கருணாநிதிக்கு நாட்டின் உயரிய விருதான பாரதரத்னா விருதை வழங்க வேண்டும் என்று தி.மு.க.வே குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியிடம் விண்ணப்பித்துள்ளது.

குடியரசுத் தலைவரிடம் கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பத்தில், 55 ஆண்டுகால பொதுவாழ்க்கைப் பங்களிப்புக்காக கருணாநிதிக்கு பாரத ரத்னா விருதை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த 8 பேர் இதுவரை பாரத ரத்னா விருது பெற்றுள்ளனர்.

தற்போது வினோதமாக தி.மு.க.வே அந்தக் கட்சியின் தலைவரான கருணாநிதியின் பெயரை அவருக்கு மிகவும் வேண்டியவரான குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியிடம் விண்ணப்பித்திருப்பது வினோதமாகவே பார்க்கப்படுகிறது!

# இஸ்ரோவுக்குள் நுழைந்த மர்மப்பெண்ணால் பரபரப்பு

(இஸ்ரோ)

இந்திய பாதுகாப்பு வலயத்தில் உள்ள விண்வெளி ஆராய்ச்சி கழகத்திற்குள் (இஸ்ரோ) ஒரு மர்மப்பெண் நுழைந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பெண்ணிடம் பாதுகாப்பு படையினர் துருவித், துருவி விசாரணை நடத்தி வருகின்றனர். பெங்களூருவில் விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் விஞ்ஞானிகள் பங்கேற்ற கூட்டம் காலையில் நடந்தது.


இந்தக் கூட்டத்தில் பங்கேற்க பெண் ஒருவர் வந்த போது அவரிடம் குறித்த விபரங்களை பாதுகாப்பு படையினர் கேட்ட போது முன்னுக்கு பின் முரணாக தகவல்களை தெரிவித்தார். இதனால் சந்தேகம் அடைந்த அவர்கள் அப்பெண்ணை விசாரணை அறைக்கு கொண்டு சென்று விசாரித்து வருகின்றனர்

பி.எஸ்.எல்.வி- 10 ரொக்கெட்டை ஏவும் பணி மும்முரமாக நடைபெற்று வரும் இந்த நிலையில் போலி அடையாள



அட்டையுடன் முன் பின் தெரியாத பெண் ஒருவர் வளாகத்திற்குள் நுழைய முயன்றார் என்பது பாதுகாப்பு அச்சங்களை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் விஞ்ஞானி ஒருவர் பயங்கரவாத அமைப்புகளான லஸ்கர் மற்றும் ஜிஹாத் அல் இஸ்லாமி ஆகியவற்றுடன் தொடர்பிருப்பதாக கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இந்தச் செய்தி பாதுகாப்பு குறித்த எச்சரிக்கை மணிகளை ஒலிக்கச் செய்துள்ளதாகச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



## மத்திய அரசுக்கெதிராக பாரியளவில் போராட்டம்

### திரிணாமூல் காங்கிரஸ் அறிவிப்பு



இந்திய மத்திய அரசாங்கத்துக்கு எதிரான பாரிய போராட்டங்களை நடாத்தப்போவதாக திரிணாமூல் காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்துக்கு கட்சியின் தலைவரும் மேற்கு வங்க முதலமைச்சருமான மம்தா பனர்ஜி தலைமை தாங்கவுள்ளார்.

டீசல் உள்ளிட்ட எரிபொருட்களின் விலையேற்றம், பொருளாதார மறுசீரமைப்பு ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் நடாத்தப் படவுள்ளது.

மக்களுக்காகவே தாம் குரல் கொடுப்பதாகவும், தமது குரலே மக்களின் குரல் எனவும் முதலமைச்சர் மம்தா பனர்ஜி குறிப்பிட்டுள்ளார்.

இந்திய மத்திய அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆளும் கட்சியிலிருந்து அவரது கட்சி வெளியேறியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

## இந்திய மீனவர் மீதான தாக்குதல் தடுப்பதற்கான நடவடிக்கை என்ன?

### சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி

இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப் படுவதாகக் கூறப்படும் தாக்குதல்களிலிருந்து இந்திய மீனவர்களைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இந்திய கரையோர காவல் படையினருக்கு சென்னை உயர் நீதிமன்றம் (மேல் நீதிமன்றம்) உத்தரவிட்டுள்ளது.

மீனவர்களைப் பாதுகாக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றை விசாரித்தபோதே நீதிபதிகள் வினோத் கே. சர்மா மற்றும் ஏ. செல்வம் ஆகியோர் இந்த உத்தரவைப் பிறப்பித்தனர்.

அத்துடன், இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைவதைத் தடுப்பதற்கும் தாக்கப்படாமல் இருப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விபரமான அறிக்கை சமர்ப்பிக்குமாறு இந்திய மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களை நீதிபதிகள் பணித்துள்ளனர்.

"சர்வதேச கடல் எல்லையை அவர்கள் தாண்டாமலிருப்பதை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும். அவர்களைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை எமக்கு கூறுங்கள்" என நீதிபதிகள் தெரிவித்தனர்.

மீனவர்களுக்குப் பாதுகாப்பளிக்கப்பட்டால் அவர்கள் ஏன் கொல்லப்படுகிறார்கள் என மேலதிக சொலிசிற்றர் ஜெனரலிடம் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். அப்போது, இந்திய மீனவர்களை கொல்வதாக கூறப்படுவதை இலங்கை கடற்படையினர் மறுப்பதாக மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் பதிலளித்தார்.

அதேவேளை, இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களுக்கு பாதுகாப்பளிக்குமாறு அரசாங்கத்திற்கு உத்தரவிடுவது சாத்தியமற்றது எனவும் நீதிபதிகள் தெளிவாகக் கூறினர்.

வாழ்க வளமுடன்
தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்
பெயர் : பா. நிலா
முகவரி: இரணைப்பாலை
அகவை 7 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



வாழ்க வளமுடன்
தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்
பெயர் : இ. றொஜஸ்ட்
முகவரி: குருநகர், யாழ்ப்பாணம்.
அகவை 3 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



# பாகிஸ்தான் ஜனாதிபதியை நண்பராக்கிய ஹிலாரி



(நியூயோர்க்)

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியை நேற்று முன்தினம் சந்தித்தார். இதன்போது அமெரிக்காவுக்கு எதிரான சமீபத்திய போராட்டத்தை சிறப்பாகக் கையாண்டதற்காக சர்தாரிக்கு, ஹிலாரி நன்றி தெரிவித்தார். அமெரிக்காவுக்கு எதிராக பாகிஸ்தானில் நடத்தப்பட்ட போராட்டம் பற்றி பேசிய சரதாரி அது நமக்கு கடினமான காலம் என்றார். சர்தாரியை தனது நண்பர் எனப் புகழ்ந்த ஹிலாரி, அவரை பாகிஸ்தானுக்கான அமெரிக்க தூதர் ரிச்சர்டிற்கு அறிமுகம் செய்துவைத்தார்.

சமீபத்தில் அமெரிக்காவில் வெளியிடப்பட்ட இஸ்லாமியர்களுக்கு எதிரான திரைப்படத்துக்கு எதிராக பாகிஸ்தான் உள்ளிட்ட முஸ்லிம் நாடுகளில் பெரும் போராட்டம் நடந்தது. பாகிஸ்தானில் நடத்தப்பட்ட போராட்டத்தில் வன்முறை வெடித்ததில், 21 பேர் கொல்லப்பட்டனர். 200-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என பது குறிப்பிடத்தக்கது.

# கோலாகலமாக நடந்தேறிய புருனே சுல்தான் மகள் திருமணம்



உலகின் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவரான புருனே சுல்தானின் 5ஆவது மகள் ஹபிசாவுக்கு கோலாகலமாக திருமணம் நடந்தது.

32 வயதாகும் ஹபிசா, மன்னர் அலுவலகத்தில் அதிகாரியாக பணியாற்றி வந்தார்.

இவர் பிரதமர் அலுவலக ஊழியரான முகமது ருசானியை திருமணம் செய்து கொண்டார்.

இவர்களது திருமணம் 1700 அறைகள் கொண்ட மன்னர் அரண்மனையில் கோலாகலமாக நடந்தது.

திருமண விழாவில் தாய்லாந்துப் பிரதமர், மலேசிய பிரதமர், கம்போடியா பிரதமர் உட்பட ஏராளமான வெளிநாட்டுத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

புருனே சுல்தானுக்கு 3 மனைவிகள் மூலம் 5 மகன்கள், 7 மகள்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்ச்சைக்குரிய படத்திற்கு எதிர்ப்பு நைஜீரியாவில் அமைதிப் பேரணி



(கடுனா)

அமெரிக்காவில் வெளியான சர்ச்சைக்குரிய திரைப்படத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நைஜீரியாவில் பெண்கள், குழந்தைகள் என ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் போராட்டம் நடத்தினர்.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் உள்ள கடுனா நகரில் நடந்த இப்போராட்டம், எவ்வித வன்முறைகளும் இல்லாமல் அமைதியாக நடந்தது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமெரிக்க கொடியையும், ஜனாதிபதி பராக் ஒபாமாவின் புகைப்படங்களையும் எதிர்த்து தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இது தவிர இங்கிலாந்து, இஸ்ரேல் நாடுகளின் கொடிகளையும் இழிவுபடுத்தினர்

# பாகிஸ்தானில் வெள்ளப்பெருக்கு

# ஏழு இலட்சம் மக்கள் பாதிப்பு

பாகிஸ்தானின் தென்மேற்குப் பகுதியில் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் குறைந்தபட்சம் 51பேர் உயிரிழந்துள்ளதாகவும் சுமார் 7 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பலோசிஸ்தான் மாகாணத்தில் 51 பேர் உயிரிழந்துள்ளனர்.



பாகிஸ்தான் பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப் மூன்று மாவட்டங்களை பேரனர்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளாகப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

இப்பகுதிகளுக்காக 2,600 மில்லியன் பாகிஸ்தான் ரூபா பெறுமதியான உதவித் திட்டங்களையும் அவர் அறிவித்துள்ளார்.

பலோசிஸ்தான் மாகாணத்தில் செப்ரெம்பர் 11 ஆம் திகதி 32 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக மழைபெய்தது. 432 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 13 மாவட்டங்களில் 380,000 ஏக்கர் பரப்பளவிலான பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. 1,788 மாடுகள் இறந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# விமானந் தாங்கி போர்க்கப்பலை கடற்படையில் இணைத்தது சீனா


(பீஜிங்)

அமெரிக்காவுடன் போட்டி போடும் அளவுக்கு இராணுவத்தை வளர்த்து வரும் சீனா இப்போது முதன் முதலாக கடற்படையில் விமானந்தாங்கி கப்பலைச் சேர்த்துள்ளது. இந்தக் கப்பல் ரஷ்யாவுக்கு சொந்தமானதாகும். சோவியத்ஒன்றியம் 1991ஆம் ஆண்டு உடைந்த போது அந்தக் கப்பல் உக்ரைனுக்கு சொந்தமானது. 2002-ம் ஆண்டு அந்தக் கப்பலை சீனா விலைக்கு வாங்கி புதுப்பித்தது.

சீனாவில் உள்ள டேலியன் கப்பல் கட்டும் துறையில் பல ஆண்டுகளாக புதுப்பிப்பு பணி நடந்து முடிந்து, இப்போது சீன கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கப்பலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சிப் பணிக்காக பயன்படுத்தப் போவதாக சீனா கூறியுள்ளது. ஆனால் சீனா சமீபகாலமாக அண்டை நாடுகளான ஜப்பான், வியட்னாம், பிலிப்பைன்சுடன் கடல் நிலபரப்பு தொடர்பாக மோதல் போக்கை கடைப்பிடித்து வருகிறது. எனவே இந்தக் கடல் பகுதியில் கண்காணிப்பதற்காகவும் அந்த நாடுகளை அச்சுறுத்தும் வகையிலும் கப்பலைப் பயன்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


கப்பல் 990 அடி நீளம் கொண்டதாகும் 36 விமானங்கள், 16 ஹெலி



கொப்டர்களை இதில் நிறுத்தி வைக்கலாம். 3 ஆயிரம் வீரர்கள் கப்பலில் தங்கியிருக்கும் வசதி உள்ளது. ரஷ்யாவிடம் இந்த கப்பல் இருந்தபோது வர்யாக் என்று பெயரிடப்பட்டு இருந்தது. சீனா இதற்கு ஷிலேங் என்று பெயரிட்டுள்ளது

# ஜப்பானிய, தாய்வான் படையினர் தண்ணீர் பீரங்கிப் பிரயோகம்

கிழக்கு சீனக் கடல்பகுதியிலுள்ள சர்ச்சைக்குரிய தீவுகள் அமைந்துள்ள, பகுதியில் ஜப்பானிய கரையோரக் காவல் படைக்கப்பல்களும் தாய்வான் கரையோரக் காவல் படையின் கப்பல்களும் நேற்று பரஸ்பரம் பீரங்கிப் பிரயோகம் மேற்கொண்டன.



இத்தீவுகள் ஜப்பானியர்களால் சேன்காகு என அழைக்கப்படுகிறது. சீனாவில் டியாயோ எனவும் தாய்வான் டியாவோயு தாய் எனவும் அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

டசின் கணக்கிலான தாய்வான் மீன்பிடிப் படகுகள், தாய்வான் கரையோரக் காவல் படைக் கப்பல்களின் துணையுடன் இத்தீவுப் பகுதிக்கு வந்த போது இந்த மோதல் இடம் பெற்றுள்ளது.

தாய்வான் மீன்பிடிப் படகுகள்மீது ஜப்பானிய கரையோர காவல் படையினர் தண்ணீர் பீரங்கிப் பிரயோகம் மேற்கொண்டபோது, தாய்வான் படையினரும் பதிலுக்கு தண்ணீர் பீரங்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்

# ஈரான் மீது தாக்குதல் நடந்தால் யூத நாடு தரைமட்டமாகும்

## எச்சரிக்கிறார் ஈரான் இராணுவத்தளபதி

இஸ்ரேல் எச்சரிக்கைக்கு அப்பால் ஈரான் மீது தாக்குதல் நடத்தும் என ஈரான் புரட்சிப் படை தளபதி மொஹமட் அல் ஜபாரி குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு நிகழ்ந்தால் யூத நாடு தரை மட்டமாகும் என அவர் எச்சரித்தார். எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு முன் ஈரான் மீது இஸ்ரேல் வான் தாக்குதல் நடத்தும் என சந்தேகங்கள் ஏற்பட்டுள்ள நிலையிலேயே ஈரான் இராணுவம் இவ்வாறு கூறியுள்ளது.

'அவர்களது எச்சரிக்கை இஸலாம் மற்றும் ஈரான் மீது எவ்வளவு பகையுணர்வுடன் இருக்கிறார்கள் என்பதைக் காண்பிக்கிறது. இந்தப் பகை ஒரு மோதலாக மாறும்' என்று அல் ஜபாரி நடந்த ஊடக மாநாட்டில் கூறியதாக ஈரானின் இஸ்னா செய்திச் சேவை கூறியுள்ளது.



'யுத்தம் ஒன்று ஏற்படுவது தெளிவானது. ஆனால் அது எப்போது எங்கே நிகழப் போகிறது. என்பது தெரியாது அதற்காக நாம் எமது பாதுகாப்பைப் பலப்படுத் 'தியுள்ளோம்' என்றார்

# அடுத்த கட்டமாக 600 இலங்கையர் பிரிட்டனிலிருந்து நாடு கடத்தல்

(கொழும்பு)

பிரித்தானியாவில் தஞ்சம் கோரியுள்ள 600 இலங்கையர்களை, மீண்டும் இலங்கைக்கு நாடுகடத்த அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

போர்ச்சூழல் உட்பட பல் வேறு காரணங்களைக் கூறி பிரித்தானியாவில் குடியுரிமையைக் கோரிய அவர்களின் கோரிக்கையை பிரித்தானியா நிராகரித்துள்ளது.

அத்துடன், தற்போது இலங்கையில் சமாதானம் நிலவுவதால், இலங்கையர்கள் பிரித்தானியாவில் குடியுரிமை கோர வேண்டிய அவசியம் இல்லையென்று தெரிவித்துள்ளதுடன், இந்த 600 போரும் எதிர்வரும் நான்கு மாதங்களிற்குள் இலங்கைக்கு திருப்பி அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

## இடம்பெயர்....

நோக்கிய ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வாக இது அமைகின்றது. ஆயினும் தமது வீடுகளுக்கு திரும்ப முடியாதுள்ள மக்கள் இன்னும் உள்ளனர். இந்த பிரச்சினைக்கு அவசரமாகத் தீர்வு காண வேண்டிய தேவையுமுள்ளது. மெனிக் பாமிலிருந்து முல்லைத்தீவிலுள்ள கேப்பாபிலவுக்குத் திரும்பும் 110 குடும்பங்களை சேர்ந்த 346 மக்கள் பற்றி ஐக்கிய நாடுகள் விசனமடைந்துள்ளது.

இவர்களினால் தமது சொந்த வீடுகளுக்கு செல்ல முடியாது. இந்த வீடுகளில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர்.

இவர்களினால் அரசாங்கம், அரசுக்கு சொந்தமான வேறு காணிகளில் குடியமர்த்தி வருகின்றது. ஆனால் இடம்பெயர்ந்த மக்கள் தமது எதிர்காலத்தை தாமாகவே தீர்மானிக்க வேண்டும். அத்துடன் மீள்குடியேற்றத்தை திட்டமிட்டு முகாமைத்துவம் செய்பவர்களாகவும் அவர்கள் இருக்க வேண்டும் என சுபினே நந்தி தெரிவித்துள்ளார். அரசாங்கத்தினால் நடத்தப்பட்ட மெனிக் பாம் முகாமானது 2009 மே மாதம் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது தப்பிவந்த ஆயிரக்கணக்கான மக்களுக்காக ஸ்தாபிக்கப்பட்டது. அதன் உச்ச கட்டத்தில் 700 ஏக்கர் பரப்பளவில் 225,000 பேர் இம்முகாமில் இருந்தனர்.

கூடாரங்கள், உணவு, நீர், சுகாதார வசதிகள், பாடசாலைகள், ஆரம்ப மருத்துவ வசதிகள் முதலான அடிப்படை வசதிகளை சர்வதேச அமைப்புகள் வழங்கின. மோதலிலிருந்து நிலைத்திருக்கக் கூடிய சமாதானம் மற்றும் இடம்பெயர்ந்த ஆயிரக்காணக்கான மக்களை மீளக்குடியேற்றம் செய்வதில் அரசாங்கத்தின் ஆழ்ந்த கவனம் என்பவற்றின் அடையாளமாக இந்த முகாம் மூடப்பட்ட நடவடிக்கை உள்ளது.

வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்திலும் தமது உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் அல்லது நலன்புரி நிலையங்களில் இன்னும் இடம்பெயர்ந்த நிலையில் வாழும் பலர் உள்ளனர். இவர்கள் பல ஆண்டுகளாக இடம்பெயர்ந்து வாழ்கின்றனர். இவர்களுக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என நந்தி கூறியுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லணிக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை இலங்கை அதிகாரிகள் முழுமையாக அமுல்படுத்த வேண்டும் எனவும் சுபினே நந்தி கோரியுள்ளார்.

## அரச காணித்...

செய்துள்ளனர். இதேவேளை, இக்காணி நல்லூர் பிரதேச சபைக்குரியது எனவும், இது பற்றி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், நல்லூர் பிரதேச செயலர் ஆகியோருக்கு ஏற்கனவே அறிவித்திருப்பதாகவும் பல வருடங்களாக நல்லூர் பிரதேச சபைக்கே இக்காணி சொந்தமாக இருப்பதாகவும் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இக்காணிக்குள் சிறுவர் பூங்கா ஒன்றை அமைப்பதற்காக நல்லூர் பிரதேச சபை ஏகமனதாகத் தீர்மானம் எடுத்திருந்தது. அதற்காக பல நடவடிக்கைகளை எடுத்த நிலையில் மும்மொழிகளிலும் எழுதப்பட்ட நல்லூர் பிரதேச சபையின் சிறுவர் பூங்கா என்னும் பெயர்ப் பலகையை காணிக்குள் நாட்டியிருந்தது. ஆனால் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இப்பலகையைக் காணவில்லை.

இது தொடர்பாகப் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன், வெள்ளி ஆகிய நாட்களில் நல்லூர் பிரதேச சபைக்கு வந்த இரண்டு இராணுவ அதிகாரிகள் இக்காணி அரசுக்கு சொந்தமானது எனத் தெரிவித்ததுடன், நல்லூர் பிரதேச சபைக்கு அக்காணி சொந்தமானதல்ல எனவும் கூறியதாகத் தவிசாளர் குறிப்பிட்டார்.

எக்காரணம் கொண்டும் சபைக்கு சொந்தமான இக்காணியை எவருக்கும் விட்டுக்கொடுக்க முடியாது எனவும் தவிசாளர் மேலும் தெரிவித்துள்ளார். (137)

## யாழ். இந்து ஆரம்பப்...

பாடசாலையிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 308 மாணவர்களில் 143 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இந்தப் பெறுபேறு மாணவர்களின் சித்தி வீதத்தில் 46 ஆகவுள்ளது.

இதேவேளை இந்த தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு டொன் பொஸ்கோ வித்தியாலயத்திலிருந்து தோற்றிய ஜெராட் ஸ்ரீபன் றெமியூசன் 188 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 8 ஆம் இடத்தையும், பாடசாலை ரீதியில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

அத்துடன் 185 புள்ளிகளைப் பெற்ற சௌந்தர்ராஜன் குருசேவ், அஸ்வினி சிவச்சந்திரன் ஆகிய இருவரும் பாடசாலை மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

இந்தப் பாடசாலையிலிருந்து குறித்த பரீட்சைக்குத் தோற்றிய 210 மாணவர்களில் 118 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இந்தப் பாடசாலையின் சித்தி வீதம் 56 ஆகவுள்ளது.

மேலும் யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையிலிருந்து தோற்றிய 198 மாணவர்களில் 19 பேர் சித்தியுடைந்துள்ளனர். இவர்களில் மகேந்திரராசா வைஷ்ணவி 180 புள்ளிகளையும், அன்பழகன் சுவியா 177 புள்ளிகளையும், சற்குணானந்தசர்மா சுவஸ்யந்தி 179 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

இதேவேளை, யாழ். மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலையிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 79 மாணவர்களில் 10 பேர் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் 177 புள்ளிகளைப் பெற்று பி.குணராஜ் பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தையும், 171 புள்ளிகளைப் பெற்று எஸ்.திருமேனன், ஆர்.விஜயராஜ் ஆகியோர் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

ஆனைப்பந்தி அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 60 மாணவர்களில் 9 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இதில் 162 புள்ளிகளைப் பெற்று சிவகுமார் கவியழகன் பாடசாலையில் முதல் நிலையையும், 157 புள்ளிகளைப் பெற்று மாரியப்பன் தமிழ்ப்பிரியன் மற்றும் 155 புள்ளியினைப் பெற்று கிருஷ்ணமூர்த்தி செந்தூரன் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை வெளியாகியுள்ள பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களின் சித்திவீதத்தின் அடிப்படையில் டொன் பொஸ்கோ வித்தியாலயம் முன்னிலை வகிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மாவட்ட வெட்டுப்புள்ளி விபரங்கள் வருமாறு:

கொழும்பு சிங்களம் - 152 தமிழ் - 149, யாழ்ப்பாணம் -148, கிளிநொச்சி - 146, மன்னார் - 146, வவுனியா சிங்களம் -144, தமிழ் - 146 முல்லைத்தீவு -145, மட்டக்களப்பு - 147 அம்பாறை சிங்களம் - 145, தமிழ் -147, திருகோணமலை சிங்களம் 144, தமிழ் - 147

இதேவேளை, பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் விடைத்தாள் மீள்திருத்தத்திற்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (பா,இ)

## மக்களின் வாழ்வை...

முரண்பாடு முடிவுற்ற பின்னர், அதாவது மூன்றாண்டுகளுக்குப் பின்னர் புதிய சவால்களை எதிர்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் குடியேற்றப்படுவதற்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தியுடன் இணைந்ததான பாரிய மீள்குடியேற்றத் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டியுள்ளது.

இவை தவிர அவர்களின் வாழ்வாதார தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. அடிப்படை விவசாய உபகரணங்கள் டிராக்ரர்கள், விதைகள், பசளை, மீன்பிடி உபகரணங்கள், இலகு கடன்கள் என்பவற்றை அவர்கள் தமது வாழ்வாதாரத்தை மீள ஆரம்பிப்பதற்கென வழங்கப்படவுள்ளன.

இதனைக் கருத்திற் கொண்டு, அரசாங்கம் மாபெரும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தைரியமிக்க தலைமையில் நலன்புரி நிலையங்களில் விடப்பட்ட பெருந்தொகையிலான உள்ளக இடப்பெயர்வுக்கு உள்ளானோருக்கு நலன்புரி சேவைகளை ஏற்பாடு செய்ததுடன் வடமாகாணத்தில் இத்தகைய சவால்களை சமாளிப்பதற்கென கூட்டு மொத்தமாக அழைக்கப்படும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டன.

மகிந்த சிந்தனையில் அடங்கியுள்ளவாறு, மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நோக்கு, கௌரவ ராஜபக்ஷவின் வழிகாட்டலும் இல்லாவிடத்து இந்த மாவட்டங்களில் அபிவிருத்தி, முன்னேற்றம், மற்றும் சுபீட்சம் என்ற வார்த்தைகள் அகராதியில் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

இந்த குறுகிய மூன்று ஆண்டுகாலத்தில், அரசாங்கம் இடம் பெயர்ந்த மக்களை எவ்வவளவு விரைவாக குடியேற்ற முடியுமோ அவ்வளவு விரைவில் மீளக்குடியமர்த்தியுள்ளது என்பது மட்டுமல்ல, வீதிகள், பாலங்கள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளையும் ஒப்பேற்றியுள்ளன; இன்னமும் அப்பணிகள் தொடருகின்றன.

ஜனாதிபதி புதுடில்லிக்கு விஜயம் செய்த வேளை, இந்திய அரசாங்கம் 50,000 வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஒப்புக்கொண்டது. இது மேதகு ஜனாதிபதியின் ஆளுமைமிக்க முயற்சியாகும் என்பதை இங்கு தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். புதுடில்லி சென்ற தூதுக்குழுவில் நானும் ஒருவராக இருந்தேன். அங்கு இதனை முன்னெடுப்பதற்கு மேதகு ஜனாதிபதி மேற்கொண்ட அயராத முயற்சியை நானும் நேரில் கண்டேன். இந்த 50,000 வீடுகளில் முன்னோடியாக ரூபா ஆயிரம் வீடுகள் ஒவ்வொன்றும் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் செலவில் வீடுகள் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், இந்திய அரசாங்கம் வடபகுதி ரயில் பாதையை புனரமைப்பதற்கு 382.4 மில்லியன் அமெரிக்க டொலர்களும் அத்துடன் கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தை நிறுவுவதற்கும் விவசாய பீடத்தை இடம் மாற்றுவதற்குமென 4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்படும். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கென கிளிநொச்சியில் 168 ஏக்கர் காணியை விடுவிக்க உதவிய மேதகு ஜனாதிபதிக்கு மீண்டும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். கிளிநொச்சியில் பல்கலைக்கழக கட்டட தொகுதியில் கேட்போர் கூடம் ஒன்றுக்கும், விளையாட்டரங்கு ஒன்றிற்கும் போதிய நிதி உதவியை ஏற்பாடு செய்யுமாறு இந்தச்சந்தர்ப்பத்தில் மேதகு ஜனாதிபதியிடமும் அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடமும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

இந்த ஆண்டின்போது அரசாங்கம் வெளிநாட்டு கடப்பாடுகளை பெற்றுக் கொண்டமை அபிவிருத்தியை மேலும் மேற்கொள்வதற்கான வழிமுறையாகும். ஜப்பானிய அரசாங்கம் கிளிநொச்சி நீர் விநியோக திட்டத்தினைப் புனரமைப்பதற்கென 8.3 மில்லியன் அமெரிக்க டொலர் செலவு செய்கிறது. வடக்கில் 5.3 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் ஜேர்மனி தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்கவுள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நீர்பாசன, விவசாய வாழ்வாதார அபிவிருத்திக்கு உணவு மற்றும் விவசாய நிறுவனம் 4.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிடவுள்ளது. இரண்டு நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டத்திற்கென 22.0 மில்லியன் அமெரிக்க டொலர் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திடமிருந்து கிடைக்கவுள்ளது. இவற்றுக்கான ஒப்பந்தங்கள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன.

வெளிநாடுகள் பல இலங்கையின் உண்மை நிலையை நன்கு உணரத் தவறியுள்ளன. பாதிக்கப்பட்ட வடபகுதியின் உண்மை நிலைவரத்தை புரிந்து கொள்ளாமல் செயற்படுகின்றன. வடக்கில் குறுகிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நேரில் வந்து பார்த்தால் யதார்த்தம் புரியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நாகரிகமற்ற...

வினவினார். அதற்குப் பதில் கூற முடியாமல் தவிசாளரும் உப தவிசாளரும் அநாகரிகமான முறையில் வாய்த்தகராறில் ஈடுபட்டனர். பின்பு உபதவிசாளர் எழுந்து கௌரவ உறுப்பினர் கனகராசனை சபையை விட்டு வெளியேற்ற வேண்டுமென்றும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கூறி அவரை சபையிலிருந்து வெளியேறுமாறு முன்மொழிந்தார்.

கௌரவ உறுப்பினர் சபாநாயகம் எழுந்து அதனை ஆமோதிப்பதாகக் கூறினார். இதற்கு மற்ற அனைத்து உறுப்பினர்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். பின்பு கௌரவ உறுப்பினர் சிவகுரு பாலகிருஸ்ணன் எழுந்து அனைத்து சபை உறுப்பினர்களின் சம்மதத்தைப் பெற்றுத்தான் அவர் வெளியேற்ற வேண்டும் என்று கூறினார்.

இதற்கிணங்க சபை உறுப்பினர்களிடம் விருப்பம் கோரப்பட்டது. அந்த உடன்பாட்டுக்கமைய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

தவிசாளரும் உப தவிசாளரும் சபாநாயமும் தவிர வேறு எவரும் கனகராசனை வெளியேற்ற சம்மதம் தெரிவிக்கவில்லை.

இதனைப் பொறுக்கமுடியாத தவிசாளர் இவ்விடயத்தில் தனக்கு ஆதரவு கிடைக்கவில்லை என்று கொதித்தெழுந்து தனது கோபத்தை அநாகரிகமான வார்த்தைகளால் உறுப்பினர்களைத் திட்டித் தீர்த்தார்.

அப்போது பாலகிருஸ்ணன் எழுந்து அநாகரிகமான வார்த்தைகளை நிறுத்தும்படி கூற, நீ இதில் சம்பந்தப்பட வேண்டாம். வாயை மூடு என்று பல தடவை கூறினார்.

அப்போது ஐயலிங்கம் எழுந்து தவிசாளரே நீங்கள் தவறான வார்த்தைப் பிரயோகங்களைப் பாவித்து விட்டீர்கள். உறுப்பினரிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்று கூற சபையில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. மன்னிப்புக் கேட்டால்தான் கூட்டத்தில் கலந்துகொள்வோம் எனக் கூறி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மூவரும் வெளியேறினர்.

இவர்களுக்கு ஆதரவாக கனகராசன், இராசதுரை, சிவகுமார் ஆகியோரும் வெளிநடப்பு செய்தனர். மொத்தமாக 6 உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள். சபையிலிருந்த மற்ற உறுப்பினர்களும் வெளியேறா விட்டாலும் சபையில் இருந்து எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னதாக பத்திரிகை ஒன்றில் வந்த செய்தியில் தான் மட்டுமே ஒரே ஒரு பெண் தவிசாளர் என்றும் தான் பெண்களின் அடிமைத்தனத்துக்காக குரல் கொடுப்பேன் என்றும் கூறினார். நீங்கள் யாரின் வழியைப் பின்பற்றி சென்றடையப் போகிறீர்கள் என்று பத்திரிகையாளர் கேட்டதற்கு கூச்சமே இல்லாமல் அன்னை தெரேசாவை பின்பற்றி .செயற்படுவேன் என்று கூறினார். ஆனால் அவரின் நேற்றைய நடவடிக்கையைக் கவனித்தால் அன்னை தெரேசாவின் பெயருக்கே களங்கம் உண்டுபண்ணு வதாகவே தெரிகிறது.

எதனையும் சொல்வது இலகுவாகும். அதை நடைமுறையில் செய்து காட்டுபவர்தான் திறமைசாலியும் புத்திசாலியுமாவார். 11 உறுப்பினர்களைக் கொண்டு வழிநடத்த முடியாத தலைவி எவ்வாறு மக்களை வழிநடத்திச் செல்லப்போகிறார் என்று பிரதேச சபை உறுப்பினர்களும் மக்களும் மனம் வெதும்பினர்.

# தஞ்சம் கோருபவர்களை திருப்பி அனுப்பலாம்

## திஸர சமரசிங்க

(கொழும்பு)

நாட்டில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அவுஸ்ரேலிய தஞ்சக் கோரிக்கையாளர்களை திருப்பி அனுப்புவதற்கு யோசிக்க வேண்டாம் என இலங்கை கடற்படை முன்னாள் தளபதியும், தற்போதைய அவுஸ்ரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகருமான திஸர சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவுக்குள் நுழையும் அகதிகளுள் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனால் அந்நாட்டில் பிரச்சினை என்பது தெளிவாகத் தெரிகின்றது என் அவுஸ்ரேலியாவின் வழக்கறிஞர் சாரா நாதன் தெரிவித்தார்.

மேலும், இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுபவர்களை விசாரணை என்ற பெயரில் அவர்களுக்கு அதிக சித்திரவதை செய்யப்படுவதும், கைது செய்யப்படுவதும் இலங்கையில் நடைபெறுகின்றது எனத் தெரியவருகின்றது என சாரா நாதன் தெரிவித்தமைக்கு மறுப்புத் தெரிவித்த அட்மிரல் திஸர சமரசிங்க, அப்படி எதுவும் நடைபெறவில்லை எனவும், சாராவின் வார்த்தையை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், பல்லாயிரக்கணக்கான விடுதலைப் புலிகளுக்கு புனர்வாழ்வளித்து மீள்குடியேற்றம் செய்து அவர்களை சுதந்திரமாக நடமாடவிட்டிருக்கும் நிலையில் நாடு திரும்பும் தஞ்சக் கோரிக்கையாளர்களை நாம் என்ன செய்வோம் என ஆவேசமாகக் கேட்டார்.

சில தினங்களுக்கு முன்னர் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்ட பதினெண்மரையும் ஒரு பரீட்சார்த்தமாகத்தான் அனுப்பியுள்ளோம் என அவுஸ்ரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் பொவன் தெரிவித்திருந்தார்.

# ரியூசனுக்கு இரண்டு நாள் லீவு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்குப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வலி. வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

வலி. வடக்குப் பகுதியில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களின் உரிமையாளர்கள் 14 பேருடனும் கலந்துரையாடப்பட்டதன் அடிப்படையில் இம் முடிவு எட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு தனியார் கல்வி நிலையங்களை, வெள்ளிக்கிழமைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மூடுவதன் மூலம் பிள்ளைகள் ஆலயங்கள் அறநெறிப் பாடசாலைகளுக்குச் செல்ல முடியும் எனவும் இது பிள்ளைகளை சமூகத்தில் ஒழுக்கமுடையவர்களாக உருவாக்குவதற்கான வழிமுறையாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கூட்டம்

(ஆனைக்கோட்டை)

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் விசேட கூட்டம் இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்குப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதேச சபைத் தவிசாளர் ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (104)

# திவிநெகும திட்டத்திற்கு மேல்மாகாண சபை அங்கீகாரம்

திவிநெகும சட்டமூலத்திற்கு மேல் மாகாண சபை அங்கீகாரமளித்துள்ளது. இச்சட்டமூலம் மேல் மாகாண சபையில் நேற்று வாக்கெடுப்புக்கு விடுப்பட்டபோது சட்டமூலத்திற்கு ஆதரவாக 64 வாக்குகளும் எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் மாகாண சபைகளில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் அண்மையில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# தென்மராட்சி ‘குடி’ மகன்களுக்கு பொலிஸாரால் தொந்தரவு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேச பொலிஸார் அண்மைக் காலமாக பொது இடங்களில் மது போதையில் காணப்படுவோரைக் கைதுசெய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இரவுவேளையில் மது போதையில் பொதுமக்களுக்கு இடைஞ்சல் தரும் வகையில் குழப்பம் விளைவிப்பவர்கள், வீதிகளில் சண்டையிடுவோர், மது அருந்திவிட்டு வாகனம் செலுத்துவோரைக் கைதுசெய்து வருகின்றனர்.

பொலிஸாரால் கைது செய்யப்படுவோர் அருகில் உள்ள வைத்தியசாலைகளில் பரிசோதனை செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படுகின்றனர். கிராமப் புறங்களில் மதுபான விற்பனை முற்றாக நிறுத்தப்பட்டதால் மதுப் பிரியர்கள் சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள மதுபான நிலையங்களில் மதுபானங்களை வாங்கி அருகில் உள்ள மறைவிடங்களில் வைத்து அருந்திவிட்டு அட்டகாசம் செய்வது அதிகரித்துள்ளது. இதனையடுத்தே பொலிஸார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# வெளிநாட்டு சொகுசு வாழ்க்கைக்காகவே தமிழர்கள் பயங்கரவாதத்தை ஆதரிக்கின்றனர்


தங்களதும், தமது பிள்ளைகளினதும் சொகுசு வாழ்க்கையை தக்க வைத்துக் கொள்வதற்காகவே வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் இலங்கையில் மீண்டும் பயங்கரவாதப் போராட்டம் இடம்பெற வேண்டும் என்று விரும்புகின்றனர் என்று ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை முதலமைச்சருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கான ஆலோசகராகவே ஜனாதிபதி என்னை நியமித்துள்ளார். எனவே எனக்கு வாக்களித்த மக்கள் ஒருபோதும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் நியமனத்தை அடுத்து தோன்றியுள்ள நிலைமைகள் குறித்து செய்தியாளருக்கு விளக்கமளிக்கும் செய்தியாளர் மகாநாடு ஒன்று நேற்று முற்பகல் அரசாங்கத் தகவல் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கருத்து தெரிவித்த சிவநேசத்துரை 'சந்திரகாந்தன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

மூன்று இன மக்களும் கிழக்கு மாகாணத்தில் வாழ்கிறார்கள இந்த மாகாண சபைக்கு ஏழு தமிழ் உறுப்பினர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். முடிந்த வரை ஜனாதிபதியும் கிழக்கு மாகாண சபைக்கு முதலமைச்சராக என்னை நியமிக்கவே விரும்பினார். எனினும் தமிழர்களின் பெரும்பான்மை வாக்கு ஆளும் கட்சிக்கு கிடைக்கவில்லை .எனவே ஏனைய கட்சிகளுடன் இணைந்தே ஆட்சியமைக்க வேண்டி ஏற்பட்டது. எனினும் எனக்கு வாகளித்த கிழக்கு மாகாண மக்கள் எவ்விதத்திலும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. கிழக்கு மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கான ஆலோசகராவே ஜனாதிபதி என்னை நியமித்துள்ளார்.



தமிழ் ஊடகங்களும் தேர்தலின் போது தமிழரசுக் கட்சிக்கு கண்மூடித்தனமான ஆதரவை வழங்கியது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஊடகங்கள் நடுநிலைப்போக்கை கடைபிடிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கொக்குவிலைச் சேர்ந்த இளம் யுவதியொருவர் காணாமல் போயுள்ளார் என்று யாழ். பொலிஸ் நிலையத்தில் பெற்றோர் முறையிட்டுள்ளனர். இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

பூனாரி லேன் கொக்குவிலைச் சேர்ந்த யுவதியே கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் வீட்டில் தாயாருடன் இருந்துள்ளார். தாயார் துணி துவைக்க கிணற்றடிக்குச் சென்றுவிட்டு திரும்பிவந்து மகளை அழைத்த போது அங்கு மகள் இல்லாததை அடுத்து தேடிப்பார்த்துள்ளார். எனினும் மகள் கிடைக்கவில்லை என்று நேற்று யாழ். பொலிஸ் நிலையத்திலும், மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறையிட்டுள்ளார். தனது மகள் இளம் யுவதி என்பதால் தாம் பயம் கொள்வதாகத் தாயார் கவலையுடன் தெரிவித்தார். (இ)


# தேவை

## வன்னிப் பிரதேச செய்தியாளர்கள்

**1. கிளிநொச்சி 2. அக்கராயன் 3. பூநகரி 4. முள்ளியவளை 5. முல்லைத்தீவு 6. மல்லாவி 7. துணுக்காய் 8. விசுவமடு 9. மாங்குளம், 10. கனகராயன்குளம், 11. புளியங்குளம் 12. நெடுங்கேணி, 13. வவுனியா 14. மன்னார், 15. மடு**

ஆகிய பிரதேசங்களிலிருந்து தினமுரசு பத்திரிகைக்குச் செய்தியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படுவோருக்கு சிகரம் ஊடக இல்லத்தின் ஊடாக,

1. செய்தி சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல்
2. விற்பனை ஊக்குவிப்பு
3. விளம்பர சேகரிப்பு

ஆகிய துறைகளில் விசேட பயிற்சி வழங்கப்பட்டு, அதிகளவு வருமானம் பெற வழிகாட்டப்படுவதுடன், தேர்ச்சி பெறுபவர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும் இணைத்துக்கொள்ளப்படுவர்.

- ⇨ முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
- ⇨ க.பொ.த. சாதாரணதரம் வரையில் படித்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ளவர்கள், சுருக்கமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையுடன், ஊடகத்துறையில் பணியாற்ற ஆர்வம் கொண்டமைக்கான காரணத்தை விளக்கும் சிறு ஆக்கத்தையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

**வன்னிப் பிரதேச செய்தியாளர்,**
**தினமுரசு,**
**373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**


# நடை பவனிப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்மேளனம் நாடாளாவிய ரீதியில் மேற்கொண்டுவரும் இலவசக் கல்வியைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தைத் தெளிவுபடுத்தும் நோக்குடனும் போராட்டத்திற்கு ஆதரவாகவும், நேற்று யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினால் நடைபயணப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக் காலை பருத்தித்துறையில் ஆரம்பமான நடைபயணப் போராட்டம் நெல்லியடி, அச்சுவேலி, புத்தூர், கோப்பாய், நல்லூர், யாழ்.நகரம் வரை சென்றது. ஒவ்வொரு நகரங்கள் தோறும் இப் பேரணியின் நோக்கம் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. நண்பகல் வேளையளவில் யாழ். நகரை வந்தடைந்த இவர்கள் யாழ் போக்குவரத்துச் சபை பேருந்து நிலையத்திற்கு முன்னால் “அரச கல்வியைக் காப்பாற்று”, “தேசிய கல்விக்குப் பாதுகாப்பு வழங்கு” மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 வீதமாவது அரச கல்விக்கு ஒதுக்கு”, “மூளைசாலிகளின் வெளியேற்றத்தை தடு” “பல்கலைக்கழக கல்வியின் தரத்தை நிலைநிறுத்து”, “பல்கலைகழகங்கள கோமாளிகளின் கூடாரங்கள் அல்ல”, “உறுதியளித்த சம்பள உயர்வை உடனடியாக வழங்கு” என்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு பல்கலைக்கழக ஆசிரியர்கள் பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.



இப்போராட்டத்தின் போது இலங்கையின் பெரிய சாதனைகளில் ஒன்றாகிய, அனைவருக்கும் கிடைக்கக் கூடியதும் தரமானதுமான இலவசக் கல்வி அழிக்கப்படுவதைக் கைகட்டி வேடிக்கை பார்க்கமுடியாது. எமது கோரிக்கைகள் அரசினால் நிறைவேற்றபடும் வரையில் எமது போராட்டம் தொடரும், இது போன்று காலியிலிருந்தும் கண்டியிலிருந்தும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள, கொழும்பு நோக்கி நடைபவனியை ஆரம்பித்துள்ளனர்.

இப்பேரணிகள் வெள்ளிக்கிழமை கொழும்பை வந்தடையவுள்ளன. இதற்கு ஆதரவாக நாமும் இந்த நடைபயணப் போராட்டத்தை மேற்கொள்வதாக யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் இராஜகுமாரன் தெரிவித்தார். நண்பகல் 1.30 மணியளவில் இவ நடைபயணப் போராட்டம் பல்கலைக் கழகத்தைச் சென்றடைந்தது. (பா,இ)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 செப்ரெம்பர் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.